பக்கங்கள்: இருபத்தெட்டு + IV

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 24 திங்கட்கிழமை (07.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 073


03 அபிவிருத்திக்காக வெற்றிபெற வேண்டும்


05 தாக்குதலின்பின் கொழும்பு அரசியல்வாதிகள்


14 தமிழர்களுக்கு நம்பிக்கை வரவில்லை


25 தொடங்கியது கிண்ண வேட்டை


26 அ.தி.மு.க. பிரசாரத்தில் விஜய்

# கிரிமினல்கள் அல்லர் தமிழர்கள்
# ஒளிப்படம் எடுப்பதை நிறுத்துக

## படையினர் செயல் குறித்து கூட்டமைப்புக் கடும்காட்டம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 7

குற்றவாளிகளைத் தேடுகின்றோம் என்ற போர்வையில் மீண்டும் குடாநாட்டில் இராணுவத்தினர் குடும்பங்களைப் புகைப்படம் எடுப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அவ்வாறு செய்வதற்கு தமிழ் மக்கள் ஒன்றும் கிரிமினல் குற்றவாளிகள் அல்லர் என்றும் அது காட்டமாகத் தெரிவித்துள்ளது.

குடாநாட்டு மக்களைப் புகைப்படம் எடுத்துப் பதியும் நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியும் அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று கேட்டுக் கொண்டார். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கட்டளைத் தளபதி விடுத்த பணிப்பினை அடுத்து ஒவ்வொரு பிரிகேட்டும் தத்தமது பிரிவுகளில் தமக்குத் தெரிந்த முறைகளில் அதனை நடைமுறைப்படுத்துகின்றன என்று பலாலி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

யாழ். குடாநாட்டின் தற்போதைய கள நிலைவரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அதில் அவர் தெரிவித்ததாவது:-

(27 ஆம் பக்கம் பார்க்க)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்களைச் சந்தித்து உதவிகளைச் செய்வதற்காக வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு நேரில் செல்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன்.

## 12 லட்சம் பேருக்கு மேல் வெள்ளத்தினால் பாதிப்பு

கொழும்பு, பெப். 07

நாட்டில் 18 மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கோர மழையால் ஏற்பட்ட வெள்ளம், மண் சரிவு ஆகியவற்றால் இதுவரை 3 லட்சத்து 62 ஆயிரத்து, 821 குடும்பங்களைச் சேர்ந்த 12 லட்சத்து 43 ஆயிரத்து, 478 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

669 தற்காலிக முகாம்களில் 67 ஆயிரத்து 508 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 60 ஆயிரத்து 601 பேர்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## இடைநிலைப் பள்ளிகளில் 3 மணி வரை வகுப்புகள்

### திட்டமிடுகிறது கல்வி அமைச்சு

கொழும்பு, பெப். 7

பாடசாலையில் கற்றல் நேரத்தை அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

''1,000 பாடசாலைகள் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் மாலை 3 மணி வரைக்கும் வகுப்புக்கள் நடத்தப்படும்'' - என்றார் அவர்.

1,000 இடைநிலைப் பாடசாலைகளை அனைத்து வசதிகளும் கொண்டவையாகத் தரமுயர்த்துவது என்று அரசு அண்மையில் தீர்மானம் எடுத்திருந்தது. இத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இருந்தும் 100 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இத்திட்டத்திற்கான மாதிரிப் பாடசாலைகள் இரண்டு ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன.

''தெற்காசியப் பிராந்தியத்தில் பாடசாலைகளை

(27 ஆம் பக்கம் பார்க்க)

## 90 வீத வயல்கள் மழையால் நாசம்

கொழும்பு, பெப். 07

வெள்ளம் பாதித்த பகுதிகளில் செய்கை பண்ணப்பட்டிருந்த 90 வீதமான நெற்செய்கை அழிந்து போயுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேயவர்த்தன தெரிவித்தார்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

## உடு துணியை காயப் போடவும் கொழும்பில்தடை

கொழும்பு, பெப். 7

உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெற உள்ள ஆர்.பிரேமதாஸ சர்வதேச விளையாட்டு மைதானத்தைச் சுற்றியுள்ள வீடுகளில் இருப்பவர்கள் துணிகளைக் காயப்போடுவதற்கு கொழும்பு மாநகர சபை அதிகாரிகள் தடை விதித்துள்ளனர்.

இந்த மைதானத்தில் உலகக் கிண்ண ஆட்டங்கள் 7 நடைபெற உள்ளன. இதனை அடுத்தே மைதானத்தைச் சுற்றி உள்ள வீடுகளைச் சேர்ந்தவர்கள் துவைத்த துணிகளை 'பல்கனி'களில் காயப் போட்டு அநாகரிகமாக நடந்து கொள்ளக் கூடாது என்று அதிகாரிகள் இந்த வாரம் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

வெளியே தெரியுமாறு துணிக

(27 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் படுகொலைகளை உடன் நிறுத்துங்கள்; திம்புவில் பீரிஸிடம் வலியுறுத்துவார் கிருஷ்ணா

புதுடில்லி, பெப். 7

இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை படுகொலை செய்கிறது என்ற குற்றச்சாட்டு தமிழகத்தில் பெரும் பிரச்சினைகளைக் கிளப்பி வரும் நிலையில், இன்று பூட்டான் தலைநகர் திம்புவில் தன்னைச் சந்திக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இந்த விடயம் குறித்த தனது கவலையைத் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு திம்புவில் இன்று நடைபெறுகின்றது. அதன் போது இரு நாட்டு அமைச்சர்களும் சந்தித்துப் பேசுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மீனவர் பிரச்சினை குறித்து இலங்கை அமைச்சருடன் ஆராய்வதற்காக, இந்திய வெளிவிவகார அமைச்சில் இலங்கை விவகாரங்களைக் கையாளும் இணைச் செயலாளரான ரி.எஸ்.திருமூர்த்தியையும் அமைச்சர் கிருஷ்ணா தன்னுடன் திம்புவுக்கு அழைத்துச் செல்கிறார்.

அண்மையில் தமிழ் நாட்டு மீனவர்கள் இருவர் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்படும் பிரச்சினையை இந்தச் சந்திப்பில் கிருஷ்ணா எழுப்புவார் என்று புது

(27 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/பக்கங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




மன்னார், யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் மழை பெய்வதற்கான சாத்தியம் உண்டு.

# கொழும்பில் நாளை மறுதினம் ஐ.தே.கட்சி பெரும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப்.07

அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நாளை மறுதினம் கொழும்பில் நடத்தும் பெரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வருமாறு ஜனநாயக விரும்பிகள் அனைவருக்கும் அக்கட்சி நேற்று அழைப்பு விடுத்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. ஜோஸப் மைக்கல் பெரேரா கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் ஜனநாயகம் முற்றாக சீரழிந்துவிட்டது. அதைப் பாதுகாக்க அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மக்கள் நிம்மதியான வாழ்க்கையை எதிர்பார்த்திருக்கின்றனர்.

முடிவுக்கு கொண்டுவர முடியாது என்று கூறப்பட்ட யுத்தத்தை முடித்துத்தந்த மாவீரன் சரத் பொன்சேகா சிறையில் வாடுகின்றார். அவரின் விடுதலைக்காகப் போராட வேண்டியது இந்நாட்டு மக்கள் அனைவரினதும் கட்டாய கடமை.

அரசில் ஊழல், மோசடிகள் அதிகம் இடம்பெறுவதால் அரச நிர்வாகம் ஆட்டம் காணுகின்றது. இதனால் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன.

மூன்று வேளை சாப்பிட்டு வந்த மக்கள் இப்போது இரண்டு அல்லது ஒரு வேளையே சாப்பிடுகின்றனர். மக்களிடம் பணம் இல்லை. அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றத்துக்கு மக்களால் ஈடுகொடுக்க முடியவில்லை.

அரசின் தேர்தல் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்று அரசு தேர்தலில் வாக்குறுதி வழங்கியபோதிலும் அரசு அதை இப்போது நிறைவேற்றத் தவறிவிட்டது மாத்திரமின்றி, அவ்வாறு வழங்குவதாகத் தாம் கூறவில்லை என்றும் ஜனாதிபதி கூறுகின்றார்.

இவ்வாறான காரணங்களை அடிப்படையாக வைத்துத்தான் நாம் கொழும்பில் ஒன்பதாம் திகதி அரசுக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகிறோம். இதில் கலந்து கொள்ள ஜனநாயக விரும்பிகள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் - என்றார்.

(ஒ-சி)

## பொலிஸ் வரவேற்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்.மாவட்டத்தில் இருந்து பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ்ப் பொலிஸாரை வரவேற்கும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் யாழ். மாவட்டச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவிருந்த வரவேற்பு நிகழ்வே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி இடம்பெறும் என்று யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(ஒ-86-323)



மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் படகு மூலம் சமைத்த உணவை வழங்கும் பணியில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் சுவாமி ஞானமயானந்தாஜி தலைமையிலான குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

## கிழக்கில் 3 தினங்கள் விடுமுறை

அம்பாறை, பெப்.7

கிழக்கு மாகாணத்தில் இன்று திங்கட்கிழமை முதல் மூன்று தினங்களுக்குப் பாடசாலைகள் மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டகளில் பெய்துவரும் அடைமழை மற்றும் பெரும் வெள்ளப் பெருக்குக் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் பல பாடசாலைகளில் வெள்ள அகதிகள் தங்கியிருப்பதும் அடைமழை வெள்ளத்தால் மாணவர் வரவின்மையும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

இதன்படி கிழக்கிலுள்ள 16 கல்வி வலயங்களில் 14 கல்வி வலயப் பாடசாலைகள் இன்று முதல் புதன்கிழமைவரை மூடப்பட்டிருக்கும் என்று கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் எம்.ரி.அப்துல்நிஸாம் தெரிவித்தார்.

மகாஓயா, தெஹியத்தகண்டிய ஆகிய இரு வலயப் பிரிவுப் பாடசாலைகள் வழமை போல் இயங்குமெனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கில் அடைமழை தொடர்ந்து பெய்தவண்ணம் இருப்பதால் வெள்ளப்பாதிப்பும் உக்கிரமடைந்தவண்ணமே உள்ளது.

(ஒ-30)

## விலைகளில் வீழ்ச்சி

திருநெல்வேலி, பெப்.7

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், தேசிக்காய் ஆகியவற்றின் விலைகளில் வீழ்ச்சி காணப்பட்டது.

உருளைக்கிழங்கு கிலோ 50 ரூபாவாகவும் பெரிய வெங்காயம் கிலோ 60 ரூபாவாகவும் தேசிக்காய் கிலோ 30 தொடக்கம் 40 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன.

பெரிய வெங்காயம் நனைந்த நிலையில் ஒரு சில வியாபாரிகளால் மேற்படி விலையில் விற்பனை செய்யப்பட்டது.

மரக்கறி விலைகளில் இன்றும் சரிவு இல்லை.

(ஒ-51)

# ஐந்து நாள்களுக்கு நிவாரணம்

கொழும்பு, பெப்.07

மூன்று நாள்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணங்களை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐந்து நாள்களுக்கு தொடர்ச்சியாக வழங்குமாறு அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர பிரதேச செயலாளர்களுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

திருகோணமலை மாவட்டசெயலகத்தில் வெள்ள அனர்த்தம் தொடர்பான உயர்மட்ட கூட்டம் நேற்று பிற்பகல் இடம் பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்

மாவட்ட அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர்ரியர் அட்மிரல் மொஹான் விஜய விக்ரம, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர, நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதி அமைச்சர்களான சுசந்த புஞ்சிநிலமே, எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, எம்.எஸ். தௌபீக் மற்றும் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுற்றுநிருபத்தை காரணம் காட்டாது தேவைப்படும் பட்சத்தில் அரசாங்க அதிபரின் ஆலோசனைக்கமைய மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். - என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# நிகழ்வுகள்

### தலைமைத்துவப் பயிற்சி

வள ஆளணி தொடர்பாக ஜி.ரி.இசட் திட்டத்துக்கமைய மீள் குடியமர்ந்தவர்களுக்குத் தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி இன்று திங்கள் மு.ப. 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை உரும்பிராய் கிழக்கு றோமன் கத்தோலிக்கத் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-311)

### கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.6

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு சகல விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வருடாந்த பிரதேச விளையாட்டு விழாவை நடத்துவது தொடர்பான கலந்துரையாடலின் பொருட்டே இக்கூட்டம் நடைபெறவுள்ளது. (ற-121)

### பயிற்சி

கரவெட்டிப் பிரதேசத்தின் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வல்வெட்டி தர்மகுலசிங்கம் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் கரவெட்டிப் பிராந்திய சபைத் தலைவர் கொ.குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியானது நிதி தொடர்பாக அறிவும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களும் எனும் தொனிப்பொருளில் இடம் பெறவுள்ளது.

### கிளை திறப்பு

'டச் வூட் இன்வெஸ்ற்மன்ட்ஸ்' நிறுவனத்தின் கிளை நிறுவனம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு இல.207 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா, மடு பாடசாலைகளுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம், பெப்.7

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக பல்வேறு பகுதிகளிலும் பாடசாலைகள் இன்று முதல் தற்காலிக மாக மூடப்படவுள்ளன.

மடு வலயப் பாடசாலைகள் நாளை மறுதினம் புதன் கிழமைவரை நடைபெறமாட்டாது என்று மடுவலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்,

வெள்ளம் காரணமாக பாடசாலைகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் பல வீதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் பிரதேச மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனை கருத்தில்கொண்டே இந்த வலயப் பாடசலைச் செயற்பாடுகள் நாளை மறுதினம் வரை இடைநிறுத்துவதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.எஸ். செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா வலயப் பாடசாலைகளுக்கும் நாளைமறுதினம் வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் பி.எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

(ஒ-10-135)

### ஜனாதிபதி கூறுவதெல்லாம் பொய்

# அழிந்த பிரதேசங்களைக் கட்டியெழுப்ப தேர்தலில் பெரு வெற்றி ஈட்ட வேண்டும்

## பண்டத்தரிப்பில் வேட்பாளர் மத்தியில் சங்கரி உரை



யாழ்ப்பாணம், பெப்.7

உள்ளூராட்சித் தேர்தல்களில் அனைத்துப் பிரதேச சபைகளையும் கைப்பற்றுவதன் மூலம் அழிவடைந்த எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப முடியும். அது மட்டுமன்றி அபிவிருத்தி நோக்கியும் பயணிக்க முடியும்.

உள்ளூராட்சித் தேர்தலில் வலி.மேற்குப் பிரதேச சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்களை பண்டத்தரிப்பில் சந்தித்த போது சங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்றைய நிலையில் தமிழ் மக்கள் பிச்சையெடுக்கும் சூழலையே இந்தஅரசாங்கம் உருவாக்கியுள்ளது. யுத்தத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டன. இப்பகுதியில் ஒரு சில பகுதிகளிலேயே மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மக்களுக்கு அதைக் கட்டிக் கொடுக்கிறோம், இதைக்கட்டிக் கொடுக்கிறோம் என மக்களை ஏமாற்றி வருவதுடன் உலக நாடுகளையும் ஏமாற்றி வருகிறது அரசு.

அண்மையில் வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் தெரிவிக்கையில் ''தமிழ் மக்களுக்கு வீடுகளையோ அல்லது ஒரு கிராமத்தையோ நாம் கட்டிக் கொடுக்க முன்வரும்போது இந்த அரசாங்கம் நாம் கட்டிக் கொடுக்கிறோம் பணத்தைத் தாருங்கள் என்றது. இவ்வாறான நிலையில் நாம் என்ன செய்ய முடியும்'' என்று கூறியுள்ளனர்.

வெளிநாடுகளின் உதவியுடன் ஒருசிலவற்றைக் கட்டிக் கொடுக்கின்ற போது அதை தாங்கள் கட்டியதாக விளம்பரப் படுத்துகிறார்கள். யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதும் ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரையிலான ஏ9 வீதி மற்றும் ஏ35 வீதி முல்லைத்தீவு கிளிநொச்சி பிரதான வீதிகள் எங்கேயாவது புனரமைப்புக்கென கற்கள் பறிக்கப்பட்டுள்ளனவா? இவற்றைச் செய்யாது வடக்கில் வசந்தம் வீசுகிறது என அரசாங்கம் தெரிவிக்கிறது. இங்கு வசந்தம் அல்ல-புயலே வீசுகிறது.

ஜனாதிபதியை தமிழ் கட்சிகளின் அரங்கத்தினூடாக இறுதியாகச் சந்தித்தபோது நாம் கேட்டோம் பயங்கரவாதம் அழிக்கப்பட்ட போது நிர்மூலமாக்கப்பட்ட பகுதிகளை நாம் மீளவும் கட்டித்தருவோமென தெரிவித்தீர்கள் இதனைச் செய்யலாமெனக் கேட்டோம் அதற்கு எனது தேர்தல் பிரசாரம் தானே அது எனப் பதிலளித்தார். இவ்வாறான ஜனாதிபதி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வைத் தருவார்?

இன்றைய சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பல கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. இந்த இணைவு தொடர்ந்து நீடிக்கும். எனவே இந்த உள்ளூராட்சித் தேர்தலில் நாம் கட்சி பேதங்களை மறந்து ஒருமித்த குரலாகப் போட்டியிட்டு அனைத்துப் பிரதேச சபைகளையும் வென்றெடுப்போம்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் கண்ணிவெடி அகற்றுவதற்கு வெளிநாடுகளில் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் மக்களின் உதவிகள் இல்லாது இதனை எவ்வாறு செய்ய முடியும்? படையினரைச் சந்திக்குச் சந்தி நிறுத்தி வைத்து பயங்கரவாதம் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கே அரசாங்கம் இவ்வாறான செயல்களைச் செய்கிறது. எமக்கு கட்டடங்கள் தேவையில்லை, எமக்கு நிம்மதியான வாழ்க்கையே தேவை எனத் தெரிவித்தார். (ஒ)



கனகராயன் ஆற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளதால் இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 32 அடி 6 அங்குலத்தை கடந்த நிலையில் அனைத்து வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளது.

## வடக்கு, கிழக்கில் காணாமற்போனோருக்கு மரணச் சான்றிதழ் வழங்க ஏற்பாடாம்

கொழும்பு, பெப்.07

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமல்போன மற்றும் உயிரிழந்தவர்களுக்கான மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த அல்லது காணாமல் போனவர்களின் உறவினர்கள் இந்தச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும் எனப் பதிவாளர் நாயகம் ஈ.எம். குணசேகர தெரிவித்துள்ளார்.

அருகில் உள்ள பிரதேச செயலகங்களின் ஊடாகத் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போலியான ஆவணங்களையோ அல்லது மோசடியான நோக்கங்களுக்காகவோ விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கக் கூடாது என்றும், மோசடியில் ஈடுபடுவோருக்கு ஐந்து ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காணாமல்போன மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தார் விடுத்த கோரிக்கையை அடுத்து பொதுநிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்னவினால் தற்காலிக இறப்புச் சான்றிதழ் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. விண்ணப்பிக்க விரும்புவோர் ஆவணங்களுடன் சத்தியக்கடதாசி ஒன்றையும் இணைத்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

# புலிகள் வடக்கில் தொடர்ந்தும் செயற்படும் சாத்தியம் உண்டு

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

கொழும்பு, பெப்.7

வடக்கில் புலிகள் தொடர்ந்தும் செயற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகளவில் உள்ளன. வேறு அரசியல் கட்சிகளில் பின்னால் இருந்து அவர்கள் அரசியல் ரீதியாக இயங்க முடியும்.

- இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொழும்பு ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் செவ்வியில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ருத்தித்துறையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் கொல்லப்பட்ட சம்பவம் எதிர்பாராத ஒன்று எனக்குக் கிடைத்த தகவல்களின் படி இது அரசியல் ரீதியான உள்நோக்கம் கொண்ட ஒரு சம்பவம்.

பாதுகாப்புடன் தொடர்புடைய அதிகாரிகளிடம் இது தொடர்பாக ஏற்கனவே நான் முறையான விசாரணைகளை நடத்துமாறு கேட்டுள்ளேன். அவர்களின் பதிலுக்காக காத்திருக்கிறோம்.

வடக்கில் புலிகள் தொடர்ந்தும் செயற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகளவாகவே உள்ளன. வேறு அரசியல் கட்சிகளின் பின்னால் இருந்து அவர்கள் அரசியல் ரீதியாக இயங்கமுடியும்.

ஆனால் அவர்களால் வெளிப்படையாகவோ அல்லது இராணுரீதியாகவோ இனிமேல் செயற்பட முடியாது என்று நான் உறுதியாக நம்பவில்லை. வேறு அரசியல் கட்சிகளின் ஊடாக அவர்கள் பலத்தைக் காட்ட முனையலாம்.

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு ஊடகங்கள் என்மீது குற்றம் சாட்டின. ஆனால் அது எனது தவறல்ல. அது மொழிபெயர்ப்பினால் ஏற்பட்ட தவறு. ஒரு தொழில்நுட்பத் தவறு.

இது தொடர்பாக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுவருகின்றோம். என்று அவர் கூறியுள்ளார். (ஒ)

## நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை, பெப்.7

யுத்தத்தினால் சேதமடைந்த வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் நான்கு கடைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தக் கடைகள் புனரமைப்பதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ்9.1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-190)

## புனரமைப்பு

குருநகர், பெப்.7

குருநகர் கடற்கரை வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபை யால் அகலப்படுத்தப்பட்டுவருகின்றன.

குருநகர் பிரதேச வைத்தியசாலை முன்பாக உள்ள இவ்வீதி தெற்குப்புறமாக குருநகர் தண்ணீர் தாங்கிவரையிலும் புனரமைக்கப்பட்டுவருகின்றது (ஒ-51)

# வன்னி மக்களை வஞ்சிக்கிறது இயற்கையும்



இறுதிக் கட்டப்போரில் பெரும் பாதிப்பினை எதிர்கொண்ட வன்னி மக்கள் தமது காயங்கள் ஆற முன்னரே மீண்டும் ஒரு வலியினைச் சுமந்து நொந்து போய் இருக்கின்றார்கள்.

கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழை அவர்களை மீண்டும் துயரத்துக்குள் தள்ளிவிட்டுள்ளது; பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கிறது.

சொல்லொணாத் துயரங்களை மனதுக்குள்ளே புதைத்து வெளியே சொல்ல முடியாமல் வாழ்நாளினை நகர்த்தும் இந்த மக்களின் வாழ்க்கை சாண் ஏற முழம் சறுக்கிய கதையாகின்றது. மழை வெள்ளமானது இந்த மக்களின் மடங்களை மட்டுமல்ல மனங்களையும் உடைத்துள்ளது.

வெள்ளத்தால் தூக்கிச் செல்லப்பட்ட தறப்பாளினால் ஆன அவர்களின் கூடாரங்கள் அவர்கள் மனங்களில் எஞ்சியிருந்த நம்பிக்கையையும் அசைத்துப் பார்க்கிறது.

போரினால் இழந்த இழப்பைத் தொடர்ந்து கடும் மழையினால் ஏற்பட்ட இழப்புக்கள் வன்னி மக்கள் கையிலிருந்த திருவோட்டையும் பிடுங்கிய கதையாக்கிவிட்டது. வரலாறு காணாத மழையால் நாடு முழுவதும் 10 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வன்னியில் சுமார் ஒரு லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்துக் குளங்களும் நிரம்பி வழியும் தறுவாயில் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. குளங்களுக்கு அருகில் இருக்கின்ற மக்கள் இடம் பெயர்ந்து வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளதால் அடிப்படை வசதிகள் இன்றிக் கஷ்டப்படுகின்றனர்.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வீதிகளை ஊடறுத்து வெள்ளம் பாய்வதால் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

கொட்டித் தீர்த்த கனமழை எப்போது ஓயும் என்று தெரியவில்லை. கிளிநொச்சி இரணைமடுக்குள வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அதன் வாய்க்கால் பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குப் பெயர்ந்துள்ளனர். கோயில்கள், பொது மண்டபங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 குளங்களின் வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் இதனால் 7ஆயிரத்து 521 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

வவுனிக்குளம், முத்தையன் கட்டுக்குளம், உடையார்கட்டுக்குளம் போன்ற பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு பிரிவைச் சேர்ந்த குடும்பங்களே மேலும் பாதிப்படைந்துள்ளன. அளம்பில் பகுதியில் 353 குடும்பங்கள், புதுக்குடியிருப்பில் 224 குடும்பங்கள் பாடசாலைகளிலும் கோயில்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டமே வடக்கில் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. இடைத்தங்கல் நலன்புரி நிலையங்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்து கொண்டது. 60 ஆயிரம் பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்றும் 747 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் எனவும் 667 வீடுகள் முற்றாகச் சேதம் அடைந்துள்ளதாகவும் உத்தியோகபூர்வ புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

வவுனியாவில் சின்னத்தம்பனை, கந்தசாமிநகர், தட்டாங்குளம் ஆகிய பகுதிகளுக்கான வெளித்தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டில் பெய்த மழையால் இதுவரையில் 7 பேர் பலியாகியும் மேலும் 7பேர் காணாமல் போயினர். என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார். யாழ்.குடாநாட்டில் அவசர கால நிலைமை நடைமுறைப்படுத்தப்படாத போதும் தொடர்ச்சியாக இப்போது இருந்த காலநிலையே தோன்றும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

– எஸ்.குமார் –

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடுத்த ஆறு மாதங்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டி இருக்கிறது என்று ஐ.நா.கூறுகின்றது. ஆனால் ஏற்கனவே தாம் இழந்த வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கே உதவிகள் இன்றித் தவிக்கும் வன்னி மக்களுக்கு உதவப் போகிறவர்கள் யார்?

31ஆம் நினைவு நாள் கிரியை அழைப்பு

அமரர்
செல்லப்பா சுப்பிரமணியம்
(மணியப்பா)

மண்ணில் 23.06.1921
விண்ணில் 08.01.2011



உதயன் வரும் வேளை உள்ளம் மகிழ்வீர்கள்
வலம்புரி வரும்போது வழிமேல் விழி பார்க்கும்
தினக்குரலாய் உங்கள் குரலொலிக்க
மணியப்பா வீட்டில் அரசியலரங்கம்!
அடேயப்பா அத்தனை உறவுகளும் அன்றாடம் உறவாடி
அகம் மகிழ்ந்த காலமெல்லாம் கனவாகிக் போனதுவோ?
மணியப்பா மறையவில்லை!
என்றும் எங்களுடன்!

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் புலோலி மேற்கு தெணியம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ள மடத்தில் இன்று (07.02.2011) திங்கட்கிழமை காலை 6மணிக்கு நடைபெறும். தொடர்ந்து அவரது இல்லத்தில் நண்பகல் நடைபெறுகின்ற சபிண்டீகரணக் கிரியைகளை அடுத்து மதியபோசனத்திலும் தாங்கள் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் செல்லப்பா சுப்பிரமணியத்தின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்திய அனைத்து உள்ளங்களுக்கும் இன்றைய அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளும் உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

வடலித்தோட்டம்,
தம்பசிட்டி, பருத்தித்துறை.

உதயன்

# உள்ளூராட்சித் தேர்தல் இங்கே, சட்டமன்றத் தேர்தல் அங்கே!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் இங்கு மும்முரமடைந்துள்ள வேளையில் இந்தியாவிலும் மாநில சட்ட மன்றங்களுக்கான தேர்தல் தடபுடல்கள் களைகட்ட ஆரம்பித்துள்ளன. குறிப்பாக தமிழ் நாட்டில் தேர்தல் 'ஜுரம்' கட்சிகளை ஆட்டிப்படைக்கத் தொடங்கியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் பெருமளவில் நிராகரிக்கப்பட்டுள்ளமையால் பல்வேறு கட்சிகளும் நீதிமன்றங்களிடம் நியாயம் கேட்டு வழக்குகளைத் தாக்கல் செய்துவருகின்றன. இந்த வழக்குகள் உரியகாலத்தில் விசாரணைக்குள்ளாகி தீர்ப்புகள் வழங்கப்படாதவிடத்து தேர்தல்களும் பிற்போடப்படக் கூடிய நிலைமை ஏற்படலாம். அல்லது நிராகரிக்கப்பட்டமை தேர்தல் சட்டங்களுக்கு மாறான செயல் என தீர்ப்புவந்தாலும் சிக்கலான ஒரு நிலைமைதோன்ற இடமுண்டு. அம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில் தேர்தல்கள் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படலாம் - அல்லது ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர் பட்டியல்களே ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அறிவிக்கப்படலாம்.

இவையெல்லாம் நீதிமன்றங்கள் வழங்கப்போகின்ற தீர்ப்புகளைப் பொறுத்தே அமையும். அத்துடன் நீதிமன்றத் தீர்ப்புகளை மீண்டும் எதிர்த்து மேல் முறையீடு செய்யக் கூடிய நிலைமையும் உண்டு.

ஆக, உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் திட்டமிட்டபடி மார்ச் 17ஆம் திகதி நடைபெறுமா அல்லது தொடர்ந்து இழுபறிக்கு உள்ளாகுமா என்பது இனிமேல்தான் தெரியவரும்.

எதுவானாலும் வடக்கு - கிழக்கை பொறுத்தவரை வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் அதிகம் அக்கறைகாட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. பொதுவில் சமீபகாலத்தில் பொதுத்தேர்தல், பின் ஜனாதிபதித் தேர்தல் இப்பொழுது உள்ளூராட்சித் தேர்தல் என்று வந்தமையால் மக்கள் சலிப்படைந்துபோயுள்ளார்கள். இந்தத் தேர்தலின் பின்னராவது ஏதோ பெரிதாக கிடைக்கப்போகிறது என்பது மக்களுக்கு வெளிச்சமாகவேண்டும் - அப்படியொன்றும் இல்லாதவிடத்து தேர்தலில் அவர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொள்வது சாத்தியமில்லை.

எவ்வாறாயினும் மக்கள் எந்த அளவில் இத்தேர்தலில் அக்கறை கொள்கிறார்கள் என்பது இனிவரும் நாள்களில் தான் தெரியவரும்.

இங்குள்ள நிலைமைக்கு நேர்மாறாக தமிழ் நாட்டில் சட்டமன்றத் தேர்தல் மும்முரமடைந்துள்ளது.

அங்கு சினிமா காலசாரம் என்பது ஒரு சாபக்கேடாக தமிழ் நாட்டு மக்களை பீடித்துள்ளது. ஆரம்ப காலம் முதல் தமிழ் சினிமாவையே ஒரு பிரசார அமைப்பாகப் பயன்படுத்திக்கொண்டு அரசியல்பயணத்தை மேற்கொண்டவர் இப்பொழுது தமிழ்நாடு முதலமைச்சராக இருப்பவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் மு.கருணாநிதி அரசியலிலும் தமிழ் சினிமாவிலும் கொட்டைபோட்டு பழம்தின்ற அனுபவசாலி அவர். தேர்தலின்போது தமிழ் நாட்டு மக்களை எந்தக் கோணத்தில் அணுகவேண்டும், எவ்வாறு அவர்களின் வாக்குகளைப் பெறவேண்டும் என்பதெல்லாம் அவருக்கு அத்துபடி. சென்ற தேர்தலில் அரிசிவிலை குறைப்பையும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியையும் காட்டி அபரிமிதமான வெற்றியைப் பெற்றார். அதே விதமான புதிய அறிவிப்பு எதனையும் அறிவித்து தமிழ் நாட்டு மக்களை ஈர்ப்பதற்கான திட்டம் அவரிடமிருக்கலாம் - நிற்க -

எதிர்த்தரப்பில் கருணாநிதிக்கும் அவரது கூட்டணிக்கும் சவால் விடும் நிலையில் இருப்பவர் செல்வி ஜெயலலிதா ஆவார். தமிழ் சினிமாவில் பிரபல நடிகையாகவிருந்து அரசியலுக்குவந்தவர் - மக்கள் ஆதரவைப்பெற்றிருந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆருக்குப்பிறகு அவரது செல்வாக்கில் கட்சித்தலைமையையும் முதல்வர் பதவியையும் பெற்றிருந்தவர். நிர்வாக ஊழல்கள் காரணமாக பதவியிலிருந்து இறக்கப்பட்டவர். அவர் மீதான ஊழல் வழக்குகள் இன்னமும் நிலுவையில் உள்ளன.

தி.மு. க. தரப்பிலும் செல்வாக்குமிக்க நடிகர், நடிகைகள் பிராசாரத்தில் ஈடுபடத் தயாராக இருக்கிறார்கள் அதேபோல் அ.இ.தி.மு.க. தரப்பிலும் பிரபலமான நடிகர்கள் களத்தில் இறங்கவிருக்கிறார்கள் விரைவில் விஜய் போன்ற இளம் நடிகர்களும் அவர்களுடன் சேர்ந்து கொள்ளும் வாய்ப்பிருக்கிறது.

இந்த நிலையில் சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சிக்கும் தி.மு.க. கூட்டணிக்கும் இடையில் உட்பூசல் தோன்றியிருப்பதாக தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கூட்டணி பலமாகத்தான் இருக்கவேண்டும். ஆனால் தங்களுக்கு முன்பைவிட அதிகமான ஆசனங்களை விட்டுத்தரவேண்டும் என காங்கிரஸார் விரும்புவதாகத் தெரிகிறது.

தி.மு.கவுக்கு இருக்கும் செல்வாக்கை குறைக்கும் வகையிலேயே அக்கட்சிப் பிரமுகரும் முன்னாள் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சருமான ராசா ஸ்பெகட்ரம் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. காங்கிரஸிற்கு அதிக இடம் வழங்கப்படாவிடில் மேலும் சில சிக்கல்கள் தி.மு.கவுக்கு ஏற்படலாம். இதனை எவ்வாறு கலைஞர் சமாளிக்கப்போகிறார் என்று கட்சித் தொண்டர்களும் வாக்காளர்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தி.மு.கவுக்கு இப்படியானதொரு சிக்கலை ஏற்படுத்துவதில் சோனியாவின் புதல்வரும் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளருமான ராகுல் காந்தியே பின்னணியில் இருந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.


இதற்கிடையில் இலங்கை இனப்பிரச்சினையில் அதிக அக்கறை காட்டிக்கொள்பவரான வைகோ போன்றோர் அ.இ.தி.மு.கவுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழ் நாடு அரசியல்களத்தில் பேசப்படும் ஒருவிடயமே தவிர தேர்தலில் வாக்குபலத்தைத் தீர்மானிக்கும் விடயமாக இருந்ததில்லை. என்றாலும் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை அதன் காரணமாகவே சமீபத்தில் தமிழ் நாட்டுக்குவந்திருந்த ராகுல்காந்தியும் கூட இலங்கைத் தமிழர் விடயத்தில் அதிக கரிசனை இருப்பதாகக் காட்டியிருந்தார்.

தமிழ் நாட்டில் இப்பொழுது தான் தேர்தல் களம் களைகட்ட ஆரம்பித்திருக்கிறது. எந்தக் குழுவில் எவர் இணைகிறார் எந்தக் கூட்டணி வலுப்பெறப்போகிறது என்பதெல்லாம் இனிமேல் தான் தெரியவரும்.

என்ன நடந்தாலும் இம் முறை தமிழ் நாடு சட்டமன்றத் தேர்தல்களம் முன்னரைவிட மிகவும் விறுவிறுப்பாகவும் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் இருக்கப்போகிறது. இறுதிநேரத்தில் திடீர் மாற்றங்களும் கட்சி தாவல்களும் பல்டிகளும் - வேடிக்கை விநோதங்களுக்குக் குறைவிருக்காது.

# தாக்குதலின் பின்னணியில் கொழும்பு அரசியல்வாதி

## கரு குற்றஞ்சாட்டுகிறார்



சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தன்று ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில் கொழும்பைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதி ஒருவர் உள்ளார் என்று ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நேற்று கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் ஜனநாயக விரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றபோது அவற்றுக்கு எதிராகப் போராடுவது எமது கட்சியின் கடமை. இந்த நாட்டில் முழுமையான ஜனநாயகத்தை விரும்புகிற - ஜனநாயக ரீதியில் ஆட்சி நடத்திய ஒரு கட்சி என்ற வகையில் நாம் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடுகிறோம்.

இந்த நாட்டில் 30 வருடங்களாக இருந்து வந்த பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டப் பாடுபட்ட சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டமை வரவேற்கத்தக்க ஒன்றல்ல. இவரின் விடுதலைக்காகப் போராடுவது அனைவரினதும் கடமை.

அந்த வகையில்தான் நாம் சுதந்திர தினத்தன்று அவரின் விடுதலைக்காக ஆர்ப் பாட்டப் பேரணி நடத்தினோம். நாட்டில் ஜனநாயகத்தை அழிக்கப்படுவதை விரும் புகிறவர்கள் எமது போராட்டம் மீது தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் கொழும்பைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதி ஒருவர் இருக்கின்றார். நாம் இவ்வாறான தடைகளைப் பார்த்து பின்வாங்கமாட்டோம்.

காடையர்கள் எம்மீது தாக்குதல் நடத்திவிட்டு சுதந்திரமாகச் செல்லும்வரை பொலிஸார் பார்த்துக்கொண்டு நின்றனர். இதைக் கட்டுப்படுத்த வேண்டிய; எமக்குப் பாதுகாப்பு தரவேண்டிய பொலிஸார் இப்படி மௌனமாக நின்றமை எமக்குக் கவலையளிக்கின்றது - என்றார்.

(ஓ-சி)

# தேர்தல் வன்முறைகளில் 11 பேர் கைது

கொழும்பு, பெப்.07

உள்ளூராட்சி சபைத் தேர்தல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 11 சந்தேக நபர்கள் இதுவரை நாடளாவிய ரீதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தேர்தல் செயலக பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண நேற்றுக் கூறினார்.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாகவும் மூர்க்கத்தனமாகச் செயற்பட்டமை தொடர்பாகவுமே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று காமினி நவரட்ன மேலும் கூறினார்.

கடந்த தேர்தல் காலங்களை விட இப்போது தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறைவாகவே கிடைத்துள்ளன என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறினார்.

தேர்தல் சட்டங்களை வேட்பாளர்களுக்குப் புகட்டும் பொலிஸாரின் விசேட வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களின் வழிகாட்டலின் ஊடாக இன்றும் தொடர்கிறது என்று காமினி நவரட்ன சொன்னார். (இ-07)

## பழைய கொடுப்பனவு வழங்கப்படாமையால்

# நிவாரணப் பொருள்களை கொள்வனவு செய்யத் தயங்கும் அரச அதிகாரிகள்

## சாடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, பெப். 07

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கடந்த காலங்களில் பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள் போன்ற அரச அதிகாரிகள் கொள்வனவு செய்த பொருட்களுக்கான கொடுப்பனவை அரசு வழங்கவில்லை. இதனால் தற்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்க பொருட்களை வாங்க அரச அதிகாரிகள் தயங்குகின்றனர் என்று ஜே.வி.பி. குற்றஞ் சாட்டியுள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை பத்தரமுல்ல, பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. அக் கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி தொடர்ந்து கூறியவை வருமாறு:-

2006ஆம் ஆண்டு மாவிலாறு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கந்தளாய் பிரதேச மக்களுக்கு வழங்கவென கொள்வனவு செய்த பொருட்களுக்கு செலுத்த வேண்டிய ஐந்து லட்சம் ரூபா பணம் இன்னும் செலுத்தப்படவில்லை எனத் தெரியவருகிறது. இதனால் நிவாரணம் வழங்க அரச அதிகாரிகள் தயங்குகின்றனர்.

பல மாவட்டங்கள் குறுகிய காலத்தில் இரண்டாவது முறையும் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் விஜித ஹேரத் எம்.பி தெரிவித்தார்.

(ஓ-சி)

# பிராக் மாநாட்டுக்கு ரணில் செல்கிறார்

கொழும்பு,பெப்.7

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செக்கோஸ்லாவியில் பிராக் நகரில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஜனநாயக கவுன்சிலின் நிர்வாகிகள் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக செல்லவிருக்கிறார். இந்தக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிக்கவிருக்கிறது.

மூன்று நாள்கள் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் முன்னாள் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மார்கரட் தட்சர், முன்னாள் ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹாவார்ட், முன்னாள் ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோல் மற்றும் முன்னாள் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கொன்சர் வேடிவ் தத்துவங்களின் ஆதரவாளர்களான முன்னாள் அதிபர்கள், பிரதமர்கள் மற்றும் சில நாடுகளில் தற்போது பதவியில் இருக்கும் சில அமைச்சர்கள் ஆகியோர் இந்த அமைப்பில் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

(ப)

# குடாநாட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய எத்தனை பேர் இதுவரை தண்டிக்கப்பட்டனர்

## விவரங்களை வெளியிடுமாறு கோருகிறார் சுரேஷ் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ். மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற படுகொலைகளுடன் தொடர்புடைய நபர்கள் எத்தனைபேர் கைது செய்யப்பட்டுள்ளனர் அல்லது தண்டிக்கப்பட்டுள்ளனர் என்ற விவரத்தை பொது மக்களுக்கு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி வழங்க வேண்டும்.

அப்போது தான் பொது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் எனக் குறிப்பிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

யாழ். நகரிலுள்ள கூட்டமைப்பின் மாவட்ட அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

அவற்றில் வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவலிங்கத்தின் படுகொலைக்கு காரணமான சூத்திரதாரி தவிர ஏனையவற்றின் சந்தேக நபர்களைத் தாம் இணங்கண்டுவிட்டதாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்ததாக பத்திரிகை செய்திகள் மூலமாக அறிந்தேன்.

இராணுவத் தளபதி கூறுவது போல் அவ்வாறு இனங்கண்டால் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனையைப் பெற்றுக் கொடுப்பது பாதுகாப்பை நிலை நிறுத்துபவர்களது கடமையாகும்.

மக்களுக்கு உண்மை எது எனத் தெரிய வேண்டும். இது மூடி மறைக்க கூடிய விடயமல்ல.

எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், அல்லது எத்தனை பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி வெளிப்படையாக பொது மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும்.

அப்போது தான் அவரது கூற்றில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.

அதை விடுத்து வாயால் யாரும் எதனையும் சொல்லலாம். ஆனால் மக்கள் நம்பக் கூடிய விதமாக நடந்து காட்டுவது மிகவும் அவசியமானதாகும் - என்றார். (ம-14)

## மீனின் விலை அதிகரிப்பு

பருத்தித்துறை, பெப்.7

வடமராட்சியில் மீனின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது. ஒரு கிலோ மீன் 600 ரூபா தொடக்கம் 800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

கடல் கொந்தளிப்பினால் மீனவர்கள் கடலுக்குச் செல்லாததாலேயே மீனின் விலை உயர்ந்துள்ளது.

குடாக் கடலில் பிடிக்கப்படும் மீனே குறைந்தளவில் இங்கு கொண்டுவரப்பட்டு விற்பனைசெய்யப்பட்டுவருகின்றது.

அண்மைக்காலமாக மீனின் விலை சடுதியாகக் குறைவடைந்திருந்த போதும் தற்போது உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-190)

## நுளம்பை ஒழிக்கும் மருந்து பாடசாலைகளில் விசிறல்

பருத்தித்துறை, பெப்.7

பருத்தித்துறையிலுள்ள பாடசாலைகளுக்கு நுளம்பினை ஒழிக்கும் மருந்துகள் வீசப்பட்டு வருகின்றன.


புலோலி உபய கதிர்காமத்திலுள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள ஒருவருக்கு மலேரியா நோய் இருப்பது பரிசோதனையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அந்த பகுதியைச் சூழவுள்ள இடங்களிலும் நுளம்பினை ஒழிக்கும் மருந்துகள் வீசப்பட்டுள்ளன.

குடாநாட்டில் இடையிடையே பெய்யும் மழை காரணமாக பாவனையற்றுக் கிடக்கும் காணிகள் பற்றைக் காடாகக் காட்சியளிக்கின்றன.

இந்த நிலையில் இதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-190)

## வடக்கே புதிய வருகை...



நெடுந்தீவு - குறிகாட்டுவான் கடல் போக்குவரத்துச் சேவையில் இணைந்து கொள்வதற்காக கொழும்புத்துறைமுகத்தில் இருந்து புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கும் புதிய படகு வடதாரகை II. (7)

## படையினரின் ரோந்து நடவடிக்கை

கொடிகாமம், பெப்.7

வரணி பிரதேசத்தில் படைத் தரப்பினர் இரவு வேளைகளில் பிரதான வீதிகளில் ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இரவு வேளையில் இப் பகுதி வர்த்தக நிலையங்கள் மற்றும் சில வீடுகளில் களவுகள் இடம் பெற்றுள்ளமை காரணமாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டது.

பருத்தித்துறை - வரணி பொது வீதியிலும் முன்பு அகற்றப்பட்ட இரு காவல் அரண்களும் மீண்டும் அந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்கள் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே சில பிரிவுகளில் இவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (ம-122)

## கிராம மட்ட முதியோர் சங்கங்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

நாவற்குழி, பெப்.7

கிராம மட்ட முதியோர் சங்கங்களை பிரதேச செயலகங்களில் பதிவு செய்யுமாறு முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் திருமதி ஜே. கிருஷ்ணமூர்த்தி அறிவுறுத்தலை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்

கிராம மட்டத்தில் முதியோர் சங்கம் இதுவரை அமைக்கப்படவில்லையாயின் அவற்றை அமைக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

பதிவு செய்யப்படும் முதியோர் சங்கங்களுக்கு வழங்கப்படக் கூடிய நிதி உதவிகளின் தன்மை பற்றியும் தெரிவித்துள்ளார்.

முதியோர்கள் தமது நலன்களைப் பேணவென முதியோர் சங்கங்களை அமைப்பதன் மூலம் நன்மைகளைப் பெறுமாறும் ஆலோசனை கூறும் சுற்று நிருபத்தையும் அனுப்பிவைத்துள்ளார். (ம-121)

## மின் தாக்கி பெண்ணுக்கு எரிகாயம்

தென்மராட்சி,பெப்.7

தொலைக்காட்சிப் பெட்டிக்கு மின்னிணைப்புப் பெற முயன்ற பெண் மின்சாரம் தாக்கியதில் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் மந்துவில் இடம்பெற்றது.

இதேயிடத்தைச் சேர்ந்த எஸ்.சசி (வயது -28) என்னும் பெண் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-207)

## கழிவுநீர் வாய்க்காலுக்கு தடுப்புச் சுவர் இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சுண்டுக்குளி விதானையார் வீதியில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதனால் இந்த வீதியால் பயணம் செய்வோர் விபத்துக்களைச் சந்திக்கும் நிலைக்கு உள்ளாகி இருப்பதாகப் பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வீதியில் உள்ள கழிவு நீர் ஓடும் வாய்க்கால்கள் அதன் அருகே தடுப்புச் சுவர்கள் கட்டப்படாமல் வீதியோடு வீதியாக இருக்கின்றது.

இரவுவேளைகளில் பயணம் செய்வோர் கழிவுநீர் வாய்க்கால் பகுதியை வீதி என நினைத்து தவறுதலாக அதில் வீழ்ந்து விபத்துக்களையும் ஆபத்துக்களையும் சந்திக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது.

### விபத்துக்களை எதிர்நோக்கும் மக்கள்



இந்த நிலை மிக நீண்டகாலமாகவே இருப்பதாகவும் இது சம்பந்தமாகப் பலமுறை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியபோதும் அவர்கள் இது வரை எதுவித நடவடிக் கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் இனியாவது உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நடவடிக்கை எடுப்பார்களா என்று கேள்வியெழுப்பப்படுகிறது. (ம-288)

## வாகன வரி செலுத்துவதில் தென்மராட்சி மக்கள் நாட்டம்

தென்மராட்சி, பெப்.7

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் 5 ஆயிரத்து 100 மோட்டார் வாகனவரி செலுத்தப்பட்டுள்ளது. இந்த வருடம் வாகன வரி செலுத்துவதில் மக்கள் நாட்டம் காட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதத்தில் உள்ள 20 வேலை நாள்களில் பிரதேச மோட்டார் போக்குவரத்துப் பிரிவினரால் வாகன வரிக்கான கட்டணம் அறவிட்டு அனைத்து வாகனங்களுக்குரிய அனுமதிச் சான்றிதழ் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் மட்டும் 60 சதவீதமான வாகனங்களுக்கு வரி செலுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த மாத இறுதிக்குள் பிரதேச எல்லைக்கு உட்பட்ட 100 சத வீதமான வாகன வரி செலுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)

## பாதீனியம் அழிப்பு

நாவற்குழி, பெப்.7

'சொனட்' நிறுவனத்தின் நிதி உதவியில் கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் பாதீனியங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு நடவடிக்கையாக இராச வீதியிலுள்ள பாதீனியக் களைகளை அழிக்க மருந்து விசிறப்பட்டுள்ளது.

'சொனட்' தொடர்ந்து பாதீனியம் அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-121)

## கைதடி - கோப்பாய் வீதியில் பெரிய குழி போக்குவரத்துச் செய்வதில் நெருக்கடி

யாழ்ப்பாணம், பெப்.7

கைதடிச் சந்திக்கும் கோப்பாய்ச் சந்திக்கும் இடைப்பட்ட வீதியில் பெரிய குழி ஏற்பட்டுள்ளது. இதனால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதோடு சில வேளைகளில் வாகனங்கள் கடலுக்கள் தடம் புரளக் கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியின் பல இடங்களிலும் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த வீதியின் வைரவர் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வீதியில் நீண்ட காலமாக பரந்த பிரதேசத்தில் குழி ஏற்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் இதனை அண்மித்துள்ள சிறு குழிகள் கற்கள் கொண்டு மூடப்பட்டன. ஆனால் இந்தப் பெரிய குழியை மூடாது விட்டுள்ளனர். இதனால் மழை பெய்யும் நாள்களில் குழியில் நீண்ட நாள்களாக வெள்ளம் தேங்கி நிற்பதனால் இதனூடான போக்குவரத்தில் சிரமம் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. (ம-ரி)

# யாழ். கரையோரப் பகுதி மக்கள் மீள்குடியமரும் நாள் எப்போது?

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட கடற்கரையோரப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று யாழ்.மாந கரசபை உறுப்பினர் அருளப்பு கொர்னேலியஸ் கேட்கின்றார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உயர்பாதுகாப்புக்குட்பட்ட பகுதிகள் சிலவிடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியமர வழி செய்யப்பட்டுள்ளது. வீடுகளில் தாம் தேடிய சொத்துக்கள் இழந்து திக்கற்றவர்களானாலும் சொந்த இடத்துக்கு விட்டது அவர்களுக்கு ஒரு நிம்மதியைக் கொடுக்கிறது.

மாநகரசபை எல்லைக்குட்பட்ட கடற்கரையோரமாக இருக்கும் வீடுகள் இன்னும் விடுவிக்காததால் அந்த மக்கள் வாடகை வீடுகளில் இருந்து துன்பப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கொழும்புத்துறையைப் பொறுத்தவரையில் வசந்தபுரம் விடுவிக்கப்பட்டுள்ளது. துண்டி, எழிலூர், மகேந்திரபுரம் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் 100இற்கு மேற்பட்ட குடும்பத்தினர் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ள போதிலும் இன்னும் ஒரு முடிவு எட்டாதிருப்பது கவலைக்குரியதாகவுள்ளது.

இது சம்பந்தமாகக் கடந்த வருட முற்பகுதியில் மாநகர உறுப்பினர்களாகிய நாம் பிரேரணையாக மாநகரசபையில் வைத்தோம்.

மாநகர முதல்வர் இது சம்பந்தமாக உரியவர்களுடன் தொடர்பு கொள்வேன் என்றும் கூறியுள்ளார்.

இவர் இடம்பெயர்ந்து வாடகைக்கும், இரவல் காணிகளிலும் இருக்கின்ற மக்களின் கஷ்டங்களை அறிந்தவராக இருக்கிறார்.

வெகுவிரைவில் இவர்கள் சொந்த இடங்களுக்கு குடியமர அமைச்சரோடும் உயர் பாதுகாப்புக்கு பொறுப்பாயுள்ள அதிகாரியுடனும் அரச அதிபரோடும் தொடர்பை ஏற்படுத்தி மிக விரைவில் தகுந்த நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறேன் - என்றுள்ளது. (ம)

## நெல் அறுவடை பாதிப்பு

கோப்பாய்,பெப்.

கடந்த சில நாள்களாக இடையிடையே பெய்து வரும் மழையினால் வலி.கிழக்குப் பிரதேசத்தில் ஆரம்பமாகியுள்ள நெல் அறுவடை முற்றாகப் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களிலேயே தற்போது அறுவடை நடைபெற்று வருகிறது.

அறுவடை செய்த கதிர்க் குவியல்கள் பல சூடடிக்க முடியாமல் வயல்களிலேயே உள்ளதாகவும் காலநிலை சீரடையாவிடில் இவை முற்றாக அழிவடையும் நிலை ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களை விட அதிகளவு நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தொடர்மழையால் கால் நடைகளுக்குரிய வைக்கோல் தீவனமும் பாதுகாக்க முடியாமல் போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதி வயல்நிலங்களில் கணிசமான விளைச்சல் கிடைத்துள்ள போதிலும் அதை உரிய வகையில் பாதுகாக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ம-72)

## பாடசாலைகளில் 6 எஸ் திட்டம்

கல்வி அமைச்சினால் அமுல்படுத்தப்படும் பாடசாலைகளுக்கான 6 எஸ் திட்டம் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

முன்னோடியான சமூகத்தை நோக்கி என்ற தலைப்பிலான 6 எஸ் திட்டத்தை அமுல்படுத்த கைசன் நிறுவனமும் டி.எவ்.சி.சி. வங்கியும் அனுசரணை வழங்குகின்றன.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இத்திட்ட ஆரம்ப நிகழ்வில் கல்வியமைச்சின் பணிப்பாளர் திருமதி ஜெயனி திலகரட்ண, கைசன் செயற்றிட்ட ஆலோசகர் லால் பொன்சேகா, செயற்றிட்ட முகாமையாளர் வி.பூபாலசிங்கம், டி.எஸ்.சி.சி. வங்கி முகாமையாளர் வி.தாமோதரன், வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-236)

# தென்மராட்சி மேற்குப் பிரதேசத்தில் இயந்திரம் மூலம் அறுவடை

கைதடி,பெப்.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் தச்சன்தோப்பு தொடக்கம் தனங்களப்புவரையான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கைகள் விளைச்சல் அடைந்ததை அடுத்து நெல் அறுவடை இயந்திரம் மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பிரதேசங்களில் இந்த முறை பெரும் எண்ணிக்கையானோர் நெற் செய்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

அதன்பயனாக விளைச்சலும் எதிர்பார்ப்பதைவிட அதிகமாகக் கிடைத்திருப்பதாகவும் ஆனால் அறுவடையை மேற்கொள்ள மனிதவலு போதாத நிலையில் இந்த நெல் அறுவடை இயந்திரம் கிடைத்திருப்பது ஓர் அரிய வாய்ப்பு எனவும் விவசாயி ஒருவர் தெரிவித்தார்.



இந்தமுறை நெல் அறுவடை இயந்திரம் மூலம் தமது வயல்களை அறுவடை செய்வதனையே பெரும்பாலான விவசாயிகள் விரும்புவதாகப் பலராலும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-288)

## கற்றல் உபகரணம் மாணவருக்கு வழங்கல்

வடமராட்சி, பெப்.7

கடவுளின் குழந்தைகள் நிறுவனத்தின் புலோலி உபய கதிர்காமத்தில் உள்ள சிறுவர் கிராமத்தைச் சேர்ந்த 45 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் தேவஸ்தானம் அண்மையில் வழங்கியது.

புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் இம் மாணவர்களுக்கு தேவஸ்தானத்தின் சார்பாக அறங்காவலர் சபைத்தலைவர் இ.அன்னலிங்கம் இவற்றை வழங்கினார்.

அத்துடன் இப்பாடசாலையில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய 5 மாணவர்களுக்கு தேவஸ்தானத்தால் உதவிகள் வழங்கப்படும் என சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இது தவிர வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள 15 பாடசாலைகளில் கல்விபயிலும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ம-236)

# மருதனார்மடம் சந்தைக்கு எப்போது விடிவு கிட்டும்

யாழ்ப்பாணம், பெப்.7

வலி.தெற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் மருதனார்மடம் பொதுச் சந்தை அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்குவதாக அங்குள்ள வியாபாரிகள் விசனமும் கவலையும் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சந்தை மிக நீண்ட காலமாகவே இத்தகைய குறைபாடுகள் பலவற்றுடன் இயங்கி வருகிறது.

குறிப்பாக வாழைக்குலை வியாபாரிகள் தமது வியாபாரங்களை மேற்கொள்ள ஒரு தகர கொட்டகை கூட இல்லை என்றும் மழை காலங்களில் நனைந்த நிலையிலேயே தாம் வியாபாரத்தை மேற்கொள்வதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.



அத்துடன் பள்ளமான இடத்தில் தமக்கான வியாபார இடம் ஒதுக்கப்பட்டுள்ளமையால் அதில் வெள்ளம் தேங்குகிறது. இந்தப் பகுதிகளில் வைத்தே தாம் வாழைக்குலை வியாபாரம் செய்ய வேண்டிய நிலை இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் வாழைக்குலைகள் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஆடம்பரப் பொருள்களை விற்பனை செய்வோர் தாமும் இதே துன்பத்தை அனுபவிப்பதாகவும் மழை காலங்களில் தாம் வியாபார நேரங்களில் நரகவேதனையுடன் வியாபாரத்தை மேற்கொள்வதாகவும் விசனம் கூறப்படுகின்றது.

சந்தைக்குத்தகையை கோடிக்கணக்கில் ஏலத்திற்கு விடும் பிரதேச சபை அந்த நிதியை சந்தை அபிவிருத்திக்கு உபயோகிக்காது முடக்கி வைத்திருப்பது ஏன் எனவும் வியாபாரிகளால் கேள்வி எழுப்பி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விடயத்தில் இனியாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து இந்தச் சந்தையை வியாபாரிகளினதும் மக்களினதும் நலன் கருதி சீர் செய்யவேண்டும்.

சந்தைக்குத்தகை நிதியை சந்தையின் அபிவிருத்திக்கே பயன்படுத்தவேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)

## தீவுப்பகுதி ஆசிரியர்களுக்கு பயிற்சி முகாம்கள்

யாழ்ப்பாணம், பெப்.7

இந்த ஆண்டில் தீவுப்பகுதி ஆசிரியர்களுக்கு கணிதம், விஞ்ஞான பாடங்களுக்கான பயிற்சி முகாம்கள் நடத்தப்படவுள்ளதாக தீவகக் கல்விப்பணியாளர் எஸ். இராதாகிருஷ்ணன் தெரி வித்தார்.

கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் பாடசாலை மட்டத்திலும் உள்ளக மட்டத்திலும் கண் காணிப்பை பலப்படுத்தவும் பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# உரியவர்களின் கைகளுக்கு கிடைக்காத தபால்கள்

வண்ணை, பெப்.7

யாழ். நகர மற்றும் புறநகர் பகுதிகளில் விலாச தாரர்களுக்கு உரிய கடிதங்கள் சென்றடைவதில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

சரியான விலாசதாரரைக் கண்டறிந்து கடிதங்களை ஒப்படைக்காமலும் வெவ்வேறு இடங்களில் கடிதங்களை ஒப்படைத்தும், போட்டுவிட்டும் விநியோகஸ்தர்கள் சென்று விடுவதாக மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இவ்விதம் சம்பந்தமில்லாதவர்களிடம் கடிதங்களை ஒப்படைத்துச் செல்வதால் வாங்குபவர்கள் உரிய விலாசதாரர்களிடம் ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்கள் கிடைக்காமல் போய்விடுகிறது. இத்தகைய பல சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தொடரும் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ம-160)

# யாழ்.மாநகரசபை எல்லையில் மீளாய்வு செய்யப்பட்ட வரி

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மீளாய்வு செய்யப்பட்ட வரி அறவீடு தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்.மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட கட்டண விவரங்கள் அறிவிக்கப்பட்டன.

மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மீளாய்வு செய்யப்பட்ட வரி விவரம் வருமாறு:

மாநகரசபைக்குச் சொந்தமான காணிகளுக்குள் ஒரு சதுர அடி- 200 ரூபா, விளம்பரப் பலகை - 200 ரூபா, நிலம் 200 ரூபா, நகரின் மத்தியில் ஆகக் கூடியது 200 சதுரஅடி மட்டுமே விளம்பரம் போட முடியும். பதாகை ஒரு சதுர அடி 50 ரூபா, தனியார் காணிகளில் விளம்பரம் ஒரு சதுரஅடி 200 ரூபா. (ம-7)

உதயன்
07 பெப்ரவரி 2011திங்கட்கிழமை

# ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கும் கனகராயன்குளம் மகாவித்தியாலயம்

கிளிநொச்சி, பெப்.7

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கனகராயன்குளம் மகாவித்தியாலயம் ஆசிரியர்கள் பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றது.

கடந்த காலச் சம்பவங்களைத் தொடர்ந்து இடப்பெயர்வுக்கு உள்ளாகி மீண்டும் மக்கள் மீளக் குடியேறிய நிலையில் குறிப்பிட்ட பாடசாலையில் சுமார் ஐநூற்று ஐம்பது பிள்ளைகள் வரை கல்வி கற்கின்றபோதிலும் முக்கியப் பாடங்களுக்குக் கூட ஆசிரியர்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பப்பிரிவுமுதல் உயர் பிரிவுவரை மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் முக்கிய பாடங்களான விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாது இருப்பதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தப் பாடங்கள் தவிர சித்திரம், நடனம் ஆகிய பாடங்களுக்கும்கூட ஆசிரியர்கள் இல்லாத நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு துன்ப துயரங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகியதுடன் சொத்து, சுதந்திரங்களை இழந்த நிலையில் தொழில்களையும் இழந்து நிர்க்கதியாக நிற்கும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு உரிய கல்வி வசதியைக்கூட கிடைப்பதற்கு வேண்டிய ஆசிரியர்களைக் குறிப்பிட்ட பாடசாலைக்கு வழங்க வேண்டிய பொறுப்பும் கடமையும் வடமாகாணக் கல்வி அமைச்சுக்கு உரியதெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

(86)

## சிறந்த தானம்....



கிளிநொச்சி வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் மாவட்ட வைத்திய சாலையில் இரத்ததானம் செய்தபோது எடுக்கப்பட்ட படம்

(405)

# இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் சம்பளம் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை

முல்லைத்தீவு, பெப்.7

முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் உரிய காலத்தில் சம்பளங்கள் வழங்கப்படாமையால் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

ஆசிரியர்களுக்கான சம்பளம் மாதாந்தம் 20 ஆம் திகதி வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், இடம்பெயர்ந்து வவுனியாவில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளம் மாதம் முடிவடைந்தும் இழுத்தடிக்கப்பட்டே வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்து சென்று வேறு இடங்களில் இணைப்புப் பெற்றுக் கடமையாற்றும் ஆசிரியர்களின் சம்பளம் வழங்கும் விடயத்தில் கல்வி வலய அதிகாரிகள் காட்டும் அசிரத்தையான செயல்பாடே இந்த ஆசிரியர்கள் பல்வேறு துன்பங்களுக்கும் உள்ளாகும் நிலைமைக்கு இட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இடம்பெயர்ந்து வாழ்வதன் காரணமாக வீட்டு வாடகை உட்பட அனைத்து விடயங்களிலும் பணத்தை நம்பியே வாழ வேண்டிய நிலைமை காணப்படுவதாகவும், உரிய அதிகாரிகள் தமது சம்பளத்தை ஏனைய ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதைப் போன்று உரிய காலத்தில் தமது சம்பளத்தையும் வழங்கி நெருக்கடிக்குள் இருந்து விடுபட நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் ஆசிரியர்கள் வேண்டி நிற்கின்றார்கள்.

உரிய நேரத்தில் சம்பளம் கிடைக்குமாயின் தங்களின் கஷ்டங்களை நீங்க உதவியாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.(86)

# கடும் மழை வெள்ளத்தால் தம்பனைக் கிராமம் பாதிப்பு

மன்னார், பெப்.7

மன்னாரில் உள்ள தம்பனைக் கிராமம் மழை வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியில் வாழ்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நிர்க்கதியான நிலைமைக்கு உள்ளாகியுள்ளார்கள்.

கடந்தசில நாள்களாகப் பெய்து வரும் மழை காரணமாக இப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளமையால் இப்பகுதியில் உள்ள மக்கள் அயலில் உள்ள பாடசாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் இடம்யெர்ந்த மக்களைக் குடியேற்றி ஒரு கிராமமாக இக்கிராமம் காணப்படுவதினால், ஏற்கனவே நிரந்தர வீடுகள் இன்றித் தற்காலிக இருப்பிடங்களை நம்பி வாழ்ந்த இம் மக்களின் குடியிருப்புக்களினுள் வெள்ளம் புகுந்துள்ளதால் இடம்பெயர்ந்த இம்மக்களுக்கான உடனடி உதவிகள் எவையும் கிடைக்கவில்லையென வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(86)




මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

2011.02.04

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2353

வெற்றி எழுத்து E — வெற்றி எண்கள் 2 5 3 0 8 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | E | 2 | 5 | 3 | 0 | 8 | 0 | ரூபா.10,590,760/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 2 | 5 | 3 | 0 | 8 | 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 5 | 3 | 0 | 8 | 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 08 |
| 3 பரிசுகள் | | | | 3 | 0 | 8 | 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 91 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 8 | 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 899 |
| 5 பரிசுகள் | | | | | | 8 | 0 | ரூபா. 100/= | பரிசுகள் 8946 |
| 6 பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 88797 |


இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 2 | 5 | 3 | 0 | 8 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 9 |
| 8 பரிசுகள் | | 2 | 5 | 3 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 96 |
| 9 பரிசுகள் | | 2 | 5 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 902 |
| 10 பரிசுகள் | | 2 | 5 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 8952 |
| 11 பரிசுகள் | E | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 35361 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 8,710,560.00

தேசிய லொத்தர் சபை
2342 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

# மரண அறிவித்தல்



## மத்தேசு தேவசகாயம் [சின்னத்துரை]

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட மத்தேசு தேவசகாயம் 03.02.2011 வியாழக்கிமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மத்தேசு தம்பதியரின் அன்பு மகனும், அருளம்மாவின் அன்புக் கணவரும், சூசைப்பிள்ளை, சுவந்திரராசா, காலஞ்சென்ற பாலரத்தினம் மற்றும் இருதயராசா (ஜேர்மனி), ஜேம்ஸ் (பிரான்ஸ்), கிறிஸ்ரீனா, புஸ்பராசா (சுவிஸ்), அன்ரன் தேவதாஸ் (பிரான்ஸ்), மரியபற்றிமா ஜெயராணி (பிரான்ஸ்), கெல்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றீற்றம்மா, ஜசிந்தா (ஜேர்மனி), லலிதா, றோகினி (பிரான்ஸ்), செல்வராசா (செல்வம் ஆட்ஸ், சுன்னாகம்), செறின் (சுவிஸ்), எட்மன் (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்), சாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.02.2011) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அன்றையதினம் பி.ப.3.00 மணியளவில் கோப்பாய் தெற்கு புனித மரியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.செல்வராசா (மருமகன்)
(செல்வம் ஆட்ஸ், சுன்னாகம்)
TP: 0773361679

மாதாகோயில் முன்பாக,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

# விஞ்ஞான ஆசிரியர் இல்லை ஐயன்குளம் பாடசாலை பாதிப்பு

துணுக்காய், பெப்.7

துணுக்காய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட ஐயன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் அயல் பாடசாலைகளைத் தேடிச் செல்கின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மீள்குடியமர்வு செய்யப்பட்ட இப்பிரதேசத்தில் இப்பாடசாலை இயங்குகின்ற போதிலும் க.பொ.த. உயர்தரம் வரை காணப்படும் இப்பாடசாலையில் 250 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்றும் விஞ்ஞான ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் கல்விக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப் பாடசாலையின் செயற்பாடுகள், மாணவர்கள் வேறு பாடசாலைகளை நாடிச் செல்வதினால் பாதிப்படைவதாகவும் ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் தெரிவிக்கின்றனர்.

இடம் பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்கும் உள்ளாகிய மக்கள் மீள்குடியமர்ந்துள்ள பகுதியில் அமைந்துள்ள இப் பாடசாலைக்கு மாணவர்களின் எதிர்காலம் கருதி ஒரு விஞ்ஞான ஆசிரியரை நியமனம் செய்ய வேண்டியது வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கடமை எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பாடசாலைக்கு விஞ்ஞான ஆசிரியர் ஒருவரை நியமித்துத் தரும்படி மாணவர்களின் பெற்றோர்கள் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றனர். (86)

# தொடரும் கடும் மழையினால் நெல்வயல்களுக்குப் பாதிப்பு

## விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, பெப்.7

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் அறுவடைக் காலங்களை நெருங்கியுள்ள நெல்வயல்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் பல நெல் வயல்கள் அறுவடைக் காலம் கடந்து பல வாரங்கள் ஆகியும் அறுவடை செய்ய முடியாதுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி 4 ஆம் வாய்க்கால், 5 ஆம் வாய்க்கால், பூநகரி, வன்னேரி, அக்கராயன், கணேசபுரம், வட்டக்கச்சி; இராமநாதபுரம் ஆகிய பகுதிகளிலும் அறுவடைக் காலம் கடந்த நிலையிலே வயல்களைக் காணமுடிகின்ற தாகவும் தெரிவிக்கின்றனர்.

மக்கள் மீள்குடியமர்ந்து அரசின் மானியத்துடனும், பல்வேறு கடன்களுடனும் வயல்களை விதைத்த விவசாயிகள் தமது கடன்களை அடைக்க வழி தெரியாமல் திண்டாடுவதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (405)

## கிளி.மத்திய கல்லூரியில் கால்கோள் விழா

கிளிநொச்சி, பெப்.7

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் திருமதி காஞ்சனா சிவகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கலந்து சிறப்பித்தார்.

கிளிநொச்சி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்று தரம் 1 மாணவர்கள் தரம் 2 மாணவர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஏ-9 வீதி வழியாக மங்கள வாத்தியத்துடன் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர். மண்டபத்தில் விசேட கிறிஸ்தவ ஆராதனைகளும் இடம்பெற்றன.

தேசியக் கொடியினை பிரதேச இராணுவ அதிகாரியும், பாடசாலைக் கொடியினை பாடசாலை அதிபரும் ஏற்றி வைத்தனர்.

மங்கள விளக்கினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பதில் அதிபர் திருமதி கெங்கா தேவி ஜெயராஜ், கல்லூரியின் பிரதி அதிபர் ஆ.ஆலாலசுந்தரம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தரம் 2 மாணவர்களின் வரவேற்பு நடனமும் தரம் 2 மாணவி சாருஜாவின் வரவேற்பு உரையும் பாடசாலையின் உபஅதிபர் திருமதி வ.வத்மானந்தனின் வரவேற்புரையுடன் மாணவர்களுக்கு பரிசில்களை வலயக் கல்விப் பணிப்பாளரும் ஏனைய விருந்தினர்களும் வழங்கிக் கௌரவித்தனர் நன்றியுரையினை பாடசாலையின் ஆசிரியர் திருமதி ஸ்ரீ பிறேம்குமார் நிகழ்த்தினார். (405)

**சிறந்த ஆரம்பம்...**



நல்ல பயிற்சி : கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கான விளையாட்டுப் பயிற்சி முகாமில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் பயிற்சிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். (405)

## மரதன் ஓட்டம்

கிளிநொச்சி, பெப்.7

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் ஓர் அங்கமான மரதன் ஓட்ட நிகழ்வு கடந்த 3ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 6.30 மணிக்கு நடைபெற்றது.

ஆண்களுக்கான மரதன் ஓட்ட நிகழ்வு கல்லூரியின் முன்றலில் ஆரம்பமாகி முறிகண்டி வரை ஏ-9 வீதியால் சென்று மீண்டும் கல்லூரி முன்றிலில் வந்து முடிவடைந்தது. பெண்களுக்கான மரதன் ஓட்ட நிகழ்வு இரணைமடுச் சந்தியில் ஆரம்பமாகி கல்லூரி முன்றிலில் நிறைவுபெற்றது.

இப்போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் ஆர்வத்துடன் பங்குகொண்டதாக வும் சுமார் 150 வரையான மாணவர்கள் இப்போட்டியில் பங்கு கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் போட்டியினை கல்லூரியின் பதில் அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் ஆரம்பித்துவைத்தார். (405)

# மணல் அள்ளுவதால் நீர்ப் பாய்ச்சுவதில் சிக்கல்

கிளிநொச்சி, பெப்.7

கிளிநொச்சியில் உள்ள வாய்க்கால்களில் மணல் ஏற்றப்படுவதனால் அவை ஆழமாகி நீர் பாய்ச்சுவதில் சிக்கல்கள் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுவருகின்றது.

மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் கட்டுமானப் பணிகள் அதிகரித்துள்ளமையால் மணலின் விலை வேகமாக அதிகரித்து வருவதாகவும் ஒருலோட் மணல் 4500/= வரை விற்கப்படுவதாலும் அப்பகுதி மக்கள் வாய்க்கால்களில் மணலை அள்ளுவதில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலை தொடருமானால் வாய்க்கால்கள் ஆழமாகி எதிர்காலத்தில் பெரும் இடர்களைச் சந்திக்க நேரிடும் என்றும் இதனைக் கட்டுப்படுத்தச் சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (405)

## வட்டக்கச்சி வீதியை மேவிப்பாயும் நீர்

கிளிநொச்சி, பெப்.7

இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையினால் கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியினை மேவி நீர் பாய்கின்றது.

வட்டக்கச்சி, பன்னங்கண்டிப் பகுதியிலேயே இவ்வாறு வீதியினை மேவி நீர் பாய்வதாகவும் சுமார் ஓர் அடி உயரமாகப் பாயும் இந் நீரினால் அவ்வீதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால் நீருக்குள்ளால் செல்லும் வாகனங்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் அவற்றை இனங்கான முடியாததால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாய நிலையும் காணப்படுவதாகவும் அத்துடன் நீர் பாயும் வீதியின் இரு மருங்கிலும் பாதுகாப்புக் கட்டுக்கள் எதுவும் இல்லாமையினாலும் அவ்வீதியால் பயணம் செய்யப் பொதுமக்கள் அஞ்சுகின்றனர். (405)

## ரயில் பாதை துப்புரவுப் பணி

கிளிநொச்சி, பெப்.7

கிளிநொச்சியில் ரயில் பாதை அமைந்திருந்த வீதி அப்பகுதி இராணுவத்தினரால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி புனித திரேசம்பாள் தேவாலயத்துக்கு பின்புறமாக இருந்து கரடிப்போக்கு வரையிலான ரயில் பாதையின் இரு மருங்கிலும் உள்ள பற்றைகள் அகற்றப்பட்டு துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (405)

# உயர்கல்வி வாய்ப்புகளும் தொழில் வழி காட்டலும் பற்றிய கருத்தரங்கு

கிளிநொச்சி, பெப்.7

கிளிநொச்சி சட்ட வள நிலையம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்தும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும் பல்கலைக்கழக புகுமுக வாய்ப்பினைப் பெறாதவர்களுக்குமான உயர் கல்வி வாய்ப்புகளும் தொழில் வழிகாட்டலும் பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தலைவர் ரி.முருகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர் எஸ்.ஜெயவற்சலன் பிரதம விருந்தினராகவும், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கருத்துரைகளை யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் சு.தேவராஜா, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் பொருளியல் முகாமைத்துவப் பிரிவுத் தலைவர் இணைப்பாளர் கலாநிதி ஏ.புஷ்பநாதன், மதுரை காமராஜ் பல்கலைக் கழக தொலை நிலைக் கல்வி இணைப்பாளர் ஒ.கே.குணநாதன், வடக்கு, கிழக்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் ஏ.வி.சி. ஜெயக்குமார், வடக்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஜி.ரி.ரட்ணகுமார், யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் உதவிப் பதிவாளர் சி.சிவநாதன் போன்றோர் வழங்கவுள்ளனர்.

## கட்டுக்கரைக்குளம் மக்களுக்கு அபாய எச்சரிக்கை

மன்னார், பெப்.7

வன்னியில் கடந்த சில நாள்களாக பெய்த தொடர்ச்சியான மழையினால் மன்னார் கட்டுக்கரைக்குளம் நிரம்பி வழிந்து ஓடுகிறது.

இதனால் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சபைச் செயலாளர் சி.எம்.யேசுநேசன் தெரிவித்துள்ளார். (ஒ-302)

# இந்தியப் பல்கலைக்கழகங்களில் கற்கும் மலையக மாணவருக்கு சிறந்த பெறுபேறுகள்

நுவரெலியா, பெப்.7

இலங்கை - இந்திய சமுதாயப் பேரவையின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இந்தியப் பல்கலைக்கழகங்களில் கல்விகற்று வரும் மலையக தோட்டப்புற மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுவருவது பாராட்டத்தக்கது - என பேரவை தெரிவித்துள்ளது.

கண்டி உடஹந்தான, கிரகேத் தோட்டத்தைச் சேர்ந்த சிவயோகம் கதிர்வேலு, பதுளை, ஊவா பரணகம, லுணுவத்தை தோட்டத்தைச் சேர்ந்த மோகனசாந்தி செல்வராஜா என்ற இரு மாணவிகள் இந்தியப் பல்கலைக் கழகங்களில் அதி கூடிய பெறுபேறுகளையும் பெற்றுவருகின்றனர்.

பின்தங்கிய மாணவர்கள் உயர்கல்வியைப் பெறும் நோக்கத்தோடு இலங்கை - இந்திய சமுதாயப் பேரவை புலமைப் பரிசில் திட்டங்களை அண்மையில் ஆரம்பித்துள்ளது. பேரவையில் முன்னணி வர்த்தகர்களும், புத்திஜீவிகள் பலரும் அங்கம் வகிக்கின்றனர்.

டாக்டர் ராம்சுப்பு, செல்வகுமார் கந்தசாமி, எஸ்.கருணாகரன், எம்.மணிமுத்து உள்ளிட்டவர்களின் முயற்சியினால் வருடந் தோறும் இந்த புலமைப்பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு புதிதாக 5 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க பேரவை முயற்சி செய்து வருகின்றது. இதற்கான அறிவித்தல்கள் கூடிய விரைவில் வெளியிடப்படும் - என பேரவை தெரிவித்துள்ளது. (எ)

# மலையகத் தலைமைகள் தொழிலாளர்களிடையே தொழிற்சங்கப் பகையை வளர்த்துவிடக்கூடாது

நுவரெலியா, பெப்.7

தொழிலாளர்கள் மத்தியில் மாற்றுத் தொழிற்சங்க அங்கத்தவர்களை எதிரிகளாகப் பார்க்கும் மனோபாவத்தை மலையகத் தலைமைகள் ஊக்குவிக்கக் கூடாது - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவி திருமதி சாந்தினி தேவி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வேறு எங்குமில்லாத அளவுக்கு பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களுக்கிடையில் குரோதம் வளர்ந்து வருவது வேதனை தருகின்றது.

போட்டி உணர்வுகளின் உச்சக்கட்டமாக சில தோட் டங்களில் அப்பாவி உயிர்கள் காவுகொள்ளப்படும் வேதனையான சம்பவங்களும் நடைபெற்று விடுகின்றன.

இந்த மனோபாவத்தை மாற்றி, எந்தத் தொழிற்சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்தாலும் தமக்குள் சகோதர உணர்வுகளை வளர்த்துக் கொள்ளும் பக்குவத்தை, தொழிற் சங்கங்களுக்கிடையிலான கூட்டு உருவாக்கும்.

தற்போது தேர்தலுக்காக நாம் அமைத்துள்ள தொழிற்சங்க இணைப்பை அனைத்து தொழிலாளர்களுமே விரும்புகின்றார்கள். போட்டியில்லாத அன்றாட வாழ்க்கையையே மக்கள் விரும்புகின்றார்கள்.

எனவே, தேர்தல் முடிந்தாலும்கூட தொழிற்சங்கத் தலைமைகள் மக்கள் நலனை முதன்மைப்படுத்தி அவர்கள் மத்தியில் போட்டி உணர்வுகளை வளர்க்காமல் இருக்க வேண்டும்.

அமரர் சந்திரசேகரன் எப்போதுமே தொழிற்சங்க பேதங்களை முன்வைத்து செயற்பட்டவரல்லர். தம்மை நாடிவரும் அனைத்துத் தரப்பு தொழிலாளர்களையுமே ஒரே விதமாகவே கணித்துச் செயற்பட்டார்.

எந்தத் தொழிற்சங்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் எமது மக்கள் ஒரே விதமான பிரச்சினைகளுக்கே முகம் கொடுத்து வாழ்கின்றார்கள்.

இந்தநிலையில் தேர்தல் காலங்களில் எமது அங்கத்தவர்களின் உயிரையும், வாழ்க்கையையும் பணயம் வைக்கக் கூடாது.

தேர்தல்கள் முடிவடைந்த பின் னரும் கூட தொழிலாளர்கள் இணைந்து வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் - இவ்வாறு சாந்தினிதேவி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். (எ)

# மாத்தளை தகவல் காரியாலயத்தில் தொலைபேசி இணைப்பு துண்டிப்பு

மாத்தளை, பெப்.7

மாத்தளை செயலகத்தில் இயங்கி வரும் அரச தகவல் திணைக்கள மாத்தளை காரியாலயத்தில் கடந்த மூன்று மாத காலமாகத் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப் பட்டுள்ளதால் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக்காரியாலயத்தில் கடந்த ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்கான தொலைபேசிக் கட்டணமான 10,000 ரூபாவை செலுத்தாமையால் ஜனவரி மாதம் முதல் இந்தக் காரியாலய தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படவிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இந்தக் காரியாலய தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளதால் உத்தியோகத்தர்கள் அசௌகரியங்களுக்கு மத்தியில் கடமைகளைச் செய்துவருகின்றனர்.

இவர்கள் நாளாந்தம் 200, 300 ரூபா செலவிட்டு தமது கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தியே கடமைகளைச் செய்துவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவிடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் என உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்: 21.06.1956

அரக்கரின் அழிப்பில்: 26.12.2010



மார்க்கண்டு சிவலிங்கம்

(பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)

B.Sc(Agri).Dip.in Edu, SLEAS-II

*அன்பால் அரவணைத்து எமை வளர்த்த அப்பாவே*
*உங்களை எங்களிடமிருந்து பிரித்து விட்டார்களே படுபாதகர்கள்*
*துப்பாக்கி முனைகள் உங்கள் உயிரைப் பதம் பார்த்ததுவோ*
*பெற்றவர்கள் பேதலிக்க உற்றவர்கள் உறைந்துபோக*
*கற்றவர்கள் கண்ணீர் மல்க*
*கருணையிலா கயவர்கள் அழித்தனரே அப்பாவை*
*எம் வாழ்க்கைப் பாதையில் நற்குருவாயிருந்து*
*எமை வழி நடத்துவீர்களென நாமிருக்கையில்*
*எமை பாதி வழியில் பரிதவிக்க விட்டார்களே பாவிகள்*
*நீங்கள் எம்மை அம்மா, ராசா என்று அழைப்பது*
*இன்றும் எம் காதில் நாதமாய் ஒலிக்குதப்பா*
*ஆயிரம் உறவுகள் எமை அரவணைத்தாலும்*
*அப்பாவின் அன்பிற்கு ஈடாகுமா*
*மனிதம் மரணித்த பூமியில் புனிதர்கள் யாருமில்லை*
*மரணங்களை அறுவடை செய்யும் நம் தேசத்தில்*
*நீதிகளும் எமக்கில்லை நாம் இன்று நிர்க்கதியாய்....*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து எமது துயரில் பங்கெடுத்து இரங்கலுரை வழங்கியோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பல வகையிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

கடந்த (26.12.2010) அன்று அகால மரணமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (08.02.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன்அழைக்கின்றோம்.

*(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).*

பண்டிதர் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

[110370]

தகவல்:
குடும்பத்தினர்.



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

ஓராண்டு நினைவஞ்சலி

செல்வன் பாலசுந்தரம் உதயகுமார் (உதயன்)

மலர்வு: 06.08.1966

உதிர்வு: 19.01.2010

திதி: சதுர்த்தி



நாம் உயர
நீர் உழைத்தீர்
இன்று நாம்
உயர்ந்த வேளை
நீர் மறைந்தீர்
மண்ணைவிட்டு நீர்
மறைந்தாலும்
என்றும் எம் மனங்களில்
நீர் வாழ்வீர்

காளிகோயிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

[110994]

என்றும் நினைவு கூரும்:
குடும்பத்தினர்.

# கிழக்கு மாகாணத்துக்கு மூன்று விசேட வைத்திய குழுக்கள் அனுப்பி வைப்பு

திருகோணமலை, பெப். 7

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய வெள்ள அனர்த்தத்தைக் கவனத்துக்கு கொண்டு அங்குள்ள 3 மாவட்டங்களுக்கு 3 விஷேட வைத்திய குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த சில தினங்களாக மீண்டும் பெய்துவரும் மழை மற்றும் வெள்ளத்தால் தொற்று நோய்கள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது என கிழக்கு மாகாண அமைச்சர் சுபைர் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்களின் நலனில் அதிக கவனம் செலுத்துமாறு பணிப்புரை வழங்கியுள்ள அவர், அவர்களுக்கான தேவைகளை எவ்விதத் தடைகளுமின்றிப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களுக்கு அருகில் அம்புலன்ஸ் வாகனங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறும் அமைச்சர் சுபைர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதேவேளை, கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் போதுமான அளவு மருந்துகள் இருப்பதாகத் தெரிவித்த மாகாண அமைச்சர் சுபைர், வைத்தியர்களும், சுகாதார ஊழியர்களும் மக்களுக்கான உயர்ந்த பணியை ஆற்றுவதற்குத் தயாராக இருக்கின்றனர் என மேலும் தெரிவித்துள்ளார். (204)

# அடைமழை தொடருமானால் சுனாமி நிலையே உருவாகும்

மட்டக்களப்பு,பெப்.7

தொடர்ந்து பெய்துகொண்டிருக்கும் மழையினால் மட்டக்களப்பில் அமைந்துள்ள 8 குளங்களும் உடைப்பெடுத்தால் முழு மட்டக்களப்புமே நீரில் மூழ்கும் அபாயம் உள்ளதாக உள்ளூர் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் இந்தக் குளங்களுக்கு வரும் அதிகளவான நீர் காரணமாகவே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மழைகாரணமாக தற்போது இந்த குளங்களின் நீர்மட்டம் மேவிப்பாய்கிறது.

இந்த மழை அடுத்த 48 மணித்தியாலங்களுக்கு தொடருமானால் அதிக பாதிப்புகளுக்கு இடமுள்ளதாகவும், இது கடந்த 2004 ஆம் ஆண்டின் சுனாமிக்கு ஒத்த நிலைமையை தோற்றுவிக்கும் என்று பொறியியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் பிரதான நிலப்பகுதியில் இருந்து வாகரைப்பிரதேசம் துண்டிக்கப்பட்டுள்ளதோடு, மழை தொடருமானால் ஏனைய கிராமங்களின் நிலைமையும் மோசமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

கிழக்குப் பகுதிகளுக்கான உணவு விநியோகங்கள், ஹெலிகொப்டர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமைச்சர் ஹிஸ்புல்லாவின் தகவல்படி, கிழக்கில் தற்போது 166 அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. (204)

# திருமலையில் 18 நலன்புரி நிலையங்கள்

திருகோணமலை, பெப்.7

திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக இடம்பெயர்ந்த 390 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 282 பேர் 18 நிவாரண நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என இடர்முகாமைத்துவ அதிகாரி எம்.முகாஜிரின் தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில் வெருகல், பதவிசிரிபுர, தம்பலகாமம், குச்சவெளி, கோமரங்கடவெல, கிண்ணியா, மூதூர் ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கிண்ணியா மின்னேரிக்குளம், பொலநறுவை பராக்கிரம சமுத்திரம் ஆகியன பெருக்கெடுத்துள்ளதால், வெருகல் பகுதியில் கடும்வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் வெருகல் ஊடாக மட்டக்களப்பு வரையிலான தரை வழிப்பாதையும், மூதூர்- கிண்ணியாவுக்கான தரை வழிப்பாதையும் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. (ளி)

## ஆர்ப்பாட்டத்தில்...



களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தின் முன்னால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமக்கு இதுவரை எதுவித உதவிகளோ நிவாரணங்களோ வழங்கப்படவில்லை என்பதை வலியுறுத்தியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# அக்கரைப்பற்றில் மூவர் கைது

அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கிய உரவகைகளை சட்டரோதமான முறையில் பொதி செய்து விற்பனைக்கு எடுத்துச் செல்ல முற்பட்ட 3 பேரை பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

அத்துடன், அவர்களிடமிருந்து 140 உர மூடைகளையும், பொதிசெய்யும் இயந்திரம் மற்றும் வாகனம் என்பன மீட்கப்பட்டுள்ளன என அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பள்ளிக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள தனியார் அரிசி ஆலை ஒன்றில் வைத்து விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கிய உரவகைகள் சம்பவதினம் மாலை 6 மணியளவில் சட்டவிரோதமான முறையில் பொதி செய்து விற்பனைக்காக கன்ரர் ரக வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. அப்போது அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.கே. அசார் தலைமையிலான குழுவினர் மேற்படி மூவரையும் கைது செய்தனர்.

# படுவான்கரை மக்களுக்கு உலருணவு

மட்டக்களப்பு,பெப்.7

தரைவழிப் போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டுள்ள நிலையில் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வரும் படுவான்கரை மக்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி, மகிழடித்தீவு, நரிப்புல்தோட்டம், ஈச்சந்தீவு, தில்லன்தோட்டம் போன்ற பிரதேசங்கள் முற்றாக வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளாகியதுடன், அப்பகுதிகளுக்கான போக்குவரத்தும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், அங்குள்ள மக்கள் உணவுக்காக மிகவும் கஷ்டப்படுகின்றனர். நேற்று முன்தினம் சனிக்கிழமை படகுகள் மூலம் மேற்படி பிரதேசங்களுக்கு பயணித்துள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன், அந்த மக்களுக்கான உலர் உணவுகளை வழங்கி வைத்துள்ளார்.

அந்தமக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் அவர் மேற்கொண்டார். அந்தப்பகுதியில் தொடர்ந்து கடும் மழை பெய்து வருவதால், அந்தப் பகுதிகளில் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.(204)

# பாடசாலைகள் மூடப்படும்

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் நாளை மறுதினம் புதன்கிழமை வரை மூடப்படும் என கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் எம்.ரி. நிஸாம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் சிபாரிசுக்கிணங்கவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, தெஹியத்த கண்டி மற்றும் மகா ஓயா ஆகிய கல்வி வயலங்கள் தவிர்ந்த ஏனைய 14 கல்வி வலய பாடசாலைகளே நாளை மறுதினம் புதன் கிழமை வரை மூடப்படும்.(204)

# நீதியமைச்சு நடவடிக்கை

கடந்த 1990ஆம் ஆண்டு யுத்தத்தினால் சேதமடைந்த ஏறாவூர் நீதிமன்றக் கட்டடத்தைத் திருத்த நீதியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஏறாவூர், வாகரை மற்றும் களுவாஞ்சிக் குடி ஆகிய இடங்களில் இயங்கி வந்த நீதிமன்றங்கள் யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்து செயற்படாமல் இருந்தன.

இந்தமூன்று நீதிமன்றங்களையும் முதற் கட்டமாக சுற்றுலா நீதிமன்றங்களாக செயற்படுத்துவதற்கு நீதியமைச்சர் ரவூப்ஹக்கீம் ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். யுத்தம் காரணமாக ஏறாவூர் நீதிமன்றக் கட்டடம் அழிவடைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

# திருடர்களின் தொல்லை அதிகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் இரவு நேரங்களில் தற்போது கடும் மழை பெய்து வருவதால், திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட மக்கள் இது பற்றி பொலிஸில் புகார் தெரிவித்தும், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. இது திருடர்களுக்கு சாதகமாக அமைகின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

# அபிவிருத்தி என்ற போர்வையில் முறைகேடுகள்

மட்டக்களப்பு, பெப். 7

இலங்கை அரசானது வடக்கு, கிழக்கு பகுதிகளில் அபிவிருத்தி செய்வதாகக் கூறிக் கொண்டு, அங்கு வாழ்கின்ற தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றதைக் காணக்கூடியதாக இருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் மட்டக்களப்பு கிரான்குளம் கல்வி அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

தமிழர்களின் பூர்வீக வளங்களை திட்டமிட்ட வகையில் சூறையாடுவதும், தமிழர்களின் கலை, கலாசாரங்களை பூண்டோடு அழிப்பதையும் நோக்கமாகக் கொண்டதை அரசின் அபிவிருத்தி எனக்கூற முடியுமா? இந்தத் திட்டமிட்டத் தமிழ் விரோதப் போக்கை நாங்கள் எதிர்க்கிறோம். ஆனால், உண்மையான அபிவிருத்தித் திட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஒருபோதும் தடையாக இருக்காது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வடக்கு, கிழக்கு பகுதிகளின் அபிவிருத்திக்கு தடையாக செயற்படுவதாக அரசும் அதனுடன் சேர்ந்தவர்களும் தங்களுடைய அரசியல் லாபத்திற்காக பொய்ப் பிரசாரம் செய்கின்றார்கள். இதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தென்பகுதியில் எவ்வாறு இந்த அரசுக்கு செல்வாக்கு இருக்கின்றதோ, அதேமாதிரி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் செல்வாக்கு இருக்கின்றது. இதனைக் கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் நிரூபித்திருக்கின்றார்கள். இதனால் தான் தமிழ்மக்களின் பிரதிநிதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசு பேச்சுவார்த் தைக்காக அழைத்துள்ளது -இப்படி நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். (ளி)

# இலங்கை அகதிகள் மேம்பாட்டுக்கு தமிழக அரசால் நூறு கோடி ஒதுக்கீடு

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன் பேணல் மற்றும் மேம்பாட்டிற்கு நூறு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இடைக்கால வரவு - செலவுத்திட்டம் தமிழ் நாடு மாநில சட்டப்பேரவையில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. அதன்போது மாநில நிதியமைச்சர் அன்பழகன் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துப் பேசும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களின் வசதிகளை மேம்படுத்த நூறு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் முதல்கட்டமாக முப்பது கோடி ரூபா பெறுமதியான பணிகள் தற்போது முடியும் தறுவாயில் உள்ளன. அதனையடுத்து தமிழக மக்களுக்கு மட்டும் இதுவரை செயற்படுத்தப்பட்ட இலவச தொலைக்காட்சி மற்றும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம், திருமண உதவித் திட்டம் என்பனவும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

தற்போதைக்கு இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நாற்பது கோடி ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (204)

# இந்தியாவிலிருந்து விரைவில் ரயில் பெட்டிகள் இறக்குமதி

கொழும்பு,பெப்.7

சென்னை வில்லிவாக்கத்திலுள்ள இரும்புப் பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டிகள் விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் - என இந்திய ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் ரயில் பாதைகளில் இயக்கப்படவுள்ள ரயில் என்ஜினையும், 45 பெட்டிகளையும் தயாரித்துத்தரும் ஒப்பந்தம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே கடந்த ஆண்டு ஏப்ரலில் கையெழுத்தானது.

அதன்படி, சென்னை இரும்புப் பெட்டித் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட 12 பயணிகள் பெட்டிகள் முதற்கட்டமாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

வண்ணமயமான கண்கவர் பூக்களுடன்தயாரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பயணிகள் பெட்டியும் 30 முதல் 35 தொன் எடை கொண்டவை. என்ஜின் 75 தொன் எடை கொண்டது.

இவற்றில் 3 பயணிகள் பெட்டிகள் 100 அடிநீளம் கொண்ட மிகப் பெரிய கனரக வாகனங்களில் ஏற்றப்பட்டு சென்னை துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

பெட்டிகள் அனைத்தும் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த பின் அவைகள் கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும்.

இலங்கையின் மாத்தறையில் இருந்து கொழும்பிற்கு ரயில் பாதை அமைக்க 800 மில்லியன் டொலர்களை இந்தியா கடனாகக் கொடுத்து உதவியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. - இவ்வாறு இந்திய ஊடகச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

(சி)

# ஆள்பலத்தைக் குறைக்கிறது இலங்கை இராணுவம்

கொழும்பு,பெப்.7

இலங்கை இராணுவம் ஆளணி வளத்தைக் குறைக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல தகவல் வெளியிட்டுள்ளார். தற்போது இலங்கை இராணு வத்தின் ஆள்பலம் 220,000 ஆக உள்ளது. இதை 200,000 ஆகக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னர் பல இராணுவ அதிகாரிகளும் படையினரும் முன்கூட்டியே விருப்ப அடிப்படையில் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளனர்.

ஆள்பலக் குறைப்பின் ஒரு கட்டமாகவே தப்பியோடிய படையினரை தாமாகவே முன்வந்து விலகும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி பத்து ஆண்டுகளுக்கு மேல் இராணுவத்தில் சேவையாற்றியவர்கள் தப்பி ஓடியிருந்தால் உரிய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (204)

# நாணயத்தாள் அறிமுகம் பின்னடைவை ஏற்படுத்தும்

## ஐ.தே.க குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.7

ஐயாயிரம் ரூபா நாணயத்தாள் அறிமுகமானது பொருளாதாரப் பின்னடைவைப் பறைசாற்றி நிற்கின்றது.

அதிகரித்துச் செல்லும் பணவீக்க வீதத்தை கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் அரசு புதிய 5000 ரூபா நாணயத்தாளை அறிமுகப்படுத்தியுள்ளது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

அரசு புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 5000ரூபா நாணயத்தாள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

30 ஆண்டு கால யுத்தத்தை வெற்றி கொண்டமை பாராட்டுக்குரியது என்ற போதிலும், பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக அரசு உரிய கவனம் செலுத்தத்தவறியுள்ளது.

பொருளாதார யுத்தத்தை வென்றெடுப்பதற்கு அரசு முனைப்புக் காட்டவில்லை.

நாட்டின் அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் வெளிப்படுத்தும் நோக்கில்புதிய நாணயத் தாள்கள் வெளியிடப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

புதிய நாணயத்தாள் வெளியீடானது ஆரோக்கியமான பொருளாதார நிலைமையாக கருதப்பட முடியாது.

கடந்த 2004 ஆம் ஆண்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டி 111 ஆகக் காணப் பட்டது. ஆனால் இந்த ஆண்டில் 231 ஆக உயர்வடைந்துள்ளது.

அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலத்தில் பொருள்கள் சேவைகளுக்காக ஒருவர் 2415 ரூபாவை செலவிட்டிருந்தால் இன்று 5000 ரூபா செலவிட நேர்ந்துள்ளது- இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

(சி)

## பாதிப்பில் படகுகள்...



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையினால் நாவற்குடா, சின்னமுனை பிரதேச வாவியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மீன்பிடிப்படகுகள் சேதமடைந்துள்ளன.

கடும் காற்று மற்றும் வெள்ளம் காரணமாக மீன்பிடி படகு கள் உடைந்து போய் மீன்பிடிப்பதற்கு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது. (204)

# கல்வி நிர்வாக சேவைக்கான வயதெல்லை நீக்கம்

கல்வி நிர்வாக சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த ஆகக்கூடிய வயதெல்லையான 45 வயதை நீக்க கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தீர்மானித்துள்ளார் என கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கமைய தற்போது அமுலிலுள்ள சட்டநிர்வாகச் சேவையின் சட்ட மூலங்களை மீளாய்வு செய்யவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கல்வி நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சை இறுதியாக கடந்த 2006ஆம் ஆண்டிலேயே நடந்தது. அதற்குப்பின் அந்தப் பரீட்சை நடைபெறாததால், தகுதி வாய்ந்த 60 ஆயிரம் அதிபர்களும், ஆசிரியர்களும் பாதிக்கப்படுவர் என்பதைக் கருத்தில் கொண்டே இந்த வய தெல்லையை நீக்கிவிட அமைச்சர் பந்துல குணவர்த்தன தீர் மானித்துள்ளார் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# சிறையிலிருந்து தப்பிச் சென்றவர் ஐந்து மாதங்களின் பின்னர் கைது

கொழும்பு, பெப்.7

கொள்ளை, குண்டு வைத்திருந்தமை உட்பட 25 குற்றச் சாட்டுகளுக்காக விளக்க மறியலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளையில் சிறைச்சாலை அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு தப்பிச் சென்ற "ஆமி மஞ்சு" என்ற பாதாள உலகச் சந்தேகநபர் 5 மாதங்களின் பின்னர் மொரட்டுமுல்ல பகுதியில் மறைந்திருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோல்பே பிரதேச வாசியான துமிந்த இரோஷ் அல்லது "ஆமி மஞ்சு" எனப்படுபவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் 1999ஆம் ஆண்டு மேலும் 3 சிறைக் கைதிகளுடன் சேர்ந்து சிறைச்சாலைக் காவலர்களைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றிருந்தார். அதன் பின்னர், இவர் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் பிணையில் விடுதலையானார். மீண்டும் சில கொள்ளைகளில் ஈடுபட்டு கைதாகி சிறையில் வைக்கப்பட்டிருந்தபோதே, முன்னர்போன்று காவலர்களைத் தாக்கிவிட்டுத்தப்பிச் சென்றுள்ளார்.

கடந்த 5 மாதங்களாக தலைமறைவாகி இருந்தவர், மீண்டும் மொரட்டுமுல்ல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (சி)

# தேர்தல் செலவு 180 கோடி ரூபாவை தாண்டும்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான மொத்தச் செலவு 180கோடி ரூபாவாகும் என தேர்தல்கள் செயலகம் மதிப்பீடு செய்துள்ளது.

இந்தத்தொகை இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் செயலகம் தெரிவத்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான செலவு மதிப்பீடு செய்யப்பட்ட 180கோடி ரூபாவைத் தாண்டும் பட்சத்தில் மேலதிகத் தொகையை திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிவரும் எனவும் தேர்தல்கள் செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

# ஆலை உரிமையாளர்கள் பதிவு செய்ய வேண்டும்

## வர்த்தக அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, பெப்.7

அரிசி ஆலை உரிமையாளர்கள் அனைவரும் நெல் சந்தைப்படுத்தும் சபையில் பதிவு செய்யப்படவுள்ளனர் என வர்த்தக அமைச்சர் ஜொன்ஸ்ரன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆலை உரிமையாளர்கள் பலர் நெல்லைப் பதுக்கி வைத்து செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி இலாபம் பெறுகின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்கள் விவசாயிகளிடமிருந்து மிக மலிவான விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்து அதிக இலாபமீட்டுவதற்காக அவற்றைப் பதுக்கி வைக்கின்றனர் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாம் ஒரு தரவுத்தளத்தை உருவாக்குவோம். அப்போதுதான் நாட்டின் அரிசி கையிருப்பு எவ்வளவு என எம்மால் அறிய முடியும்.

இதனால் அரிசித் தட்டுப்பாட்டை முன்னரே அறிந்து எம்மை தயார்ப்படுத்திக் கொள்ள முடியும் - என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(சி)



கிராமிய அபிவிருத்திக்கான சின்மயா நிறுவனத்தின் கலந்துரையாடல் ஒன்று நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. நிறுவன முகாமையாளர் ஷமா மேத்ரா உரையாற்றுகிறார் (313)

# சங்கிலியன் காலத்துக்குப் பின் சாதகமான பொருளாதாரக் கொள்கை இதுவரை இல்லை

''யாழ்ப்பாணத்தில் சங்கிலியன் காலத்திற்குப் பின்னர் சாதகமான பொருளாதாரக் கொள்கையைப் அடுத்தடுத்து அரசுகள் முன் வைக்கவில்லை'' என வரலாற்றுப் பொருளியல் பேராசிரியர் வி.நித்தியானந்தத்தின் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம் முடிவுடன் உடன்படுவதாக யாழ். பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் வி.ப. சிவநாதன் கூறியுள்ளார்.

யாழ்ப்பாண சிந்தனைக் கூடத்தின் ஏற்பட்டில் ''யாழ் மாவட்டத்ததை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம்?'' என்பது தொடர்பான செயலமர்வு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்.தியாகிகள் அறக்கொடை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. இங்கு ''நிதி மற்றும் அபிவிருத்தி கொள்கைகள்'' எனும் தலைப்பில் கருத்துரை வழங்கும் போதே பேராசிரியர் சிவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

வடகிழக்கு தமிழ் மக்கள் அரசியல் உரிமையைக் கேட்டதால் அரசு ஒதுக்கியதா? அல்லது தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் குறைவாக உள்ளதால் ஒதுக்கபட்டார்களா? அல்லது ஏற்கனவே உள்ள தமிழர் பிரதிநிதிகள் கூட பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவியை பெறாமையால் ஒதுக்கப்பட்டார்களா? என்ற கேள்விகள் எம்முன்னே உள்ளன.

அந்நியராட்சியின் போதோ அல்லது பேரினவாத அரசின் ஆட்சிகளின் போதோ வடகிழக்கின் வளங்களை நல்ல முறையில் பயன்படுத்தக் கூடியதாக இறை மற்றும் நாணயக் கொள்கைகள் வகுக்கப்படவில்லை. மாறாக இப்பிரதேச வளங்களை சுறண்டக் கூடியதாகவும், தமிழர்கள் தங்கிவாழ்வோராக மாறுவதற்கும் பொருத்தமான பொருளாதாரக் கொள்கைகளே முன்வைக்கப்பட்டு வந்துள்ளன.

இனியாவது வடகிழக்கின் பொருளாதாரக் கொள்கை தொடர்பாக விழிப்படைய வேண்டும். குறிப்பாக தமிழ்ச் சமூகம் நிலத்தை சொந்தமாக வைத் திருப்பதற்குப் பொருத்தமான நில சீர்திருத்தம் அவசியம். எமது பிரதேச உற்பத்திகள் தொடர்பான விலை சமிக்ஞைகளை முறைப் படுத்தி வழங்க யாராவது முன் வரவேண்டும். பிரதேச இளம் பருவ கைத்தொழில்களிற்குப் பாதுகாப்பளிக்க வேண்டும். இவை தொடர்பான கொள்கை வகுப்பாளர்கள் ''பொருளாதார காவல் நாய்கள்'' என்பதற் கிணங்க செயற்பட வேண்டும். (ஒ-3)

# தமிழினத்துக்கான சுதந்திரத்தைப் பெற நாம் தொடர்ந்தும் போராடுவோம்

வடக்கு, கிழக்கில் சரித்திர ரீதியாக தமிழர்கள் வாழ்ந்துள்ளனர் - பிரித்தானியர்கள் சிங்கள மக்களுக்குரிய சுதந்திரத்தை வழங்கி விட்டு சென்றனர் - ஆனால் அறுபத்து மூன்று வருடங்களாகியும் தமிழினத்துக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை எமக்கான சுதந்திரத்திற்காக நாம் தொடர்ந்தும் போராடுவோம்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

வவுனியா பண்டாரிகுளத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்குத் தலைமை வகுத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து அங்கு பேசுகையில்:

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்தொடரிலே இலங்கையில் உள்ள பல்கலைகழகங்கள் சர்வதேச தரத்துக்கு தரம்முயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கல்விஅமைச்சர் தெரிவித்தார். இத்திட்டத்தில் ஆறு பல்கலைக்கழகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் அந்த ஆறு பல்கலைக்கழகங்களிலும் வடக்கு, கிழக்கில் உள்ள எந்தவொரு பல்கலைக்கழகமும் உள்ளடங்கவில்லை. மாறாக அனைத்தும் தெற்கிலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எங்களுடைய பணத்தில் எங்கள் மக்களுடைய வரிப்பணத்தை கொண்டு எமது பிரதேசத்தில் உள்ள பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்யாமல் தெற்கில் உள்ள பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்யப் போகின்றீர்களா? என நான் உயர்கல்வி அமைச்சர் எஸ். பீ திசாநாயக்கவிடம் கேள்வி எழுப்பினேன்.

வடக்கில் உள்ள மிகப்பெரும் பல்கலைக்கழகமான யாழ். பல்கலைக்கழகத்தை ஏன் சர்வதேச தரத்துக்கு தரம் உயர்த்த முடியாது எனவும் கோரியுள்ளேன்.

தமிழர்களுடைய விடுதலை போராட்டம் ஆரம்பத்தில் ஜனநாயக வழியில் தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்டது. அப் போது சிறுவனாக இருந்து சிறைசென்ற வரலாற்றையும் பல்கலைக்கழகம் கிடைத்தும் கற்க முடியாமல் போன சூழலையும் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

தந்தை செல்வாவின் அகிம்சை வழியிலான போராட்டத்தில் நாம் இளைஞராக இருந்து அவருக்கு துணைநின்றோம் 1978 ஆம் ஆண்டு இலங்கை தமிழர்களின் பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறியது. ஆயினும் முப்பது வருடப்போரில் கொடூரமான துன்ப துயரங்களையும் இழப்புக்களையும் நாம் சந்தித்தோம்.

ஆனால் இன்று எமது தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்கு ஆயுத மயமாக்கப்பட்டுள்ளது. சுதந்திரமாக நடமாட முடியாத நிலைக்கு எமது இனம் தள்ளப்பட்டுள்ளது. பொருளாதார வாழ் விடங்கள் அழிக்கப்பட்டு மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு மக்கள் தினமும் கண்ணீருடன் வாழ்கின்றனர். எமக்கான சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை அந்த சுதந்திரத்துக்காகவே நாம் தொடர்ந்து போராடுகின்றோம்.

எமது பிரதேசத்தை நாமே அபிவிருத்தி செய்ய நடைபெறுகின்ற உள்ளூராட்சி சபைத்தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் எமது வேட்பாளர்களை அமோக வாக்குகளால் வெற்றி பெறச் செய்யுங்கள். இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து எமது தேசியத்தின் உன்னதத்தை காப்பாற்றிக்கொள்ளுங்கள். -என்றார். (ம)

## வாக்காளர் இடாப்புகள் பார்வைக்கு

கொடிகாமம், பெப்.7

சாவகச்சேரி நகர சபைப் பிரிவின் வாக்காளர் இடாப்புக்கள் தற்சமயம் மேற்படி நகர சபை நூலக மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர் பெயர்கள் அடங்கிய பட்டியல் அத்துடன் வாக்களார் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல் என மூன்று பிரிவாக இங்கு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களின் வசதிக்காக இவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ம-122)

## பாம்புகளின் தொல்லை அதிகரிப்பு

பருத்தித்துறை,பெப்.7

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் பாம்புக் கடியினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மருதங்கேணிப் பகுதியில் ஒருவார காலத்தில் 5பேர்வரை பாம்புக்கடிக்கு ஆளாகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (ம-190)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கொழும்புத்துறை, பெப்.7

லங்கா சித்த ஆயுள்வேத சபையினால் கடந்த ஆண்டு ஒக்டோபரில் கொழும்பில் நடத்தப்பட்ட டிப்ளோமா பரீட்சையில் சித்தி பெற்றோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஏப்ரலில் கொழும்பில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகத்தில் இயங்கி வரும் லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரியில் பாடநெறிகளை பூர்த்தி செய்து வெளியேறிய 2010 ஆம் ஆண்டு அணியினரில் சித்தியடைந்தோரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஜெ. ஜெயலன், ஸ்ரீ. அரவிந்தன், சி. செல்வலிங்கம், எ.ஸ்ரீநிவாசன், பா. ஸ்ரீ நாககௌரி, ஜெ.ஜெயபிரவீனா, ரா.கல்யாணி, சு.ரசானா, அ.சுஜிதா, யோ.ஜூட் அனுராஜ், அ. வாசுகி, ப. பவதாரணி ஆகியோரே சித்தியடைந்த மாணவர்களாவர். (ம-135)

# குருவிக் காட்டின் பெருமை தெரியாதோர் அழிக்கின்றனர்

யாழ்ப்பாணம்,பெப்.7

தென்மராட்சி சரசாலை வடக்கில் அமைந்துள்ள குருவிக்காடு தில்லை மரங்கள் அடர்ந்த ஒரு சதுப்பு நிலக்காடு. முழங்காலுக்கும் மேலாகத் தண்ணீரைக் கொண்டுள்ள குருவிக்காட்டில், பெயருக்கு ஏற்றாற் போல் பெருவாரியாக நீர்ப் பறவைகள் வந்து தங்கி இனப்பெருக்கம் செய்கின்றன. வனப்பும் செழிப்பும்மிக்க இதன் பெருமை தெரியாமல் விறகுக்காக வெட்டி அழித்து வருகிறோம். இவற்றை உடனடியாக நிறுத்தி குருவிக்காடு சூழற் சுற்றுலாப் பிரதேசமாகப் பேணப்படல் வேண்டும்.

இயற்கை, பண்பாட்டு மரபு வளப் பேணுகை மையத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 2ஆம் திகதி சர்வதேச ரீதியாக 'உலக ஈரநிலங்கள் தினம்' கடைப்பிடிக்கப்பட்டது. இதனையொட்டி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அதிபர் க. அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

யாழ். குடாநாட்டின் ஈர நிலங்களின் குருவிக்காடு குறிப்பிடத்தக்கது.

போருக்கு பின்னர், தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் குடாநாட்டுக்குள் வந்து போகின்றார்கள். இவர்களின் வருகையை ஊக்குவிக்கும் பொருட்டு நட்சத்திர விடுதிகள் அமைப்பதற்குக் கால்கோள் விழாக்கள் நடைபெறுகின்றன. பயணிகளுக்கு எந்த வகையான இன்பத்தை நாம் வழங்கப் போகிறோம் என்பதை தீர்மானிக்க விட்டால், எமது பண்பாட்டுச் சூழலும் இயற்கைச் சூழலும் சேர்ந்தே அழியும். அரசியல் வெறுமைக்குள் தூக்கி வீசப்பட்டுள்ள நாம் பண்பாட்டு வறுமைக்குள்ளும் இயற்கை அழிவுக்குள்ளும் சிக்கி மேன்மேலும் சீரழிந்து விடக்கூடாது. குடாநாட்டில் சுற்றுலா சூழற் சுற்றுலாவாகவே ஊக்குவிக்கப்பட வேண்டும். இத்தகைய சுற்றுலா மையங்களில் ஒன்றாவதற்கு கண்டுகளிப்பதற்கு குருவிக்காடு போதிய தகுதியைப் பெற்றிருக்கிறது. -என்றார். (ம)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேஷர்:**
பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். வெளியூரில் இருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம்.

**இடபர்:**
மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கை காட்ட முற்படுவீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். ஓய்வெடுக்க நேரமில்லாமல் ஏதாவது வேலைகளைச் செய்வீர்கள். விருந்தினர்கள் வருகையால் செலவுகள் கூடும்.

**மிதுனர்:**
ஒவ்வாத உணவுப் பண்டங்களைச் சாப்பிட்டு விட்டு உபாதைகளுக்கு ஆளாகலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். சில விடயங்களில் ஏமாறாமல் இருக்க எச்சரிக்கை அவசியம். பேராசைகளைத் தவிர்க்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்தவர் உங்களுக்கு அறிமுகமாகலாம்.

**கடகர்:**
சிலருடன் கருத்து வேறுபாடுகள், வாக்குவாதங்கள் ஏற்படலாம். சபலங்களால் சங்கடங்களுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். கவனக் குறைவான செயல்பாடுகள் மூலம் அவதிக்கு ஆளாகலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடக்கலாம்.

**சிங்கர்:**
உங்களுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பெண்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். அடுத்து நடைபெற உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். குறுகிய தூரப் பயணங்கள் செல்லலாம்.

**கன்னி:**
குடும்ப உறுப்பினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். புத்திசாலித்தனமாக செயல்படுவதன் மூலம் சில விஷயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். நெடுநாளைய எண்ணங்கள் நிறைவேறலாம். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். அதிகச் செலவாகும் என, நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும்.

**துலார்:**
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் சிலரால் எரிச்சல் அடைவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். சிறிய விடயம் ஒன்றுக்குப் பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் சில காரியங்களைச் செய்வீர்கள்.

**விருச்சிகர்:**
சிலரிடம் வாக்குக் கொடுத்து விட்டு, அதைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்கு சொல்லலாம். நெடுநாளைய கடன்மிகுதி ஒன்றைத் தீர்ப்பீர்கள். உங்களின் வேகத்திற்கு செயற்படாத சிலரைக் கண்டு எரிச்சல் அடைவீர்கள். உறவினர்கள் இடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பீர்கள். வெளிவட்டார தொடர்பு விரிவடையும்.

**தனுசு:**
நண்பர் ஒருவர் தங்களின் ரகசியங்களை உங்களிடம் சொல்லலாம். மற்றவர்கள் செலவில் உங்களின் தேவைகள் நிறைவேறலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தவறு எனத் தெரிந்தும் சில காரியங்களைத் துணிச்சலாகச் செய்வீர்கள். சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள்.

**மகரர்:**
உறவினர்கள் அல்லது நண்பர்கள் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்படலாம். வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலையலாம். வாகன பயணங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவிடலாம். சிலர் கேட்ட உதவி செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள்.

**கும்பர்:**
சில விடயங்களில் மற்றவர்களுக்கு உத்தரவாதம் அளிப்பீர்கள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கலாம். மற்றவர்களின் அனுபவங்களைப் பார்த்து சிலவற்றைக் கற்றுக் கொள்வீர்கள். உங்களுக்கு பிரியமான பொருள் ஒன்றை மற்றவர்கள் கொடுக்கலாம். பிள்ளைகளுடன் சந்தோஷமாகப் பொழுது போக்குவதில் நாட்டம் செல்லும்.

**மீனர்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களின் செயல்பாடுகளைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள். வீட்டுக்கு வரும் சிலரை உபசரிக்கக் கூட நேரம் இல்லாமல், முக்கிய வேலைகளைச் செய்யலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். உடல் உபாதைகளைச் சந்திக்கலாம்.

# தமிழ் மக்களுக்கு நம்பிக்கை வரவில்லையே...!

**வடக்கில் படையினர் குவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பதற்றமான சூழ்நிலை அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையி மக்கள் சுதந்திரத்துடன் வாழமுடியாத நிலையில் உள்ளனர். அதுமட்டுமன்றி இவர் பொருளாதார ரீதியாகவும் வஞ்சிக்கப்படுகின்றனர். இந்நிலை மாற்றப்படவேண்டும். வட கிழக்கு மக்கள் தாம் இந்த நாட்டின் பெறுமதி மிக்கவர்கள் என்று எண்ணும் சூழ்நி தோற்றுவிக்கப்பட வேண்டும்.**

இலங்கையின் 63ஆவது சுதந்திர தினத்தில் உள்நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் இலங்கையரை நாம் வாழ்த்துகிறோம்.

''சுதந்திரம் விலைபேச முடியாத ஒன்று, இது வாழ்வின் உயிர்மூச்சு'' என மகாத்மா காந்தி நாட்டின் விடுதலையைப் பற்றிக் கூறுகிறார்.

நாம் வாழ்வதற்கான உரிமை, கல்வியைப் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் சமூக, அரசியல் ரீதியிலான கருத்துக்களை முன்வைப்பதற்கான வாய்ப்புக்களைப் பெறுவதற்கான எமது உரிமை என்பவற்றைச் சுதந்திரம் என்கிறோம்.

சுதந்திரமின்றி மக்களால் உயிர்வாழ முடியாது என்பதை நாங்கள் அனுபவத்தின் ஊடே கண்டிருக்கிறோம். சிறிலங்கா சுதந்திரமடைந்து 63 ஆண்டுகள் கடந்துவிட்டதைக் குறித்து நிற்கும் இந்த நாளில் நாம் அனைவரும் முழுமையான சுதந்திரத்தினை அனுபவிப்பதை உறுதிப்படுத்துவதோடு சுதந்திரத்தினை நாம் பெற்று மகிழ்வதற்கான சூழமைவினை ஏற்படுத்துவோம்.

உண்மையில் நாங்கள் பிராந்திய, அனைத்துலக அரசியல் மற்றும் பொருளாதாரப் போக்குகளின் பலிக்கடாக்கள் ஆகிவிட்டோம். எங்களது மக்களின் சமூகவியல், கலாசார மற்றும் பொருளாதார சுதந்திரம் எமது மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களுக்கும் எண்பதுகளில் முளைவிட்ட இனவன்முறைகளுக்கும் நாங்கள் வேறு எவரையும் கடிந்துகொள்ள முடியாது. தவறு எங்களுடையதுதான்.

எங்களது தேசிய விவகாரத்தில் வெளிநாட்டுத் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் வெளிநாட்டுச் சக்திகள் மேலாண்மைவாத நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் செயற்பட்டன எனவும் குறை கூறுவதற்கு முன்னர், இலங்கைத் தீவில் அனைத்து இனங்களையும் சேர்ந்த மக்கள் அனைவரும் நட்புடன் இருக்கும் ஒரு சூழலமைவினை உருவாக்கத் தவறிய மாபெரும் தவறு எங்களுடையதுதான். இலங்கையின் தொடர்புடைய தரப்பினர் மத்தியில் காணப்படும் பின்னோக்கிய சிந்தனைகளால் நாம் வெட்கித் தலைகுனியவேண்டும்.

சுதந்திரமான, இறையாண்மையுள்ள சமூகத்தினைக் கொண்ட வளம்மிக்க அபிவிருத்திப் பாதையில் இந்தத் தேசத்தினை இட்டுச் செல்லும் வகையில் நாங்கள் பயணிப்பதற்கான சமிக்ஞைகள் போருக்குப் பின்னான இந்தக் காலகட்டத்திலும்கூட எமக்கு இன்னமும் தென்படாதிருப்பது துயரமானதே.

ஓர் அரசியல் தீர்வுக்கான தேடல் மற்றும் நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாட்டின் ஊடாக நாட்டினது அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைப்பதற்கான முனைப்புக்களே இங்கு நாட்டினை வளம்மிக்க பாதையில் இட்டுச்செல்வதற்கான பிரதான சமிக்ஞைகளாகும்.

நாட்டினது சிறுபான்மை சமூகங்களின் குரல்களை ஒதுக்கி ஓரம் கட்டுவதோடு அவர்களது நியாயமான வேண்டுகைகளைப் புறம்தள்ளுவதானது பிரதான அரசியல் செயற்பாடுகளில் இருந்து சிறுபான்மை சமூகங்கள் ஒதுங்குவதற்கு வழிசெய்திருக்கிறது.

இதுபோன்ற நிலைமை சந்தேகமும் நம்பிக்கையீனமும் கொண்டதொரு சூழமைவு உருவாவதற்கு வழிசெய்வதானது துயரம் நிறைந்தது, துன்பகரமானது. இதுபோன்ற நிலைமை எங்களின் மத்தியில் தெளிவான, நேர்மையான நோக்கம் மற்றும் ஈடுபாடு இல்லாதிருப்பதையே எடுத்துக்காட்டுகிறது.

**குருநாகல் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய குமார இலங்கசிங்க வழங்கிய சுதந்திர தினச் செய்தி**

ஏராளமான பாதுகாப்புப் படையினர் நிலைப்படுத்தப்பட்டிருக்கும் வடக்கு வாழ் மக்களின் மனங்களில் இன்று எழுந்திருக்கும் அச்சத்தினைப் போக்கவேண்டியது முதன்மையானது.

இதற்கு வடக்கில் தற்போது அடிக்கடி இடம்பெற்று வரும் படுகொலைகள், கொள்ளைகள் மற்றும் ஆள்கடத்தல்களைக் கட்டுப்படுத்துவற்கான வினைத்திறன்கொண்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஆதாரங்களின் அடிப்படையில் தொடர்புடையவர்கள் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அத்துடன் துணிந்துநின்று வாக்குமூலம் வழங்கிய சாட்சிகளைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. இதுபோலச் செயற்படத் தவறினால் எதிர்காலத்தில் மோசமான பெரும் விளைவுகளை இந்த நாடு எதிர்கொள்ளநேரும்.

குறிப்பாக நாட்டினது வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகக் காணப்படும் நம்பிக்கை தருகின்ற பார்வை மற்றும் ஆர்வம் என்பன இந்தப் பிரதேச மக்களிடத்தே இல்லை.

வெறும் உட்கட்டுமான அபிவிருத்திகளை மாத்திரம் முன்னெடுக்காது நீண்ட பல ஆண்டுகளாகத் தொடர்ந்த போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த மக்களின் வாழ்வாதாரத்தினைச் சம நேரத்தில் மீளப்பெற்றுக்கொடுக்கும்,

ஏற்படுத்
முச்சித்
முன்செ
படவேவ
அச்ச
சந்தேக
சூழமை
மக்கள்
கான
ஏற்படு
வேண்டு
தவிர
காயமன

னைத்
பாதிக்க
போர்
யாரோ
சுதந்திர
வகையி
தாங்கிய
றில் தாங்
உணர்வு
போரு
முழுமை
மக்களு
படவே
நம்பிக்
தொடர்ந்
மற்றும்
பெறக்கூ
வேண்டு
நாட்டு
அழுத்த
வேளை
மோசடிக
என்ற செ
குறிப்
களை இ
தவிர்க்க

...கு

...!

...சூழ்நிலையில்
...ா நிலையிலும்
...றி இவர்கள்
...ாடும். வடக்கு,
...வும் சூழ்நிலை



ஏற்படுத்தும் மீளெழுச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

அச்சம் மற்றும் சந்தேகமற்றதொரு சூழமைவில் இந்த மக்கள் வாழுவதற்கான புறநிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

தவிர, போரின் போது கொல்லப்பட்ட, காயமடைந்த மற்றும் காணாமற்போன தமிழர்களின் எண்ணிக்கை தொடர்பான உண்மையான விவரங்கள் வெளியிடப்படவேண்டியது மிகவும் முதன்மையான மனிதாபிமானத் தேவையாகும்.

...றை
...ர் அதி
...ற்குரிய
...கசிங்க
...ந்திர

குற்றச்சாட்டுக்கள் எதுவும் முன்வைக்கப்படாமல் பல ஆண்டுகளாகச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

குறிப்பிட்ட இந்தச் செயற்பாட்டினை விரைவுபடுத்தத் தவறுவதானது இவ்வாறு சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் மீது அழுத்தத்தினைத் திணிப்பதற்கும் அவர்களது உளநிலை பாதிக்கப்படுவதற்குமே வழிசெய்யும்.

போர் இடம்பெற்ற பகுதிகளில் வாழும் மக்கள் யாரோ அவர்கள் தாங்களும் இந்த நாட்டின் சுதந்திரக் குடிமக்கள்தான் என்பதை உணரும் வகையில் வழிசெய்யப்படவேண்டும். ஆயுதம் தாங்கிய படையினரால் சூழப்பட்ட தேசமொன்றில் தாங்கள் சிறையிடப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வு இவர்களிடம் ஏற்படக்கூடாது.

போருக்குப் பின்னான இந்தச் சூழமைவினது முழுமையான பலாபலன்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைப்பதற்கு வழிசெய்யப்படவேண்டும். அதிகாரத்திலுள்ளவர்களின் நம்பிக்கை வார்த்தைகளில் மாத்திரம் இந்த மக்கள் தொடர்ந்தும் தங்கியிருக்காத அதேநேரம் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் இவர்கள் நன்மை பெறக்கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

நாட்டு மக்கள் கடுமையான பொருளாதார அழுத்தங்களுக்கு முகம்கொடுத்து நிற்கும் இந்த வேளையில் பெருமெடுப்பிலமைந்த நிதி மோசடிகள் மற்றும் ஊழல்கள் இடம்பெறுகின்றன என்ற செய்திகள் எங்கள் காதுகளை எட்டுகின்றன.

குறிப்பிட்ட சில அத்தியாவசியப்பொருள்களை இறக்குமதி செய்யவேண்டிய தேவை சில தவிர்க்கமுடியாத பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

**வெறும் உட்கட்டுமான அபிவிருத்திகளை மாத்திரம் முன்னெடுக்காது நீண்ட பல ஆண்டுகளாகத் தொடர்ந்த போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த மக்களின் வாழ்வாதாரத்தைச் சம நேரத்தில் மீளப்பெற்றுக்கொடுக்கும், ஏற்படுத்தும் மீளெழுச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்**

பொருளாதாரம் சார் அழுத்தத்தின் விளைவாக மக்களின் மத்தியில் சஞ்சலமானதொரு நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டியது அவசியமானது. வினைத்திறன் மிக்க மற்றும் சரியான திட்டமிடலின் ஊடாக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணப்படுகின்றன என மேலோட்டமாகத் தெரிந்தாலும் அதிகாரத்திலுள்ளவர்களின் இந்த முயற்சிகள் வெற்றியினைத் தரவில்லை.

அச்சம் மற்றும் சந்தேகமற்றதொரு சூழமைவில் மக்கள் வாழ்வதற்கு வழிசெய்வதற்குப் பொருத்தமான சூழமைவு ஏற்படுத்தப்பட்டால் மாத்திரமே நாங்கள் பெற்றிருக்கும் இந்தச் சுதந்திரம் அர்த்தமுள்ளதாக விளங்கும் என 63 ஆவது சுதந்திர நாளில் நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம்.

இந்த நாட்டின் பெறுமதிமிக்க, உபயோகமுள்ள ஒரு பகுதியின் சொந்தக்காரர்கள் தாங்கள் என வடக்குக் கிழக்கு மக்கள் தயக்கம் எதுவுமின்றி உணரும் அல்லது நம்பும் நிலை தோன்றவேண்டும். இந்த நாட்டில் அமைதியுடனும் சுதந்திரமாகவும் வாழும் வகையில் முழுமையான நடமாடும் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் இந்த மக்களுக்கு இருக்கவேண்டும்.

இதுபோன்றதொரு நிலைமை ஏற்படுவதற்காக நாங்கள் ஒருமைப்பாட்டுடன் மன்றாடுகின்றோம்.

*(நன்றி- புதினப்பலகை)*

# தன்னை உணர்ந்தால் தனக்கொரு கேடில்லை



"கடவுள் நம்பிக்கையை வற்புறுத்தி நீங்கள் அடிக்கடி பேச வேண்டும்" என்று சிலர் எனக்கு ஆலோசனை என்ற பெயரில் நிர்ப்பந்தம் தருவதுண்டு. எல்லோருடைய ஆசைகளையும் நிறைவேற்றி வைப்பது என்று ஆரம்பித்தால் நான் வெறும் வியாபாரியாக மட்டுமே இருக்க வேண்டியிருக்கும்.

நம்பிக்கை என்பது கடவுள் மீது தொடங்குமுன்பே நம்மீது நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். தன்னையே நம்பாதவன் பிறரை எப்படி நம்பப் போகிறான்? நம்பிக்கை என்பது தனக்குள் ஆரம்பமாக வேண்டும். ஆனால் இந்தச் சமூகம் மிகவும் கொடூரமானது. ஒருவனுக்குத் தன்னம்பிக்கை வேர் விடும் போதே அதை அழித்துவிட விரும்புகிறது.

தன்னை ஒருவன் நம்புவதைச் சமூகத்தால் அனுமதிக்க முடிவதில்லை. அதற்கு மாறாக அதை நம்பு, என்று நூற்றுக் கணக்கான நம்பிக்கைகளை ஒருவருக்குள் மிக்க பரபரப்புடன் திணிக்கிறது. வாஸ்து, சோதிடம், ராசிக்கல், எண்கணிதம், சகுனம், அதிர்ஷ்டம், அது இது என்று கோடிக்கணக்கான நம்பிக்கைகளை ஒருவனுக்குள் கொட்டி அவனைக் குப்பைத் தொட்டியாக்கவே சமூகம் விரும்புகிறது.

சரியாகச் சொன்னால் தன்னை நம்பும் ஒரு மனிதன் சமுதாயத்திற்கு அதிக ஆபத்தானவன். காரணம் சமூகம் அடிமைத்தனத்திற்கே அதிக ஆதரவளிக்கிறது. அடிமைகளையே சமூகம் விரும்புகிறது. அடிமைத்தனத்தில் அது ஏகப்பட்ட முதலீடு செய்திருக்கிறது. முதலீடுகள் வீணாகி விடுமோ என அஞ்சுகிறது. ஏகப்பட்ட நம்பிக்கைகளை வைத்திருப்பவன் தான் அடிமையாக இருக்க முடியும். தன்னை நம்புகிறவனே சுதந்திரமானவன். ஒரு விடயத்தில் அவன் என்ன செய்வான், எப்படி நடந்து கொள்வான் என்றெல்லாம் எவரும் கணிக்க முடியாது. எனவே, தன்னை நம்புகிறவன் வெகுஆபத்தானவன் என்று சமுதாயம் பயப்படுகிறது. எனவே, தன்மீது தான் நம்பிக்கை வைப்பவனை முற்றிலுமாக ஒடுக்கிவிட சமூகம் ஏகப்பட்ட முயற்சி செய்கிறது.

குழந்தை நடக்கத் தொடங்கும்போதே "விழுந்துடுவே.. அடிபட்டுடும்...உன்னால முடியாது.." என்று பிள்ளையார் சுழிபோட்டு, அதன் ஒவ்வொரு தன்னம்பிக்கையான செயலையும் சமூகம் தலையில் அடித்து ஒடுக்குகிறது. எல்லா முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போடுகிறது "ஒத்துக்காது... சரிப்படாது.. ஆகாது.. ராசியில்லை. உனக்கு அதிர்ஷ்டம் இல்ல. நடக்காது.. கிடைக்காது.. பிரயோசனமில்ல" என்று ஏகப்பட்ட அமில வார்த்தைகளால் தன்னம்பிக்கையின் ஆணிவேரை மட்டுமல்ல துப்பித் துளிர் கிளைக்கும் சல்லிவேரைக் கூட சமூகம் அறுத்தெறிகிறது. ஏன் இப்படி?

தன்னம்பிக்கைதான் உண்மையான மலர். அது மலர்ந்து மணம் வீசினால் தான் தன்னை அறிதல் தன்னை உணர்தல் என்று காயாகி, கனியாகி, ஞானவிருட்சம் தழைக்க முடியும். தன்னம்பிக்கை என்கிற நிஜமலரைக் கசக்கி எறிந்து பிளாஸ்டிக் மலர்களை அதாவது கோடி கோடியான போலி நம்பிக்கைகளைச் சமூகம் தயாரித்தளிக்கிறது.

தன்னம்பிக்கை உள்ளவன் ஓர் உயிருள்ள சொந்த மனிதன். ஆனால், இந்தச் சமூகத்திற்கு அப்படிப்பட்ட சொந்த உயிருள்ள மனிதர்கள் தேவை இல்லை. அது இயந்திர மனிதர்களை, ரோபோக்களையே தேடுகிறது. சமூகத்திற்கு அடிமைகள் தான் தேவை. சுதந்திரர்கள் அல்லர். இந்த அடிமை உணர்வுதான் ஹிட்லர், முசோலினி, ஜோசப்ஸ்டாலின், மாவுசேதுங் என்ற அரசியல் சர்வாதிகாரிகளையும் மதத்தின் பெயரால் ஆடு,மாடு போல் மந்தை மந்தையாய் மக்களை ஓட்டிக் கொண்டு போகும் மதமாற்ற வியாபாரிகளையும் துப்பாக்கி, வெடிகுண்டு என்று கடவுளின் பெயரால் இரத்தப் பசியோடு அலையும் அடிப்படை மதத்தீவிரவாதக் கொலைவெறியரையும் உண்டாக்கி இருக்கிறது. இருந்தும் சமூகம் அடிமைகளையும் அதன் எஜமானர்களையும் உண்டாக்க விளைகிறது. சுயமாகச் சிந்தித்து, தன்னம்பிக்கையில் வேரோடி, தனித்துவத்தில் கால் ஊன்றி, பரமாத்மாவை உள்ளது உள்ளபடி உணரும் ஞானோத்சவத்தை அது விரும்புவதே இல்லை.

சமூகத்தில் உள்ள குழப்பமான கூட்டம் கூட்டமான நம்பிக்கைகள் தான் சகல குளறுபடிகளுக்கும் மூல காரணம் என்பது ஏன் எவருக்கும் புரிவதே இல்லை? ஒரு நம்பிக்கை உள்ள கும்பல் வேறொரு நம்பிக்கை உள்ள கும்பல் எதிரியாகவே கருதி, போர், பூசல் என்று தொடங்கி உலகையே ரணகளமாக்கி விடுகிறது என்பதை ஏன் பலரும் உணர மறுக்கிறார்கள் கடவுளைக்கூட நம்புகிறவர்கள் போரும் பூசலும் தான் விளைப்பார்கள். ஆனால், உணர்ந்தவர்கள் ஒரு சிறு சண்டைக்குக்கூடப் போகமாட்டார்கள் என்பதைத் தயவுசெய்து யோசியுங்கள்.

கடவுளை உணர்ந்தவர்கள்,

**"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன் விரையார் கழற்கு என் கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி"**

கரைந்துருகுவார் என்கிறது திருவாசகம். "என்பு எனக்கு உருகுகின்றது" என்று ராமனை உணர்ந்த அனுமன் பேசுவதாகக் கம்பன் சொல்கிறார். உணர்ந்தவர்கள் கரைந்து போவார்களே ஒழிய அகங்காரத்தால் தடித்து அடுத்தவனை அழிக்கவா செய்வார்கள்? கடவுளை நம்புகிறவர்கள் சண்டையிடுவார்கள். மண்டை உடைப்பார்கள்.ஆனால் உணர்ந்தவர்களோ கடவுளில் கரைந்து அல்லவா போய்விடுகிறார்கள்.

**சுகி.சிவம்**

# கோழிப் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

*கடந்தவார (திங்கள்)தொடர்ச்சி*

* நீர்த்தன்மையான வெண்ணிற வயிற்றோட்டம் காணப்படும்.
* உணவு உட்கொள்ளல் குறைவடையும்.
* நீர்த்தாகம் அதிகரிப்பதால் அடிக்கடி நீர் அருந்துதல்.
* நடுங்குதல், அதன் இறுதிக் கட்டத்தில் தலையை நிலைத்தில் வைத்துப் படுத்தல்.

**இந்த நோய்க்கான தடுப்பு முறைகள்**

* பண்ணைகளைச் சுகாதாரமாகப் பேணுதல்.
* இதற்காக கால்நடை வைத்தியரை அணுகி நோய் பரவுமுன் தடுப்புசி ஏற்றுதல்.
* இன விருத்திப் பண்ணைகளில் பெற்றோர் பறவைகளுக்குத் தடுப்புச் செய்வதன் மூலம், குஞ்சுகள் இந்த நோயால் பாதிப்படைவதைக் குறிப்பிட்ட அளவு குறைத்துக் கொள்ளலாம்.
* ஒரு நாள் குஞ்சுகளை விநியோகிக்கும் இனவிருத்திப் பண்ணைகளில் அவற்றின் பெற்றோருக்குச் சரியான முறையில் கம்போறா நோய்க்கு எதிரான தடுப்புச் செய்யப்பட்டுள்ளதா எனக் கேட்டு அறிந்து குஞ்சுகளைக் கொள்வனவு செய்யவும்.

**(iv) ஏவியன் என் செபலோமையலைற்றிஸ்**

**நோய்க்கான அறிகுறிகள்:**

* இந்த நோய் ஏற்பட்டுள்ள கோழியின் முட்டையில் இருந்து பொரிக்கும் குஞ்சுகளுக்கு ஏற்படுகின்றது.
* 2-5 கிழமை வயதுடைய குஞ்சுகளுக்குப் பொதுவாக ஏற்படும்.
* நோய்ப்பட்ட பறவைகள் முதலில் பலவீனமாகக் காணப்படும்.
* நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டுத் தள்ளாட்டம் காணப்படும்.
* கழுத்துப்பகுதி நடுங்கல் காணப்படும்.
* நிற்க முடியாது குஞ்சுகள் விழும். ஏனைய பறவைகளால் மிதிபடும். உணவும், நீரும் எடுத்துக் கொள்ள முடியாது இறக்கும்.
* நோய் ஏற்பட்ட பண்ணைகளில் 30%-60% இறப்பு ஏற்படுத்தும்.

**இந்த நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:**

* பண்ணைகளைச் சுகாதாரமாகப் பேணுதல்
* உரிய தடுப்பூசியை அருகில் உள்ள கால்நடை வைத்தியரிடம் பெறல்.
* பெற்றோர் பரம்பரைக்கு உரிய வயதில் 12-14 கிழமையில் தடுப்பூசி ஏற்றல் வேண்டும்.
* நோய் ஏற்பட்ட பின் சிகிச்சை பயன் தரமாட்டாது. வரமுன் காத்தல் வேண்டும்.

**(v) இன்பெக்ஸஸ் புரொன்கைடிஸ்**

**நோய் அறிகுறிகள்:**

இது எல்லா வயதுக் கோழிகளையும் பீடிக்கக் கூடிய நோய். ஆனால் குறிப்பாகக் குஞ்சுகளில் மாத்திரம் சுவாசத் தொகுதிகளைத் தாக்கிப் பாதிப்பை ஏற்படுத்தும். பாதிப்பு அறிகுறிகளைக் காட்டுவதுடன் அதிகமான இறப்பு வீதத்தையும் கொண்டிருக்கும்.

* கோழிகளில் இருமல், தும்மல், சளி, நாசி, வாய் வழியே வடிதல்.
* சுவாசிக்கும் போது சுவாச வழியிலிருந்து வித்தியாசமாக ஒரு சத்தம் கேட்டல்.
* சில சமயம் கண்கள் ஈரத் தன்மையாகவும் முகம் வீங்கியும் காணப்படும்.
* குஞ்சுகள் ஒன்றோடொன்று நெருங்கும். கூட்டின் மூலைகளில் கூட்டமாக ஒதுங்கி நிற்றல்.
* இதைவிட இந்த வைரஸ் குஞ்சுகளின் சிறுநீரகமும் வளர்ந்த பேட்டுக் கோழிகளில் இனப்பெருக்கத் தொகுதியையும் தாக்கிப் பாதிப்பை ஏற்படுத்தும்.
* முட்டை இடும் கோழிகளில் இந்த நோய் ஏற்படின் முட்டை உற்பத்தி குறைதல், முட்டை சிறிதாதல், முட்டையின் தன்மையும் வேறுபடும்.

**இந்த நோய்த் தடுப்பு முறைகள்:**

* பண்ணைச் சுகாதாரத்தைப் பேணவும்.
* தடுப்பூசியை உரிய வேளையில் வழங்குதல்.

**(vi) சிக்கன் அனிமியா நோய்/ கோழிக்குஞ்சுகளுக்கான குருதிச்சோகை நோய்**

இது பொதுவாகப் பெற்றோரில் இருந்து குஞ்சுகளுக்குப் பரவுகின்றது. பொதுவாக 1-6 கிழமை வயதுக்குட்பட்ட குஞ்சுகளைப் பாதிக்கின்றது. நோயுற்ற பறவைகள் நலிந்து குருதிச் சோகையுடன் காணப்படும். இந்தநோயின் தாக்கம் பிற்பகுதியில் இறுதியாக தோல், இறக்கைகளின் அடிப்பகுதியில் உருவாகும் காயங்களின் ஊடாகப் பக்றீரியாத்தொற்று. அவை மிக விரைவாக மரணமடையும்.

**(vii) ரீயோ வைரஸ் மூலம் பரவும் நோய்**

**நோய்க்கான அறிகுறிகள்**

* இந்த வைரஸினால் மூட்டுக்கள் பாதிப்படைவதுடன் வளர்ச்சியும் குன்றும்.
* ஒரே வயதுடைய பறவைகளின் வளர்ச்சி ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்படும்.
* 5 கிழமைகள் வயதிற்குட்பட்ட குஞ்சுகளில் மூட்டுகள் பாதிக்கப்படும், அப்பறவைகளின் கால் முடங்கி நடப்பதற்குக் கஷ்டப்படும்.

**நோய்த்தடுப்பு முறைகள்:**

* பெற்றோர் தொகுதிக் கோழிகளுக்குத் தடுப்பூசி ஏற்றல்.
* சிறந்த சுகாதார வழிமுறைகளைப் பேணுதல்.

*(தொடரும்)*

**ஆ.சிவானந்தன்**
*மாவட்ட அலுவலர்,
ஐக்கிய நாடுகள் உணவு
விவசாய நிறுவனம்,
யாழ்ப்பாணம்.*





# நெற்பயிரில் இலைச்சுருட்டிப்புழுவின் தாக்கம்

யாழ்.குடாநாட்டில் இந்தக் காலபோகத்தில் 10520 ஹெக்ரயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கதிர்த் தொடக்கப் பருவம், குடலைப்பருவம், பூத்தல் பருவம் எனப் பல வளர்ச்சி நிலைகளில் நெற்பயிர் காணப்படுகின்றது. இந்தநிலையில் இலைச்சுருட்டிப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதன் தாக்கம் சுழிபுரம் மேற்கு, சங்குவேலி, மல்லாகம், அளவெட்டி, மறவன்புலவு, தனங்கிளப்பு, நாவற்குழி, வல்லிபுரம், மிருசுவில் வடக்கு, நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, மண்டுவில் வயல் வெளிகளில் அதிகமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவுகின்ற மப்பும் மந்தாரமானதும், சாரீரப்பதன் கூடியதுமான இந்தக் காலநிலை இந்தப் பூச்சியின் பெருக்கத்துக்குச் சாதகமாகவுள்ளது.

இறக்கைகளின் விளிம்பில் கருங்கபில நிறக் கரையினையும், அலைபோன்ற குறுக்குக் கோடுகளையும் உடைய பொன்னிறமான 8-10 மி.மீ நீளமான நிறையுடலிகள் மாலை நேரத்தில் பயிர்களிடையே நடமாடுவதைக் காணலாம்.

இவற்றினால் இலை மேற்பரப்பில் இடப்படும் முட்டைகள் பொரித்து மஞ்சள், பச்சை நிறமான குடம்பிகள் உருவாகும். இந்தக் குடம்பிகள் இளம் இலைகளின் மேற்பரப்பைச் சுரண்டி உண்டு சேதம் செய்யும். 2ஆவது கவசம் கழற்றலின்போது இலைகளின் விளிம்புகளை இணைத்து அதனுள்ளிருந்து கொண்டு சுரண்டி உண்டு சேதம் செய்யும். இதனால் விளைவில் இழப்பு ஏற்படும்.

* இதன் தாக்கம் வயலில் நிழல் விழும் இடங்களில் ஆரம்பித்துப் பரவிச்செல்லும். ஆகையால் வயலுக்கு அண்மையில் பற்றைகளிருப்பின் அவற்றினை வெட்டி அகற்றுவதுடன் அண்மையில் உள்ள மரங்களின் கிளைகளையும் வெட்டி அகற்றவும்.
* இதன் தாக்கம் காணப்படும் வயல்களில் கொக்குகள் நின்று இந்தப் புழுக்களைப் பொறுக்கி உண்பதைக் காணலாம். கொக்குகள், பறவைகள் தங்கி இருப்பதற்குத் தென்னம் மட்டைகளை அடிப்பாகம் மேற்புறம் இருக்கக் கூடியவாறு வயல்களில் நட்டுவிடவும்.
* வயல் வெளிகளில் உள்ள வரம்புகளிலுள்ள புற்களைத் தாள்கத்தியினால் வெட்டித் துப்புரவாக வைத்திருக்கவும்.
* தாக்கம் அதிகமான நிலையிலுள்ள வயல்களுக்குக் கீழ் குறிப்பிடப்படும் பூச்சி நாசினிகளில் ஒன்றைக் காலநிலையை அனுசரித்து விசிறவும்.

ஒரு வயலில் இலைச்சுருட்டி தொடர்ந்தும் தாக்கினால் முதற்பயிரில் வெளிவரும் இலைகள் தொடர்ந்தும் தாக்கப்படும். இப்படியான வயல்களில் சுருட்டப்பட்ட புதிய இலைகளை விரித்துப் பார்த்தால் உள்ளே புழுக்களை அவதானிக்கலாம்.

எனவே, விவசாயிகள் வயல்களில் ஆங்காங்கு இறங்கிப் புதிதாகத் தாக்கப்பட்ட இலைகளைப் பிடுங்கிப் பார்த்துப் புழுக்களை அவதானித்தால் மட்டுமே நாசினிகளை விசிற வேண்டும். தற்போது பல நெல்வயல்கள் பூக்கும் நிலையில் காணப்படுவதால் பிற்பகலில் (3 மணிக்குப் பின்) நாசினிகள் விசுறுவது உகந்ததாகும்.

**க.தனபாலசிங்கம்**
*பாடவிதான உத்தியோகத்தர்
(பயிர்ப்பாதுகாப்பு),
பிரதி விவசாயப் பணிப்பாளர்(விரி)
அலுவலகம், யாழ்ப்பாணம்*

| இரசாயனப் பெயர் | கலவைஅளவு | 16 லீற்றர் தாங்கிக்கு |
|---|---|---|
| பிப்றோனில் 50கிராம்/லீற் எஸ்.சி | 12 மிலீ/ 10 லீற்றர் | 19 மி.லீ |
| ரெபியூபெனோசைட் 240 கிராம்/ லீற் எஸ்.சி | 20 மிலீ/ 10 லீற்றர் | 32 மி.லீ |
| மெதொக்சி பெனோசைட் 240 கிராம்/ லீற் எஸ்.சி | 10 மிலீ/10 லீற்றர் | 16 மி.லீ |
| குளோர் புளுசரோன் 50 கிராம்/ லீற் ஈ.சி | 8 மிலீ/10 லீற்றர் | 12மி.லீ |
| குறோமோ பெனோசைட் 50 கிராம்/ லீற் எஸ்.சி | 10 மிலீ/10 லீற்றர் | 16 மி.லீ |
| நவலுறோன் 100கிராம்/ லீற் ஈ.சி | 10 மிலீ/ 10 லீற்றர் | 16 மி.லீ |
| குளோர்பைறிபொஸ் 200 கிராம்/ லீற் ஈ.சி | 40 மிலீ/10 லீற்றர் | 64 மி.லீ |
| குளோபைறிபொஸ் 400 கிராம்/ லீற்றர் ஈ.சி | 20 மிலீ/10 லீற்றர் | 32 மி.லீ |
| பென்தியோன் 500 கிராம்/லீற் ஈ.சி | 50 மிலீ/10லீற்றர் | 80 மி.லீ |
| எசபேற் 75% எஸ்.பி | 10 கிராம்/10 லீற்றர் | 24 கிராம் |

# யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

*(சென்றவாரத்தொடர்ச்சி.....)*

மக்களின் அழியாச் சொத்தாகிய கல்வியை வளப்படுத்துகின்ற அடிப்படைப் பணியை ஆரம்ப நிலைப் பாடசாலைகளே ஆற்றுகின்றன. அந்த வகையில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை தனக்குரித்தான பணியை செவ்வனே மேற்கொண்டு வருகின்றது.

ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் துறைசார்ந்த நிபுணர்களால் மாணவர் சுகவாழ்வுக்கான பத்து நிமிடப் பேச்சு இடம்பெறும். அத்துடன்.பண்புசார் விருத்தியை ஊக்குவித்து மனிதநேயத்தை வளர்ப்பதற்காக ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் சத்தியசாயி நிலையத்தினர் பாடசாலைகளுக்கு வருகை தந்து காலை ஆராதனையின் போது குட்டிக் கதைகள் மூலம் ஒழுக்கக் கருத்துகளைக் கூறி வருகின்றார்கள். இவ்வாறு மாணவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்குப் பல்வேறு செயற்றிட்டங்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாடசாலையின் ஆசிரியராக 1982 ஆம் ஆண்டு தொடக்கம் சேவையாற்றி வந்த திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் பிரதி அதிபராகவும் கடமையாற்றி 1996 ஆம் ஆண்டு பாடசாலையின் இரண்டாவது அதிபராகப் பொறுப்பேற்று தற்பொழுதும் சேவையாற்றி வருகின்றார். கடந்த 29 வருடகாலங்களாக ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும், அதிபராகவும் சேவையாற்றி வரும் இவரது பணியின் திறமைகள் பாடசாலையின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

இந்தப் பாடசாலையின் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்க்கும் போது 2010 ஆம் ஆண்டு 102 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி அனைத்து மாணவர்களும் 70




புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. செல்வி துளசிகா மூர்த்தி பாடசாலை மட்ட உயர்புள்ளியாக 181 புள்ளிகள் பெற்று யாழ்.மாவட்டத்தில் 6ஆம் இடத்தைப் பெற்றமை சிறப்பம்சமாகும்.

*பாடசாலையின் இரண்டாவது அதிபரின் பெயர் தனரஞ்சினி துரைசிங்கம் என்பதற்குப் பதிலாக துளசிகா மூர்த்தி எனவும் புலமைப்பரிசில் பரீட்சையின் 2010 ஆம் ஆண்டுக்கான உயர்புள்ளி 181 இற்கு பதிலாக 102 எனவும், மிஷன் பாடசாலை எனவும் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு மன்னிக்கவும்.*

இச்செயற்பாடுகள் மாணவர்களின் கல்வி ஆற்றலை வெளிப்படுத்துகிறது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மட்டுமல்லாது பாடசாலைச் சூழலை ஆரோக்கியமாக வைத்திருப்பதில் இப்பாடசாலை முன்னணியில் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆரோக்கியமான சிறந்த சூழலைக் கொண்ட பாடசாலையாகச் சுற்றாடல் அதிகார சபையால் இப்பாடசாலை தெரிவு செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் 2007,2008 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

சுற்றாடல் அதிகார சபையால் நடத்தப்பட்ட உலக சுற்றாடல் தின திறந்த நாடகப் போட்டியில் 2005 ஆம் 'வனத்திற்கு வாழ்வு அளிப்போம்' எனும் தலைப்பில் மாணவர்களால் காட்சிபடுத்தப்பட்ட நாடகப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பிள்ளை நேயப் பாடசாலையாகவும் பாடசாலையின் தூரநோக்கு நோக்கக்கூற்று என்பவற்றுக்கு அமைவான இப்பாடசாலை சிறப்புற இயங்கி வருவது விசேட அம்சமாகும்.

அத்துடன் இப்பாடசாலை சைவப் பாரம்பரியத்தையும் மனித விழுமியங்களையும் கட்டிக்காக்கும் பெண் சிறுமியரின் ஆரம்பப் பாடசாலையாகவும் மிளிர்வது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பாடசாலையின் மன்றச் செயற்பாடுகளாகத் தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், இந்து மன்றம், கவின் கலை மன்றம் போன்றவை உள்ளன.

தமிழ் மன்றம் ஊடாக மாணவர்களின் மொழித்திறன் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்காக வகுப்பு ரீதியாகப் போட்டிகளை நடத்தி திறமையான மாணவர்களைத் தெரிவு செய்து கோட்ட, வலய, மாவட்ட, தேசிய மட்டத் தமிழ்த் திறன் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு வழிசமைக்கின்றது.

2004 ஆம் ஆண்டு தேசியமட்டப் போட்டியில் தனி நடனத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த மன்றச் செயற்பாடுகளாக பண்ணிசைப் போட்டி, சைவநெறிப் போட்டி, சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்படுகின்ற போட்டி போன்றவற்றில் மாணவர்களைப் பங்குபெறச் செய்து வெற்றி பெறுவதற்கு இம்மன்றம் பயிற்சிகளை வழங்கி மாணவர்களை ஊக்குவிப்புச் செய்கின்றது. 2004 ஆம் ஆண்டு சைவப்பரிபாலன சபையினால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் ஜெ.ஜானகி என்ற மாணவி தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டமை இந்து மன்றத்தின் திறமைமிக்க செயற்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றது.

**நிஸா,வாணி**

*(தொடரும்)*

# அருகிவரும் மாணவர்களுடன் அரியாலை ஆனந்த வித்தியாலயம்

**யாழ்.** மாநகர எல்லைக்குள் நகரின் சிறப்புக்கும் உருவாக்கத்திற்கும் அழகுக்கும் அடையாளங்களாகத் திகழும் ஆலயங்கள், பாடசாலைகள், பொதுநிறுவனங்கள், வரலாற்றுச்சின்னங்கள், மக்கள் நலன் சார் அமைப்புக்கள் போன்றவற்றின் தோற்றம், செயற்பாடுகள், பலாபலன்கள் இன்னோரன்ன தேவைகளை வெளிக்கொணர்ந்து வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் யாழ். நகரவலப் பயணத்தில் சந்தித்த வித்தியாசமான ஆச்சரியமிக்க ஆனால் அவசியமான ஒரு வரலாற்றுத் தேடலுடன் உங்களைச் சந்திக்கின்றேன்.

இன்றைய நகர்ப்புற கல்விப்புல மையங்கள் (பாடசாலைகள்), கல்வி, விளையாட்டு, கலைத்துறைகளுடன் பௌதிக வளங்களிலும் அபார வளர்ச்சி கண்டு சாதனைகள் படைத்துத் தத்தமது பெயரை நிலைநாட்டி வருகின்றன. இவற்றால் ஈர்க்கப்பட்ட பெற்றோரும் தமது பிள்ளைகளைப் பேர் பெற்ற பாடசாலைகளில் இணைக்க முண்டியடிப்பதனால் அன்பளிப்புத் தொகை விஷம் போல் ஏறுகின்றது. இடநெருக்கடியும் தோன்றுகிறது. காலடியில் பாடசாலை இருக்கப் பல காதவழி கடந்து சென்று கல்வி கற்கும் கலாசாரம் வளர்கிறது. சில பாடசாலைகள் மாணவர்களால் நிரம்பி வழியும் போது புறநகர் கிராமப் பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

இலங்கையில் சில பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஒரு சில மாணவர்களும் ஆசிரியர்களும் மட்டும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகக் கண்டறியப்பட்டமை செய்திகளாக அண்மையில் படித்த ஆச்சரியமும் நகைச்சுவையும் அடைந்திருப்போம். 'தன் கண்ணைத் தான் பார்ப்பதில்லை' என்பது போல எமது பகுதியிலும் இவ்வாறானதொரு பாடசாலை இயங்கிக் கொண்டிருப்பது வியப்புக்குரியதுதான். கல்வியே கண்ணெனப் போற்றும் தமிழர் தேசத்திலும் இந்த நிலையா? என்று எண்ணத் தோன்றுகிறது.

அரியாலைப் பிரதேசத்தில் யாழ். கல்வி வலய எல்லைக்குள் 90 வருடங்களுக்கு மேலாக 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான' கதையாகக் கல்விப் பணி புரிந்து வருகின்றது யாழ். நல்லூர் ஆனந்த வித்தியாலயம். செ்ன்.பெனடிக்ற் வீதியில் அரியாலை காந்தி சனசமூக நிலையத்திற்கு அண்மித்த இடத்தில் இப்பாடசாலை அமைந்துள்ளது. 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய பௌதிக வளங்கள் உள்ள இப்பாடசாலையில் தற்போது 17 மாணவர்களே கல்வி கற்று வருகிறார்கள். தரம் ஒன்றிலிருந்து தரம் 5 வரையான இம்மாணவர்களுக்குக் கல்வி புகட்ட தலைமை ஆசிரியர் உட்பட நான்கு ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். பிரபலமான பாடசாலைகளுக்கு மத்தியில் 'இலை மறை காய் போல்' ஆனந்த வித்தியாலயம் இருப்பதை யார் தான் அறிந்திருப்பர்.

பல பின்னடைவுகளைச் சந்தித்தபோதும் தளராது கல்விப் பயிர் வளர்க்கும் பாடசாலையின் தோற்றம், வளர்ச்சி, உருவாக உந்துசக்தியாக இருந்த காரணகாரியங்கள், ஸ்தாபகர்கள் யார் யார் என்பது பற்றி நோக்குவோம்.

அன்றைய காலப்பகுதியில் அரியாலை மேற்குக் கிராமத்தில் நல்லூர் இராசதானியின் தீர்மானங்கள், சட்டதிட்டங்களைப் பறையறைந்து மக்களுக்கு அறிவிக்கும் தொழிலை மேற்கொண்டு வந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். பறை அறிவிப்போர் வசித்தமையால் இப்பகுதியை 'பறைய தெரு' எனப் பழைய தோம்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

யோ.சுதாஸ்




காலப்போக்கில் அரச கருமங்களில் உயர் பதவிகளை வகித்தவர்கள் இவர்களை ஒதுக்கி வைக்கும் நிலை தோன்றியது. உயர்குடிமக்கள்- தாழ்த்தப்பட்டோர் பாகுபாடு வலுப்பெற்று வந்தமையால் தத்தமது சமூகங்களுக்கென கோயில்கள், பாடசாலைகளை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பொதுஇடங்களில் ஒடுக்கப்பட்டோருக்குப் பிரத்தியேக ஒதுக்கப்பட்ட பகுதிகளென அநாகரிகமான செயற்பாடுகள் மேலோங்கி வளர்ந்திருந்தது. இது கல்வித்துறையிலும் ஆதிக்கம் செலுத்தியது.


இந்தத் தீண்டாமை என்னும் கொடிய அரக்கனின் கோரத் தாண்டவம் இந்தியாவிலே இறுக்கம் பெற்ற வர்ணாச்சிரமநெறியின் தாக்கமாகும். இதனாலே பல சமூகம் சார் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் உருவாக வழிகோலியது. எவ்வாறாயினும் தமது சந்ததி கல்வியறிவில் முன்னேறவேண்டுமென்று உணர்ந்த பெரியோர்கள் அரியாலை மேற்குக் கிராமத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தை அமைத்து சிறுவர்களுக்குத் தமிழ் எழுத்துக்களை மட்டுமே கற்பித்து வந்தனர்.

*(தொடரும்)*

### சண்முகநாதன்- அருள்நங்கை அவர்களின் அருமைப் புத்திரன்

# சந்துதனின்

## 11ஆவது பிறந்த நாள்




எங்கள் அன்புச் செல்வன் சந்துதா! கடந்த ஒன்பது ஆண்டு காலமாக உமது பிறந்த நாளில் உம் இல்லம் மகிழ்ச்சியும் கொண்டாட்டமுமாக ஆர்ப்பரித்து மகிழ்ந்தோமையா! ஆனால் தற்சமயம் இந்நாள் எங்களுக்கு மன வேதனையும் கண்ணீர்விடும் நாளாகவும் மாறிவிட்டதையா! நீர் எமக்கு மட்டுமல்ல உற்றார், உறவினர், நண்பர்கள் நீர் கல்வி கற்ற யாழ்.டொன் பொஸ்கோ அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருடனும் அன்பு, பண்பு, அறிவாற்றலுடனும், கவர்ச்சிகரமாயும் எல்லார் மனத்திலும் இடம்பிடித்தாயையா! நீ எங்களுடன் வாழ்ந்த காலங்களில் நீ கேட்டதெல்லாம் வாங்கித்தந்து மகிழ்ந்திருந்தோமையா! இப்போது நீ எல்லாரையும் மறந்து எங்கு சென்றாய் என்று தேடி அலைகின்றோமையா? நீர் எங்களுடன் வாழ்ந்த காலத்தில் எடுக்கப்பட்ட நிழற்படங்களுக்கு உயிரூட்டி உமது இல்லத்தில் 'சந்துதம்' எனும் நினைவாலயம் அமைத்து உன்னை வழிபட்டு உனது நினைவுடன் உன்னோடு வாழ்கின்றோமையா! நீர் துயில் உற்றிருக்கும் ஆலயத்தை தூய்மைப்படுத்தி, மகன் தூங்கும் இல்லமாக மதித்துத் தவறாது சென்று வருகின்றோமையா! உற்றார், உறவினர், நண்பர்களே உமை மறக்கத் தவிக்கும்போது எம்மால் மட்டும் உம்மை மறக்க முடியுமா? நீ எதனையெல்லாம் எமக்கு ஆணையிட்டாயோ அதனையெல்லம் நிறைவேற்றி வாழ்கின்றோமையா! இனிவரும் காலங்களில் உன்னிடம் வந்துசேரும் நாள்தான் எங்களுக்கு மகிழ்ச்சியான நாளாகும், நீ தூங்கினாலும் உன் நினைவால் எங்களால் தூங்கமுடியவில்லை ஐயா! அன்புச் செல்வனே! நீ எங்களை விட்டுச் சென்றாலும் ஒவ்வொரு ஆண்டும் உமது வளர்ச்சியை எம் கண்முன்னே நிறுத்தி நீ எப்படி இருப்பாய் என்பதை எங்களால் காண முடிகின்றது. நீ என்றும் எங்களுடன் வாழ்கின்றாய் எனும் நினைப்புடன் வாழும்.....

**பெற்றோர்.**

*'லக்சும்',*
*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.*

(சி/575721)

# இருளின் கதவுகளைத் திறந்தவன் 20



**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

இணையவழித் தொடர்பாடலில் உருமறைப்புச் செய்வதற்கு பயன்படுத்தப்படும் ரீ.ஓ.ஆர் வலையமைப்பில் சேர்ந்து கொள்வதற்கு முதலில் அதன் மென்பொருளைத் தரவிறக்கி(டவுண்லோட்), உங்கள் கணினியில் நிறுவிக் கொள்ளவேண்டும்.

( அவ்வாறு தரவிறக்கிக் கொள்வதற்கான இணைய முகவரி இதுதான் : http://www.torproject.org/download/download.html.en ).

இந்த மென்பொருளைத் தரவிறக்கம்(டவுண்லோட்) செய்த பின்னர் அதில் இருக்கும் றிலே (Relay) என்றொரு வசதியைத் தேர்வு செய்யவேண்டும். அஞ்சலோட்டம் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒருவீரர் ஓடி வந்து கோலைக் கொடுக்க, அதை வாங்கிக் கொண்ட மற்றைய வீரர், தனக்காகக் காத்திருக்கும் அடுத்த வீரரிடம் அந்தக் கோலைக் கையளிக்க அதே வேகத்துடன் விரைந்து செல்வார். இறுதியில் அந்தக் கோல் நான்காவது வீரரால் இலக்கை எட்டிவிடும். கடைசியில் அந்தக் கோலை எடுத்துவரும் வீரருக்கும் முதலில் கோலை கையில் எடுத்துக் கொண்டு போட்டியை ஆரம்பித்த வீரருக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதில்லை.

இதே போன்றுதான் ரீ.ஓ.ஆர் வலையமைப்பில் குறித்த கணினியும் ஏனைய வழங்கிகளூடாக இத்தகைய பரிமாற்றத்தை ஏற்படுத்தி ஒரு தொடர்பு வழங்கியாகச் செயற்படத் தொடங்கிவிடும்.

இந்த மென்பொருளை சரியான உள்ளீடுகளுடன் செயற்படுத்தினால் இரகசியச் சங்கேதக் குறியீடுகளின் தொடர்புப் புள்ளிகளின் வழியாக மட்டுமே இணையத் தொடர்புகள் நடைபெறும். ஒரு தொடர்புக்கு குறைந்த பட்சம் மூன்று தொடர்பு வழங்கிகளை ரீ.ஓ.ஆர். பயன்படுத்தும். அதாவது ஒரு கணினியில் இருந்து அனுப்பப்படும் தகவல்கள் இன்னொரு கணினியிடம் கையளிக்கப்பட்டு பின்னர் அது இரண்டாவது கணினியில் இருந்து புதிதாகத் தனது பயணத்தைத் தொடங்கும்.அத்துடன் குறித்த தொடர்பு வலையமைப்பினையும்,வழங்கிகளின் தன்மையையும் எப்போது வேண்டுமானாலும் மாற்றி அமைத்துக் கொள்ளக்கூடிய வசதியும் ரீ.ஓ.ஆர். மென்பொருளில் உண்டு.

ரீ.ஓ.ஆர். வலையமைப்பில் ஒவ்வொரு தொடர்புப் புள்ளியிலும் தகவல்கள் வேற்று நபர்களுக்குப் புரியாத - ஒரு விதமான - சங்கேதக் குறியீடுகளாக மாற்றியமைக்கப்படும். ஒரே தன்மையானதாக இல்லாது வெவ்வேறான அடுக்கு குறியீட்டு முறைகள் இதற்குப் பயன்படுத்தப்படுவதால், கணினியினூடாக ஏதோ ஒரு தகவல் பறந்து செல்கிறது என்பது யாராவது மோப்பம் பிடித்தாலும் கூட , என்ன தகவல் பயணிக்கின்றதென்பதை கடைசிவரையும் கண்டுபிடிப்பது கடினம். இவ்வாறான பாதுகாப்புக் கவசங்களைக் கொண்டிருந்ததாலேயே விக்கிலீக்ஸ் தகவலாளிகள் இதனைப் பயன்படுத்தலாம் என யூலியன் அறிவித்தான்.

இந்த வலைச் சங்கிலித் தொடர்பினை ஆய்வு செய்பவர்களுக்கு அதிர்ஷ்டமிருந்தால் கூட்டத்தோடு கூட்டமாக தேவைப்படும் வலையமைப்பின் எண் மட்டுமே கிடைக்க வாய்ப்பிருக்கிறதே தவிர, குறிப்பிட்டத் தகவலை யார் அனுப்பினார்கள் என்பதை நிரூபிக்கச் சந்தர்ப்பமே இல்லை. மேலும் ரீ.ஓ.ஆர். சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மென்பொருள் என்பதால் அதனைப் பயன்படுத்துவதாலோ அல்லது அதன் வழித்தடத்தில் அஞ்சலோட்டத்தைச் (relay) செய்யும் தொடர்புப் புள்ளியாக இருப்பதாலோ யாரும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்பதும் ஒரு முக்கிய அம்சம்.

யுத்தம் செய்யும் போது தமது தரப்பிலுள்ள குறைகளைக் கண்டறிந்து அவற்றை உடனேயே சரிவர நிவர்த்திப்பதுதான் வெற்றிகளை நிரந்தரமாக்க உதவும். இணையத் தொழில்நுட்பத் துறையைக் கரைத்துக் குடித்திருந்தாலும் கூட புதிய விடயங்களை அறிந்து கொள்வதிலும், தன்னுடைய பலவீனங்களான விடயங்களை இனங்கண்டு அதைக் களைவதிலும் யூலியன் பின்னின்றதில்லை. ரீ.ஓ.ஆர். மென்பொருளின் மூலம் தன்னுடைய தகவல் வழங்குநர்கள் பற்றிய விவரத்தை பாதுகாப்பதில் வெற்றிகண்ட மகிழ்வோடு தன்னுடைய நீண்டகால இலக்கான அமெரிக்கா மீது ஊடக யுத்தத்தைத் தொடங்க யூலியன் முடிவெடுத்தான். இதுநாள் வரை யூலியன் விக்கிலீக்ஸ் மூலம் வெளியிட்ட விடயங்கள் கூட அமெரிக்கா மீதான அவனுடைய ஊடகத்தாக்குதலுக்கான ஒத்திகைகள்தான். அவற்றின் போதெல்லாம் யூலியன்தான் அந்தத் தகவல்களை வெளியிட்டிருந்தான் எனத் தெரிந்திருந்தும் அவனது நிழலைக் கூட எவராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

ஒளண்யன்

கடைசியாகத் தனிநபர் தாக்குதலின் போது அமெரிக்கா என்னவிதமான பிரதிபலிப்பைக் காட்டுகிறது என்பதைப் பரீட்சிக்க யூலியன் விரும்பினான். அதற்காக அவன் தேர்ந்தெடுத்த நபர் அமெரிக்காவின் அலாஸ்கா மாநில ஆளுநர் சாரா போலின். யூலியனிடம் வாங்கி கட்டிக்கொண்ட சாரா போலின் இன்று வரைக்கும் யூலியனைத் திட்டித் தீர்த்துக்கொண்டேயிருக்கிறார். அப்படி அவர் யூலியன் மீது கொலை வெறியோடு அலையுமளவுக்கு யூலியன் என்னதான் செய்தான்?

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்

ஒன்பதாம் ஆண்டு நிறைவு நினைவு அஞ்சலி!



மண்கும்பான் உயர்குடித் தோன்றல்
அமரர் ஐயம்பிள்ளை நடராசா
(உரிமையாளர், மைதிலி நகைமாடம்)
திதி: 07.02.2011

மலர்வு
14.04.1947

உதிர்வு
17.01.2002


ஆண்டுகள் ஒன்பது சென்றுவிட்டன - தங்களின்
ஆனந்த முகத்தைக் கண்டு!
சாந்தமான தங்களின் பேச்சைக் கேட்க
ஆவலாய் நிற்கின்றோம்!
அனுதினமும் தங்களின் நினைவுடன்- நாம்
அலை மோதி நிற்கின்றோம்!
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன்!
மறுபடி உங்களைக் காண்போம்
இறைவனின் வருகையிலே!
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



மைதிலி நகைமாடம்
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7902

என்றும் நினைவுடன் வாழும்:
யாழ்.மைதிலி ஜுவலர்ஸ்
79/, செட்டியார் தெரு,
கொழும்பு- 11, தொ.பே: 0112396239.

கருத்து வெளியீடு...



ஒற்றுமை: அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும், கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பரும் இணைந்து கூட்டறிக்கை அளித்தனர். இதில் தான் ஒபாமா எகிப்து பிரச்சினை குறித்து கருத்து தெரிவித்தார். (ம)

# இளவரசர் வில்லியமின் திருமணம்: சிறப்பு தபால் தலைகள் வெளியீடு

லண்டன், பெப்.07

இளவரசர் வில்லியமின் திருமணத்தினையொட்டி எதிர்வரும் மே இரண்டாம் நாளன்று கனேடியத் தபால் திணைக்களம் இரண்டு தபால்தலைகளை வெளியிடவிருப்பதாக அறிவித்திருக்கிறது.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கனேடியத் தபால் திணைக்களத்தின் மூத்த அதிகாரி கூறியதாவது:-

இளவரசர் வில்லியமின் திருமணத்தினைச் சிறப்பிக்கும் வகையில் தபால் தலைகளை வெளியிடும் எண்ணம் எதுவும் கனடாவிற்கு இல்லை என்றும், டயானாவின் திருமணத்துக்குக் கூட தாங்கள் தபால் தலைகள் எதனையும் வெளியிடவில்லையே என்றும் குறிப்பிட்டிருந்தார். இருப்பினும் தனது இந்த முடிவினை மாற்றிக்கொண்டிருக்கும் தபால் திணைக்களம் இரண்டு சிறப்புத் தபால் தலைகளை வெளியிட இருக்கிறது.

லண்டன் மாநகரின் இதயப் பகுதியில் உள்ள வெஸ்ட் மினிஸ்ரர் பகுதியில் எதிர்வரும் ஏப்ரல் 29 ஆம் நாளன்று பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் இந்தத் திருமணம் இடம்பெறு வதற்கு ஏற்படாகியிருக்கிறது.

கடந்த ஆண்டு நவம்பர் 16ஆம் நாளன்று பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸினது அலுவலகம் இளவரசர் வில்லியமின் நிச்சயதார்த்தம் தொடர்பான உத்தியோகபூர்வ செய்தியினை வெளியிட்டிருந்தது.

ஒரு வாரத்தின் பின் இந்த அரசகுடும்பத் திருமணத் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

இங்கிலாந்தின் தென்பகுதியின், பிளெக்பெறி என்ற சிறிய நகரத்தினைச் சேர்ந்த கதறின் எலிசபெத்துக்கும் இளவரசர் வில்லியமிற்கும் இடையிலான உறவு 2007ஆம் ஆண்டுமுதல் முளைவிட்டிருந்தது.

இதற்கு முன்னர் 1948 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரிட்டிஷ் இளவரசி எலிசபெத் இளவரசர் பிலிப்பினைத் திருமணம் செய்து மூன்று மாதங்கள் கடந்த நிலையில் கனடா அரச குடும்பத்தினை கௌரவிக்கும் வகையில் தபால் தலையொன்றை வெளியிட்டிருந்தது. (ம)

# எகிப்துக்கு ஆயுத விற்பனையை நிறுத்தி விட்டது பிரான்ஸ்

எகிப்துக்கு ஆயுதம் விற்பனை செய்வதை பிரான்ஸ் நிறுத்தி வைத்தது. பிரதமர் அலுவலக கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எகிப்தில் ஜனாதிபதி முபாரக்கை பதவி விட்டு நீக்க வேண்டும் என வலியுறுத்தி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். எகிப்தில் மக்களுக்கு விரோதமான அரசை நீக்க வேண்டும் என்று கூறி தலைநகர் பாரிஸில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்துக்கு பாதுகாப்பு நடவடிக்கையாக ஆயிரக்கணக்கான பொலிஸாரும் குவிக்கப்பட்டனர். கிழக்குப் பகுதியில் ஸ்டிராஸ்போர்க்கிலும், நாட்டின் தென்கிழக்கு பகுதியான கிரனோபிஸ் பகுதியிலும் எகிப்து ஆட்சியை தூக்கி எறிய மக்கள் போராட்டம் நடந்தன. எகிப்தை போல பதற்றம் நீடிக்கும் டுனிஷியாவுக்கும் ஆயுதம் அனுப்பியது தொடர்பாக ஜரோப்பிய ஒன்றியத்தில் பிரான்ஸ் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி இருந்தது.

பிரான்ஸ் அயல்துறை அமைச்சர் மிச்லே அலியட் கடந்த மாதம் கூறுகையில், துனிஷியாவில் சட்ட உழுங்கு பராமரிப்புக்கு அந்நாட்டு பொலிஸாருக்கும் பயிற்சி அளிக்கலாம் என தெரிவித்து இருந்தார். அவரது கருத்து பிரான்ஸில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. (ம)

# பதவியிலிருந்து விலகினார் முபாரக்

எகிப்து, பெப்.07

எகிப்து ஆளும் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து அதிபர் ஹோஸ்னி முபாரக், அவரது மகன் கமால் ஆகியோர் நேற்று முன்தினம் விலகினர்.

ஆளும் கட்சியின் அதிகாரம் மிக்க வழிகாட்டும் குழுவிலிருந்து முபாரக், கமால் உட்பட 6 பேர் பதவி விலகியதாக அரசு அறிவித்தது.

இதன் காரணமாக கொய்ரோவில் முபாரக்கிற்கு ஆதரவாகவும், எதிராகவும் போராட்டங்கள் வலுத்து வருகின்றன.

30 ஆண்டுகளாக அதிபர் பதவி வகித்துவரும் முபாரக் உடனடியாக பதவி விலக வேண்டும் என 12 நாள்களாக எகிப்தில் போராட்டம் நடைபெற்று வந்தன.

இதனிடையே, சில நாள்களுக்கு முன் மாற்றியமைக்கப்பட்ட புதிய அமைச்சரவையுடன் அதிபர் முபாரக் ஆலோசனை நடத்தினார்.

இந்த சூழலில், அதிபர் முபாரக் தான் வகித்து வந்த தேசிய ஜனநாயக கட்சித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்தார். எகிப்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இந்த ராஜினாமா இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிப்பதற்காக நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் புதிய பிரதமர் அகமது ஷாபிக், அமைச்சர்கள், சென்ட்ரல் வங்கி ஆளுநர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ம)


:.புபே செட்
வீட்டுக்கும்
மற்றும்
ஹோட்டலுக்கு



ரூபா 3950/-யிலிருந்து
டைடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை,லிபர்டி பிளாஸா
2439422

## இடமாற்றம்

கௌதமி நகையகம் 246, கஸ்தூரியார் வீதி என்னும் முகவரியில் இயங்கிவந்த பிரபல சோதிடர் த.அழகேசனின் அம்மன் சோதிடம்
03.02.2011 தொடக்கம்
இல.149/9, கஸ்தூரியார் வீதி என்னும் முகவரியில் நடைபெறுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

தொலைபேசி : 0783015186

உரிமையாளர்,
த.அழகேசன்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா NO.1புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 10.02.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

* சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
* சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
* நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
* முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
* துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 0212226944 (109816)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1266 சிகப்பு

30 38 45 49 04-02-2011

கடகம்

ஜக்பொட் பரிசு ரூபா. 5,336,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 164,662 | 20/- | 3,293,240/- |
| 2 இலக்கங்கள் | 15,140 | 40/- | 605,600/- |
| 1 இல. + லக்கினம் | 15,039 | 60/ | 902,340/- |
| 2 இல. + லக்கினம் | 1,345 | 200/ | 269,000/- |
| 3 இலக்கங்கள் | 399 | 1000/- | 399,000/- |
| 3 இல. + லக்கினம் | 40 | 10,000/- | 400,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,336,950/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 6,469,180/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 474 | | 535,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 197,102 | | 7,004,680/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,704,125/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம்

11 29 52 54 ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 471 | 500/- | 235,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 474 | | 535,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-

## காவலாளி/பராமரிப்பாளர்

கொக்குவிலில் உள்ள வீட்டில் காவலாளியாகவும் தோட்ட வேலை செய்யக்கூடிய 50 வயதுக்கும் மேற்பட்ட ஆண் தேவை.
சம்பளம் ரூபா.10,000/=
தொடர்பு:
0771965666

## தென்மராட்சி கிழக்கு பல.நோ.கூ.சங்கம் (வ-து) கொடிகாமம்

கடைக் கட்டடத் தொகுதிகள் அமைப்பதற்கான கூறுவிலை கோரல்

மேற்படி 30.01.2011ஆம் திகதிய நாளிதழில் விளம்பரப்படுத்தப்பட்ட "மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 5000/ என குறிப்பிடப்பட்டுள்ளதை குறைக்கப்பட்டு ரூபா 1000/ என நிர்ணயிக்கப்பட்டுள்ளது" என்பதனை அறியத்தருகிறேன்.

பொது முகாமையாளர்.
(சி/575750)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(07.02.2011)

மலர்வு 25 02 1912



உதிர்வு 18 01 2002

அமரர் கனகசபாபதி இலட்சுமி அம்மா
(வல்லை வீதி - சங்கானை)

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவுகள் எமது நெஞ்சை விட்டகலாது.

உங்களை என்றென்றும் நினைவு கூறும் மகன்,மகள்,பெறாமகன்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்,பூட்டப் பிள்ளைகள்.

## யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவும் "சதாசிவன்" மலர் வெளியீடும்-17.02.2011

இடம்:
யா/அனலைதீவு சதாசிவ ம.வி.

காலம்:
17.02.2011,முற்பகல்11 மணியளவில்

தலைமை:
திரு.வி.ஓங்காரலிங்கம் (அதிபர்)

பிரதம அதிதி:
மாண்புமிகு கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள்
(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

அதிஉயர் சிறப்பு விருந்தினர்:
கௌரவ செயலாளர்
இ.இளங் கோவன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.
ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விழாக்குழுவினர்.
(110408)

# சர்தாரி-ஜமானி திருமணம் மறுக்கும் பாக்.மக்கள் கட்சி

இஸ்லாமாபாத், பெப்.07

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி, அமெரிக்காவில் வசிக்கும் பாகிஸ்தான் வம்சாவளி பெண் டாக்டரை திருமணம் செய்து கொண்டதாக செய்திகள் வெளியாகின. இதை பாகிஸ்தான் மக்கள் கட்சி மறுத்துள்ளது. வதந்தி பரப்பியவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு நோட்டீஸ் விடுத்துள்ளது.

பாகிஸ்தான் அதிபர் சர்தாரி, அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் மன்ஹாட்டன் பகுதியில் வசிக்கும் டாக்டரான தன்வீர் ஜமானி(வயது-40) என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதாக, பல்வேறு இணைய தளங்களிலும், பாகிஸ்தான் பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகின.

டாக்டர் ஜமானி, பாகிஸ்தான், சிந்து மருத்துவக் கல்லூரியில் பட்டமும், அயர்லாந்தில் பி.எச்.டி., யும் பெற்றவர். 2008இல் அமெரிக்காவில் நடந்த தேர்தலில் ஒபாமாவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தார்.

பாகிஸ்தானில் இருந்து ஆங்கிலம் மற்றும் உருதுவில் வெளிவரும் 'தி நியூஸ்' பத்திரிகை நிருபர் அளித்திருந்த செய்தியில், ''நான் ஜமானியைத் தொடர்பு கொண்டு, செய்தி உண்மைதானா என்று கேட்டேன். அவர் இது குறித்து சட்ட ஆலோசனையை நாடியுள்ளதாகவும், கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது எனவும் கூறினார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்தாரி-ஜமானி திருமணம் பற்றி முதன் முதலில் செய்தி வெளியிட்ட பாகிஸ்தானைச் சேர்ந்த மார்க் செய்கல் என்ற பெண்ணிற்கும், 'தி நியூஸ்' பத்திரிகைக்கும் பாகிஸ்தான் அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அதிபர் சர்தாரியின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி மோசமான கருத்துக்கள் வெளியாவதற்கு, பாகிஸ்தான் மக்கள் கட்சியும் கண்டனம் தெரிவித்துள்ளது. (ம)

# முஸ்லிம்களுக்கு எதிராக கெமரூன் கருத்து

பிரிட்டன், பெப்.07

உலக தலைவர்கள் கலந்து கொண்ட மூனிச் பாதுகாப்பு மாநாட்டில், பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமரூன் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார்.

இம்மாநாட்டில் பேசிய டேவிட் கெமரூன், பல் கலாசாரம் தோல்வி அடைந்துள்ளது. எனவே முஸ்லிம் குழுக்களுக்கு அளிக்கப்படும் நிதியை குறைக்க தாம் உறுதி கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

முஸ்லிம் மற்றும் எதிர்பாளர்கள் பிரதமரின் பேச்சு குறித்து கேள்வி எழுப்பி உள்ளனர். லூட்டன் பகுதியில் இஸ்லாமியர்களுக்கு எதிராக ஆங்கிலேய பாதுகாப்பு குழுவினர் 3 ஆயிரம் பேர் கோஷம் எழுப்பிச் சென்றனர்.

இவர்களுக்கு ஆதரவாக பிரதமரின் பேச்சு அமைந்துள்ளது என்கிற பேச்சு எழுந்துள்ளது. தங்களது சிந்தனை பக்கம் பிரதமர் வந்துள்ளார் என போராட்டத்தில் ஈடுபட்ட சிலர் மகிழ்ச்சி துள்ளலில் தெரிவித்தனர்.

வலது சாரி தீவிரவாதிகளின் கைகளில் விளையாடக் கூடியவராக பிரதமர் டேவிட் கெமரூன் ஆகிவிட்டார் என்ற தீவிரகோலம் பிரிட்டனில் தலை தூக்கி உள்ளது. (ம)

# அமெரிக்க துணை அதிபர் இந்தியப் பிரதமர் மன்மோகனுடன் உரையாடல்

வாஷிங்டன், பெப்.07

அமெரிக்க துணை அதிபர் ஜோ பிடேன், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

வெள்ளிக்கிழமை நிகழ்ந்த, இந்த திடீர் தொலைபேசி உரையாடலின் போது, உலகளாவிய மற்றும் பிராந்திய பிரச்சினைகளில் இரு தரப்பும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தனர்.

இந்தியாவுடன் ஆக்கபூர்வமான நட்புறவை ஏற்படுத்துவதில் அமெரிக்கா தீவிரமாக உள்ளது குறித்தும் தெரிவித்தார் என்று வெள்ளை மாளிகை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

சந்திப்பு...



ஆலோசனை: ஜேர்மனி மூனிச்சில், பாதுகாப்பு கொள்கை தொடர்பாக நடந்த கலந்தாய்வில், அந்த நாட்டு சான்ஸ்லர் ஏஞ்சலா மார்க்கல் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் கலந்துகொண்டனர். (ம)

# போதைப்பொருள் கடத்தல்காரர் சிக்கினார்

ஜேர்மனி, பெப்.07

போதைப் பொருள் கடத்தும் கும்பலுடன் தொடர்புடையவர் என கருதப்படும் 51 வயது நபரை ஜேர்மனி பொலிஸார் கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட நபர் சர்வதேச அளவில் தேடப்பட்டவர் ஆவார். லத்தீன் அமெரிக்காவில் இருந்து தெற்கு இத்தாலியில் உள்ள கால்பிரியா பிராந்தியத்திற்கு அவர் போதை மருந்து கடத்தியவர் என்று கூறப்படுகிறது.

தென் அமெரிக்காவில் இருந்து ஐரோப்பாவுக்கும் போதைப் பொருள் கடத்தும் கும்பலுடன் தொடர்புடையவராக உள்ள இந்த நபர் துய்ஸ்பெர்க் பகுதியில் பிஸ்ஸா ரெஸ்டாரண்ட் நடத்தி வருகிறார். 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் திகதி முதல் இவரை பொலிசார் தேடி வந்தனர்.

நன்கெட்டா என்ற இத்தாலிய குற்ற செயல் அமைப்பு ஜெர்மனியில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்புடன் கைது செய்யப்பட்ட நபர் தொடர்புடையவராக உள்ளார். துய்ஸ்பெர்க் அருகே உள்ள ஓபர்ஹாசன் என்ற இடத்தில் உள்ள ரெஸ்டாரண்ட்டில் அவரை கைது செய்தனர். (ம)

# அதிக குழந்தைகளைப் பெறும் பிரிட்டன் தாய்மார்கள்

பிரிட்டன், பெப்.07

பிரிட்டனில் 2009ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையான குழந்தைகளைக் கொண்ட தாய்மார் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இரண்டு பெண்கள் தமது 16ஆவது குழந்தைக்குத் தாயாகியுள்ளனர்.

ஒருவர் 17ஆவது குழந்தையைப் பெற்றுள்ளார்.138 பெண்களுக்கு 10 இற்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ளன.

இதில் நான்கு பெண்கள் தமது 22 ஆவது வயதில் 11ஆவது குழந்தையைப் பிரசவித்துள்ளனர். இவர்களுக்கு சமூக நலக் கொடுப்பனவாக வாராந்தம் 22 ஆயிரம் பவுண்சும், வருடாந்தம் 1.2 மில்லியன் பவுண்சும் வழங்கப்படுகின்றது. இந்த பல குழந்தை தாய்மார்கள் வரிசையில் இன்னும் பலர் இணையக் கூடும் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது.

தெரேஸா விண்டர்ஸ் என்ற பெண்ணின் சகல பிள்ளைகளும் சமூக நலத் திட்டத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்ற நிலையில் அவர் தனது 14 ஆவது பிள்ளையையும் பெற்றுள்ளார்.

38 வயதான பிரேஸன் விண்டர்ஸ் என்ற பெண்ணும் சமூக நல நன்மைகளைப் பெற்று வாழ்பவர். தன்னிடமிருந்து பராமரிப்புக்காக ஒவ்வொரு குழந்தையையும் எடுக்க எடுக்க தான் இன்னொன்றைப் பெற்றுக் கொண்டே இருப்பேன் என்கிறார்.

அரசாங்கம் இவர்களுக்கு வருடாந்தம் 30ஆயிரம் பவுண்ஸ்களை வழங்குகின்றது.

இந்த நலன்புரிக் கொடுப்பனவுத் திட்டம் சிலரை பிள்ளைகளை பெறத் தூண்டி வருவதாக சிலர் குறைகூறுகின்றனர். (ம)

# கனடாவில் வேலையில்லாப் பிரச்சினை

கனடா, பெப்.07

கனடாவில் வேலையில்லாதோர் எண்ணிக்கை கடந்த மாதத்தில் அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் 69,200 புதிய தொழில்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலைமையிலும் இந்த அதிகரிப்புக் காணப்படுகின்றது.

கடந்தாண்டு டிசம்பரில் 7.6 வீதமாக இருந்த வேலையற்றோர் எண்ணிக்கை ஜனவரியில் 7.8 வீதமாக அதிகரித்துள்ளது.

கட்டடத் துறை, பொது நிர்வாகம் ஆகிய பிரிவுகளிலேயே வேலையின்மை அதிகரித்துள்ளது. விவசாயம் போக்குவரத்து, மற்றும் உணவுச் சேவை ஆகிய பிரிவுகளில் வேலையின்மை குறைந்துள்ளது.

146,400 பேர் கனடாவின் தொழிற் சந்தைக்குத் திரும்பி வந்துள்ள நிலையிலேயே இந்த வேலையற்றோர் அதிகரிப்பு வீதம் பதிவாகியுள்ளது.

உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக இழக்கப்பட்ட தொழில்கள் அனைத்தும் கனடாவில் மீள உருவாக்கப்பட்டுள்ளன.

ஜி - 7 நாடுகள் அமைப்பில் கனடா மட்டுமே இதை சாதித்துள்ளது. இந்தப் பொருளாதாரப் பின்னடைவின் பின் நாட்டில் 4,67,000 தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (ம)

# கம்போடிய எல்லையில் மோதல்

கம்போடிய துருப்புகளுடன் சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதியில் மோதல் ஏற்பட்ட போது, தாய்லாந்து வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

4 பேர் காயம் அடைந்தனர்.

இது குறித்து ஐ.நாவிடம் கம்போடியா கூறுகையில், எல்லைப்பகுதி பயங்கர வெடிகுண்டு பகுதியாக உருவெடுத்து வருகிறது என தெரிவித்தது.

கம்போடியா அரசின் ஒரு செய்தி தொடர்பாளர் கூறுகையில், தாய்லாந்து வீரர்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக நிகழ்ந்துள்ளது.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்பு கவுன்சிலில் தெரிவிப்போம்.- என்றார். (ம)

# போர் விமானத்தை ஒன் லைன் மூலம் விலைக்கு வாங்கிய 7 வயதுச் சிறுவன்

இங்கிலாந்தில் உள்ள ஜெட் விமான போக்குவரத்து நிறுவனம் ஒரு போர் விமானத்தை இபே ஒன் லைன் வர்த்தக நிறுவனம் மூலம் ஏல விற்பனைக்கு வைத்திருந்தது.

இந்த விமானத்தை 7 வயது குறும்புக்கார சிறுவன் 50 லட்சத்துக்கு விலைக்கு வாங்கினான். இதை அறிந்த அவனது தந்தை அதிர்ச்சி அடைந்தார்.

ஏனெனில் அந்த விமானத்தை வாங்கும் அளவு அவரிடம் பணம் இல்லை.

எனவே இபே ஒன்லைன் வர்த்தக நிறுவனத்தை அவர் அணுகினார். எனது மகன் விளையாட்டாக அதை விலைக்கு வாங்கிவிட்டான்.

ஆனால், இதை வாங்கும் அளவு அவனிடம் பாக்கெட் மணி (பணம்) இல்லை. மேலும் என்னிடமும் பணம் இல்லை. எனவே அவனை மன்னித்து விடுங்கள் என்று தெரிவித்தார்.

அவரது நிலைமையை புரிந்து கொண்ட அந்த வர்த்தக நிறுவனம் இதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டது. இதைத் தொடர்ந்து அந்த போர் விமானத்தின் ஏல விற்பனை தொடர்ந்து நடைபெறுகிறது. (ம)

**JAFFNA COLLEGE PRIMARY SCHOOL**
**ANNUAL INTER HOUSE ATHLETIC MEET - 2011**

**DATE :** 08.02.2011 (Tuesday)
**TIME :** 1.30 P.M.

*Chief Guest*
**Mrs. JEYANTHY REYNOLD**

ALL ARE CORDIALLY INVITED

JAFFNA COLLEGE
VADDUKODDAI.

PRINCIPAL
SUPERVISOR STAFF &
STUDENTS.

அல்வாய் வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான
**இலட்சார்ச்சனை**
08.02.2011 - 18.02.2011

முதன்நாள் இலட்சார்ச்சனை, 08.02.2011
செவ்வாய் காலை 4.30 மணி
பாற்பூஜையுடனும் 1008
சங்காபிஷேகத்துடனும் 9 மணி பூஜையுடனும்
தொடர்ந்து நடைபெறும்.
18.02.2011 இல் நிறைவுறும். ஷை அர்ச்சனை,
அன்று அதிகாலை ஒரு மணிக்கு மாசிமக
1008 சங்காபிஷேகத்துடனும்
பூஜைகளுடனும் காலை 6 மணிக்கு சமுத்திரத்
தீர்த்தத்துடனும் முடிவுறும். வருடாந்த உற்சவ
காலத்தில் சுவாமி தீர்த்தம் ஆடச் செல்லும்
பாதையால் சென்று வழமையாக வரும்
பாதையால் திரும்பி வரும். நேர்த்தி
செய்பவர்கள் தம் நேர்த்திகளை நிறைவு
செய்து கொள்ளலாம்.
மு.கு.: வருடாந்த உற்சவகால
தீர்த்தத்தின்போது சுவாமி தீர்த்தமாடியதும்
நேரடியாக ஆலயத்துக்கு உரிய நேரத்துக்கு
வரும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**நிர்வாகம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவர் H.H.யோன் அவர்களின் அன்புத் தாய்
**திருமதி றீற்றா சுகீர்தம் யோன் (யோன் அன்ரி)**
அவர்கள் 05.02.2011 அன்று காலமான செய்தியறிந்து
ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம
சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்,
நலன்புரி சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்

*திருமதி தம்பையா செல்லம்மா (சிந்தாமணி)*

காரைநகர், செம்பாட்டைப் பிறப்பிடமாகவும், வவுனியா, பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா செல்லம்மா (சிந்தாமணி) நேற்றுமுன்தினம் (05.02.2011) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - வள்ளியம்மை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - இலட்சுமி தம்பதியரின் மருமகளும், கனகேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி, கனகரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற மகாலிங்கசூரியர் மற்றும் தர்மலிங்கம், சிவசோதி, அருந்தேஸ்வரி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற சூரியகுமார் மற்றும் சூரியகுமாரி, சிவகுமாரி, அருட்குமார், திருஞானசம்பந்தன், தயானந்தகுமார், சச்சிதானந்தன், சிறிதேவி, நவசோதி, நாகராஜா, சிவமலர், சிவசக்தி, சிவப்பிரியா, அரவிந்தன், தவராணி, அருள்ராஜா, இந்திராணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தட்சனாதன்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*91/5, குளோப்மில்வீதி,*
*1ஆம் ஒழுங்கை,*
*பண்டாரிக்குளம், வவுனியா.*

தகவல்:
கனகரத்தினம் (மகன்).

# தையல் பயிற்சி ஆரம்பம்

மந்திகை, பெப்.07

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் தையல்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்டோருக்கே இந்த ஆறு மாத பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

தம்பசிட்டியில் அமைந்துள்ள மகளிர் பயிற்சி நிலையத்தில் இப்பயிற்சி நெறியினை பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் கடந்த முதலாம் திகதி வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார்.

(ம-237)

# கருத்தரங்கு

வடமராட்சி, பெப்.07

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலபாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கு யாழ். மாவட்ட ஆங்கில ஆதரவு மையத்தினால் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரியர் கல்வி நிலையத்தில் இக்கருத்தரங்கு இடம்பெறும்.

தரம் 3 தொடக்கம் தரம் 5 வரையான ஆரம்ப வகுப்புகளில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளவேண்டும் என வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வி. செல்வராசா அறிவித்துள்ளார்.

(ம-236)

## வாடகைக்கு

யாழ். நகரில் பிரதான வீதிக்கு அருகில் 2000 சதுர அடிக்குமேல் பரப்புள்ள இடம் வாடகைக்குண்டு. களஞ்சியசாலையாகவோ, லொஜ் ஆகவோ பாவிக்கலாம். தொ.பே: 0772912244.

## கிறீன் பேன் (பிறவுண் றோட் சந்தியருகில் நாவலர் றோட்)

A/L இரசாயனவியல் By: J.J. கொலின்ஸ்
அடிப்படை இரசாயனத்தை தொடர்ந்து குறுகிய கால
இலகுமுறை மீட்டலுடன் பகுதி II பொது இரசாயனம்
கடந்தகால வினா விடைவகுப்பு
**ஆரம்பம் : 06.02.2011**
**(புதன் 4pm, சனி 6.50 am)**
பகுதி I செவ்வாய் 4.00 - 5.00
இரு பிரிவுகள் வியாழன் 4.00 - 5.00

## விற்பனைக்கு

3 மாதக் கடாக்குட்டியுடன் ஒரு போத்தல் பாலாடு, 5 மாதச் சினை கன்னி ஆடு விற்பனைக்குண்டு.
பஞ்சாட்சரநாதன், குளங்கரை, கொக்குவில் கிழக்கு,
தொ.பே. 021 3006646

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgக்கு மேல்
வளர்ச்சியடையக் கூடிய
No.1பகிரா புறொயிலர்
குஞ்சுகள் 09.02.2011இல்
விநியோகிக்கப்படும்.
பதிவுகளை முன்கூட்டியே
மேற்கொள்ளவும்.

**றாஜீவ்**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை,
தொ.பே: 0776090926,
021222 2867

## GENUINE FINANCIAL SPONSORSHIP

For All Countries From Trusted and Government Banks With Reasonable Interest

100% Visa Guaranteed

Contact: Jeevan (Consultant. Jaffna Office)
0717943439/0750422108

Janake (MD, King's Joy (pvt)Ltd)
0773476335/0774278552

## மரண அறிவித்தல்

திருமதி பெரியதம்பி புவனேஸ்வரி



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி புவனேஸ்வரி நேற்று (06.02,2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பெரிய தம்பியின் அன்பு மனைவியும் தங்கராசா, இராஜகுமாரி, சிவராசா (பவுண்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சேகர் (கிருஷ்ணுதரன், மரத் தொழிற்சாலை), செல்வராணி (ஜேர்மனி), வேந்தா, ரமேஸ்பாபு (ரமேஸ் ரஜிந்தா மரத்தொழிற்சாலை), பாஸ்கர் (பாணு மரத் தொழிற்சாலை), சுரேஷ் (டிலான் மரத் தொழிற்சாலை) ஆகியோரின் அன்புத் தாயும் குணசேகரம், ரவி, மனோகரி, தெய்வமலர், ஜீவசோதி, விஜயமலர் ஆகியோரின் பாசமிகு மாமியும் கௌசல்யா (லண்டன்), கிருஷ்ண ரமணா (World Food) வேணுதரன் (லண்டன்), விஷ்ணுராம், ருசாந்தி (டென் மார்க்), சுதர்சன், சுஜீவன் (ஜேர்மனி), நிகேதனன் (ஜேர்மனி), நிசாந்தன், நிரஞ்சனி, நிரூபா, நிரோஜா, நிரோஜன், ரஜீவன், ரஜிந்தன், ரஜிந்தா, பானுஜா, ஜெனிஸ்ரன், ஜெக்ஷகா, யதுர்சன், டிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அர்ச்சயாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.02.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*70/2, பலாலி வீதி,*
*கந்தர்மடம்.*
*தொ.பே. 021 222 5473, 0778694174,*
*பெ. சுரேஸ் 0777183474.*

தகவல்:
குடும்பத்தினர்.

## WANTED



Reputed Construction Company looking for suitable Candidates for below mentioned jobs:
- Technical Officers – for Jaffna and Vanni with the knowledge of road and irrigation works.
- Quantity Surveyors - with 2 years experience.
- Office Administrators – with the knowledge of
- accounts – Vavuniya.

Tel. 0777326294 E-mail: agroup777@yahoo.com

## வான், லொறி சேவைகள்

யாழ்ப்பாணத்தில் இருந்து நாவலப்பிட்டி, ஹற்றன், மஸ்கெலியா மற்றும் சிவனொளிபாதமலை ஆகிய பகுதிகளுக்கு வான் மற்றும் லொறி சேவைகள் நடைபெறுகின்றன. தொடர்புகளுக்கு: 0773453611

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2197 திகதி 05-02-2011

ஆங்கில எழுத்திற்கும் H

வெற்றி எண்கள் **19 37 49 57**

போனஸ் இல: **02**

ஜக்பொட் பரிசு ரூ. **10,510,825/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 176006 | 20/- | 3,520,120/- |
| 2 இல | 12621 | 100/- | 1,262,100/- |
| 3 இல | 256 | 1,000/- | 256,000/- |
| 4 இல | 01 | 1,000.000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6901 | 40/- | 276,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 487 | 1,000/- | 487,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,510,825/- | - |
| 1 இல + போனஸ் இல | 8400 | 100/- | 840,000/- |
| 2 இல + போனஸ் இல | 376 | 500/- | 188,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 326 | 200/- | 65,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 13 | 1,500/- | 19,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,573,960/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 205418 | | 9,173,960/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 302819817-1-39 |
| நுவரேலியா | 302819091-9-24 |
| வவுனியா | 302822461-7-09 |
| யாழ்ப்பாணம் | 302839006-1-19 |
| கொழும்பு | 302821286-1-18 |
| இரத்தினபுரி | 302821775-1-15 |
| குருணாகல் | 302815430-0-22 |
| மொணராகலை | 302817083-2-00 |
| கம்பஹா | 302820971-2-28 |
| களுத்துறை | 302821517-3-04 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
**ரூ. 10,991,300/-**

ஊதா நிற டிக்கட்டுகள் 2011 பெப்ரவரி 12 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ரேணுகாதேவி சிவசோதி அவர்களின்
அன்புத் தாயாரான
**நடராசா போகம்மா** அவர்களின்
மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது பாடசாலை சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி., கோண்டாவில்.* — அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி நிற்றா சுகிர்தம் ஜோண்

*(யாழ். முன்னாள் ப.நோ.கூ.ச. முகாமையாளர்)*

யாழ்ப்பாணம், ஸ்ரேசன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆர்.எஸ். ஜோண் 05.02.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிளிபேட் ஜோணின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ராசம் பொனிபஸ், றோஸ் வின்சன்ற், புஷ்பம் இம்மானுவேல், அலோய் ரட்ணசிங்கம் மற்றும் யூலியானா மனுவேற்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் A.C. ஜோண் (மக்கள் வங்கி), ஹெக்டர் ஜோண் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும், வதனா, எமெல்டா ஆகியோரின் அன்பு மாமியும், ஷலோமா, சில்வியாதரிந்து ஹெப்புஆராச்சி, சிபில்லா, பயிற்றா, லக்சிற்றா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.02.2011) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித அடைக்கலமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்பு யாழ். கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறுமென்பதை அறியத் தருகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**A.C. ஜோண்**
67, பென் ஜோண் வீதி, கொழும்பு - 15.
தொ.பே. 2526879, 0776747532.

**ஹெக்டர் ஜோண்**
148/12, புனிதபற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2229210, 0718373354, 0776011625



### பெரியதம்பி சின்னத்துரை

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி சின்னத்துரை நேற்று (06.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புக் கணவரும் தயானி (பிரான்ஸ்), ரதிக்குமார் (டோகா), சதீஸ்குமார் (ஜேர்மனி), ஜெயக்குமார் (பிரான்ஸ்), தேவகுமார் (டோகா), ராஜ்குமார் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணராஜா (பிரான்ஸ்), சர்மிளா (ஏழாலை), ஞானேஸ்வரி (ஜேர்மனி), அகிலா (இணுவில்), சுபாஜனி (கொழும்பு), கௌசல்யா (உரும்பிராய்) ஆகியோரின் அன்பு மாமனும் அனுஜன், அபிஷன், அனேஷ் (பிரான்ஸ்), லக்சியா, தரணியா, கதீஸ், கன்ஜா (ஜேர்மனி), தேனுசியா, பிரவினா,சாரங்கன், மதுசியா, விஷ்ணுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை, வேலாயுதம், செல்லம்மா, லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலை கிழக்கில் அவரது மகனது இல்லத்தில் இன்று (07.02.2011) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலந்தைகட்டி வைரவர் கோயிலடி, ஏழாலை கிழக்கு, ஏழாலை* — தகவல்: சி. ரதிக்குமார் (குமார் - மகன்).

## சமய சந்நிதிகளில்....

கோப்பாய், பெப்.7

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 11 நாள்கள் திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 17ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஏ-72)

* * *

பொலிகண்டி கந்தவனம் அருள்மிகு கல்யாண வேலவ சுவாமி கோயில் மணவாளக்கோல உற்சவம் நாளை செவ்வாக்கிழமை நடைபெறவுள்ளது. இன்றைய தினம் காலை 8 மணிக்கு சண்முகப்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகக்கிரியைகள் ஆரம்பமாகி பகல் 11 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு பூஜைகளுடன் திருக்கல்யாண உற்சவம், திருவூஞ்சல் என்பன இடம்பெற்று, சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

* * *

பொலிகண்டி கல்லியம்பதி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இப்பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தத்திருவிழா மறுநாள் 18ஆம் திகதி மாசிமக தினத்தன்றும் நடைபெறவுள்ளது. (ஒ-236)

## விசாரணை கோருகின்றார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, பெப். 07

சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை விடுதலை செய்யும்படி சுதந்திர தினத்தன்று ஐ.தே.கட்சி புஞ்சி பொரளையில் நடத்திய அமைதிப் பேரணி மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தியமை தொடர்பாக விசாரணை செய்ய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிக்கும்படி அக் கட்சி கோரிக்கை விடுக்கவுள்ளது

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 5ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் இத் தகவலைத் தெரிவித்தார்.

அரசு பொலிஸாரையும், குண்டர்களையும் ஏவி விட்டு, இந்த அடாவடித்தனத்தை அரங்கேற்றியுள்ளது எனவும், சுதந்திர தினத்தன்று சுதந்திரத்தைக் கேலிக்குரியதாக்கி விட்டதென்றும் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

## குருநகர் கடற்கரை வீதி புனரமைப்பு

குருநகர், பெப்.7

குருநகர் கடற்கரை வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அகலப்படுத்தப்பட்டு வருகின்றது.

குருநகர் பிரதேச வைத்தியசாலை முன்பாக உள்ள இவ்வீதி தெற்குப்புறமாக குருநகர் தண்ணீர் தாங்கி வரையிலும் புனரமைக்கப்பட்டுவருகின்றது. (ஒ-51)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 01 | 07 |
| ★ | ★ |
| 04 | 02 |
| ★ | ★ |
| 1941 | 2005 |



### திருமதி அழகம்மா கந்தசாமி

(முன்னாள் ஆசிரியை, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

அன்பால் எமை அணைத்து
அறிவால் எமை உயர்த்தி
பண்பால் பலர் போற்ற
பாரினில் வித்திட்ட எம் தெய்வமே!
கர்த்தருக்குள் நீங்கள் மகிழ்ந்திருக்க
நாங்கள் காலமெலாம் நினைத்திருப்போம்.

தம்பசிட்டி, பருத்தித்துறை. — *கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## மரண அறிவித்தல்



### திருமதி ஆறுமுகம் பரமேஸ்வரி

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது தாவடியில் வசித்தவருமான திருமதி ஆறுமுகம் பரமேஸ்வரி நேற்று (06.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா -சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், சோமசுந்தரத்தின் அன்புச் சகோதரியும், மஹாலட்சுமியின் மைத்துனியும், கணேசபிள்ளை, ஈஸ்வரி (லண்டன்), மகேந்திரம் (கனடா), வசந்தாதேவி, கமலாதேவி (இந்தியா), தனலக்ஷ்மி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சதானந்தம் (லண்டன்), சாந்தி (கனடா), கிருஷ்ணமூர்த்தி, ஆனந்தநடராஜா( இந்தியா), வடிவேல்நாதன் (லண்டன்) ஆகியோரின் மாமியும், காயத்திரி, கௌதமி, ஜெனார்தனி, தமயா, அஜந்தா, பிரேமினி, பிரசாந், கபில்ராஜ், சரணியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி பிள்ளையார் கோயிலடி, தாவடி.* — தகவல்: *வசந்தி (மகள்).*

## நினைவு அஞ்சலி

13ஆம் ஆண்டு — 10ஆம் ஆண்டு



02.05.1912 தோற்றம் 09.06.1946
03.02.1998 மறைவு 28.01.2001



அமரர் சின்னப்பு வல்லிபுரம் — அமரர் வல்லிபுரம் மாணிக்கலிங்கம்

**திதி: சதுர்த்தி**

உயர்வாக நாம் வாழ உயிர்நாடியாக
நின்று உழைத்திட்ட எம் தந்தையரே!
நினைவில் எம்முடனும் நிஜத்தில் இறைவனிடமும்
கலந்திருக்கும் உங்களுக்கு,
எம் இதய அஞ்சலிகள்

566/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### மாரிமுத்து கனகசபை

தோற்றம்
29.09.1937

மறைவு
08.01.2011

கடந்த 08.01.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் மாரிமுத்து கனகசபை அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று 07.02.2011 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

54/24, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். 0212225308. — மனைவி, பிள்ளைகள்.

# தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகம் மூன்றாமிடம்

வலி.வடக்கு, பெப்.07

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை கலை ஒளி விளையாட்டுக் கழகமும் தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கலை ஒளி விளையாட்டுக் கழகம் 05 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 23 ஓட்டங்களைப் பெற்றது.

தஜீபன் அதிகபட்சமாக 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பூமா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நித்தி 1 ஓட்டத்துக்கு 2 விக்கெட்டுக்களையும், றதீபன் 8 ஓட்டத்துக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பூமா விளையாட்டுக் கழகம் 3.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 24 ஓட்டங்களாகிய வெற்றி இலக்கைத் தொட்டது.

நித்தி 08 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். கலை ஒளி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தஜீபன், சதீபன் முறையே 3,4 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (15-86)

# வீதியோட்டத்தில் வெற்றி பெற்றவர்கள்

வலி வடக்கு ,பெப் 07

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு கல்லூரியின் கனிஷ்டபிரிவு மாணவர்களுக்கிடையே நடைபெற்ற இரண்டு கிலோ மீற்றர் வீதியோட்டப் போட்டி கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் கல்லூரியின் நான்கு இல்லங்களில் இருந்தும் தலா 15 பேர் வீதம் 60 பேர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். குறிப்பிட்ட தூரத்தை போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள் அனைவருமே ஓடி முடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் ஓடி முதல் பத்து இடங்களைப் பெற்றவாகளின் விவரங்கள் வருமாறு:-

1 ம் இடம் கி.கிருசாந் ,2 ம் இடம் மி.லவநீதன் ,3 ம் இடம் ர.கார்த்தீபன்,4 ம் இடம் சி.சஜீபன் ,5 ம் இடம் வி.சுகந்தன் ,6 ம் இடம் தே .அபார்ணன்,7 ம் இடம் ம.சாரங்கன்,8 ம் இடம் ச.தார்ஷன்,9 ம் இடம் வி.றொசான்,10 ம் இடம் மு.கிருசாந் (86)



அரையிறுதி எல்லே ஆட்டங்களில்

# கலை ஒளி, எஸ்.எம்.எஸ் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் வெற்றி

வலி வடக்கு ,பெப் 07

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியின் அரையிறுதி ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு-

மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் விளையாட்டுக் கழகத்துக்கும் தெல்லிப்பழை கலை ஒளி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் கலை ஒளி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

முதலில் விளையாடிய ஆப்பிரகாம் விளையாட்டுக் கழகம் புள்ளிகள் எதையும் பெறாத நிலையில் ஆட்டம் இழந்தனர்.

ஒரு புள்ளி பெற்றால் வெற்றி என்ற மிக இலகுவான இலக்குடன் களமிறங்கி விளையாடிய கலை ஒளி விளையாட்டுக் கழகம் இறுதியில் மதுசன் ஒரு பந்தை அடித்து ஒரு புள்ளியைப் பெற்று தனது அணிக்கான வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் மல்லாகம் எஸ்.எம்.எஸ் விளையாட்டுக்கழகமும் தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.இதில் எஸ்.எம்.எஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய எஸ்.எம்.எஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் அனைவரும் ஆட்டம் இழந்து 10 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெனின்ராஜ், சந்தோஷ் தலா 3 ஓட்டங்களையும், கஸ்ரேன் 2, சுகிர்தன், டிலோன் தலா ஒரு ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

பதிலுக்கு ஆடிய பூமா விளையாட்டுக் கழகம் ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் இழந்து தோல்வியைத் தழுவியது. (15-86)

# உலகக் கிண்ண நடுவர்கள் அறிவிப்பு

கொழும்பு,பெப்.7

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான நடுவர்களின் பெயர்களை ஐ.சி.சி அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் பெப்ரவரி 19 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள முதல் போட்டியில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் மிர்பூர் மைதானத்தில் மோதவுள்ளன. இப் போட்டிக்கு இங்கிலாந்தின் ஸ்டிவ் டேவிஸ் மற்றும் இலங்கையின் குமார் தர்மசேன ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்ற உள்ளனர்.

உலகக் கிண்ணத் தொடரில் கடமையாற்றவுள்ள ஏனைய நடுவர்கள்:

டேவிஸ், தர்மசேன ஆகியோரோடு அலிம் டார், மராய்ஸ் எரஸ்மஸ், இயன் கோல்ட், டெரல் ஹார்ப்பர், டொனி இல், அசோக டி சில்வா, சைமன் தௌபல், றொட் டகர், ரிச்சட் கெட்டல்புரோ, நைஜல் லோங், புரூஸ் ஒக்ஸன்போட், அமீர் சஹோபா, சாஹ்வீர் டார்பூர் ஆகியோரும் போட்டிகளின் நடுவர்களாக கடமையாற்ற அறிவிக்கப்பட்டுள்ளனர். (15)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.07

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று பி.ப 3 மணிக்கு பிரதேச செயலர் திருமதி கருணாநிதி தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும்.

பதிவு செய்யப்பட்ட கழகங்களின் தலைவர் செயலாளர் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (15)

# விளம்பர ஒப்பந்தங்கள் மற்றும் கட்டுப்பாட்டை மீறும் வீரர்களுக்கு அபராதம், தடை

விளம்பர ஒப்பந்தங்கள் விவகாரத்தில் தெரிந்தோ, தெரியாமலோ கட்டுப்பாடுகளை மீறிச் செயல்படும் வீரர்களுக்கு அபராதமோ அல்லது அணியில் இருந்து நீக்கியோ கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.சி.சி எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.சி.சி.யின் சட்டத்துறை தலைவர் டேவிட் பெக்கார் கடந்த அக்டோபர் 26 ஆம் திகதி அனைத்து கிரிக்கெட் வாரியங்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார். அதில் வீரர்கள் விளம்பர நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது தொடர்பான வழி காட்டுதலையும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி போட்டி தொடங்குவதற்கு 7 நாள்களுக்கு முன்பிருந்தே ஐ.சி.சி.யின் கட்டுப்பாடுகள் அமுலுக்கு வரும். உலகக் கோப்பை போட்டி முடியும் வரை இது அமுலில் இருக்கும். அதனால் போட்டி முடியும் வரை உலகக் கோப்பை யில் விளையாடும் வீரர்களின் பெயரோ அல்லது படமோ விளம்பரங்களில் இடம்பெறக் கூடாது.

ICC Cricket World Cup 2011

சமீபத்தில் ரூ. 46 கோடிக்கு விளம்பரம் செய்துள்ள சச்சின் மற்றும் நெஹ்ரா, ஹர்பஜன், யுவராஜ் ஆகியோர் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் சஷாங் மனோகரை பி.சி.சி.ஐ அலுவலகத்தில் சந்தித்து ஐ.சி.சியின் விளம்பர ஒப்பந்தக் கட்டுப்பாடுகள் தொடர்பாக ஆலோசனை நடத்தினர். இதன் மூலமே ஐ.சி.சி.யின் நடவடிக்கை தெரியவந்துள்ளது. (த-15)

# உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்தியா சாதிக்குமாம்

டோனி தலைமையிலான இந்திய அணி, உலகக் கோப்பை வென்று சாதிக்கும் என முன்னாள் பாகிஸ்தான் அணித்தலைவர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில் எந்த அணி கோப்பை வென்றுசாதிக்கும் எனமுன்னாள், இந்நாள் வீரர்கள் பலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து கடந்த 1992இல் பாகிஸ்தான் அணிக்கு கோப்பை வென்று சாதித்த இம்ரான்கான் கூறியதாவது:

இம்முறை உலகக் கோப்பை வெல்லும் வாய்ப்பு டோனி தலைமையிலான இந்திய அணிக்கு அதிகம் இருப்பதாக தெரிகிறது. ஏனெனில் இந்திய அணி, பலமான துடுப்பாட்ட வரிசையை கொண்டிருக்கிறது. சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்கள் அணியில் இடம் பெற்றுள்ளனர். இந்திய அணியின் சமீபத்திய செயல்பாடுகள் திருப்தி அளிக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சொந்த மண்ணில் நடக்கும் ஒருநாள் தொடரில், இந்திய அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. உலகக் கோப்பை தொடரிலும் சொந்த மண்ணில் விளையாட இருப்பது சாதகமான விடயம். ஹர்பஜன் உள்ளிட்ட திறமையான சுழற்பந்து வீச்சாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வேகப்பந்துவீச்சில் அனுபவ வீரரான ஷகீர்கான் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரது அனுபவம் இந்திய அணிக்கு நிச்சயம் கைகொடுக்கும்.

மாஸ்டர் பட்ஸ்மன் சச்சின் இருப்பது மிகப் பெரிய பலம். இவருக்கு இது கடைசி உலக கோப்பை தொடராக அமைய வாய்ப்புள்ளதால், அபார ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பார். இவரது போர்ம் இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகிக்கும்.

முன்னதாக, கடந்த 1992 இல் நடந்த உலக கோப்பை தொடரில் விளையாட முடிவு செய்யவில்லை. பின்னர் கான்சர் நோயால் பாதிக்கப்படுவோர்களுக்கு நிதி கொடுப்பதற்காக விளையாட முடிவு செய்தேன். இதனால் உலக கோப்பை தொடரின் இறுதிப் போட்டி எனக்கு கடைசிப் போட்டியாக அமைந்தது. இதில் கோப்பை வென்று சாதித்தது என்றும் மறக்க முடியாத தருணமாக அமைந்தது.

உலகக் கோப்பை தொடரில், ஒவ்வொரு அணியும் சுமார் ஆறு நாட்கள் இடைவெளியில் அடுத்தடுத்த போட்டியில் விளையாடுகின்றன. இது வரவேற்கத்தக்க ஒன்று. இதன் மூலம் முன்னணி வீரர்களுக்கு காயம் ஏற்படும் பட்சத்தில், அடுத்த போட்டிக்குள் விரைவில் குணமாகிவிடலாம். இது வேகப்பந்து வீச்சாளர்களுக்கு நல்ல பலன் அளிக்கும். முன்னதாக நாங்கள் விளையாடிய காலகட்டத்தில், இதுபோன்ற நீண்ட ஓய்வு கிடைக்காது. இதனால் சில நேரங்களில் அதிக சிரமத்திற்கு ஆளானோம் என்றார் இம்ரான் கான்.(த-15)

# தொடங்கியது கிண்ண வேட்டை

-டி லீ'-

இலங்கை-மேற்கிந்தியதீவுகள் இறுதிப் போட்டி நேற்று. இலங்கை அணியில் மாற்றங்கள் பல. உலகக்கிண்ணப் பரீட்சார்த்தம் இலங்கைக்கு. பலம் காட்ட முனைந்த தீவுகளுக்கோ பரிதாபத் தோல்வி. களத்தடுப்புக்கு மேற்கிந்திய தீவுகள் தீர்மானம். டில்ஷான்-தரங்க களத்தில். அதிரடியாய் தொடக்கம் இலங்கை.

'போர்முக்கு' திரும்பியது டில்ஷானின் ஆட்டம். ரசிகர்களுக்கு விருந்தாகியது இவரது அதிரடி. பொறுக்கவில்லை டுவைன் பிராவோக்கு. டில்ஷானின் அதிரடியை முடித்து வைத்தார். 28 பந்துகளில் பெற்றது 30 ஓட்டங்கள். இரண்டு பவுண்டரியும் ஒரு சிக்ஸரும் அடக்கம்.

சங்கக்காரா புதிதாய் புகுந்தார் களத்துக்கு. பொறுப்பான ஆட்டம். தரங்க தன் பங்குக்குத் தொடர்ந்தார். கடைசிப் போட்டியின் ஆட்டநாயகன் இவர். இருந்தும் இப்போட்டியில் அரைச்சதம்கூட இவருக்கு கைகூடவில்லை. பென்னின் பந்தில் இவரது விக்கெட் பறிப்பு. 39 ஓட்டங்கள் அணிக்குப் பெறுகை.

சங்கா-மஹேல ஜோடி, இராம-லட்சுமணன் போல் இணைந்தது. நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்த சங்கக்காரா தன் கணக்கில் அரைச்சதம் அடித்தார். இணைப்பாக 95 ஓட்டங்கள் பகிர்ந்தனர் இருவரும். ராம்புல்லின் பந்து ஜெயவர்த்தனாவை வெளியேற்றியது. ஆறு ஓட்டங்களால் அரைச்சதம் அவர் இழந்தார். கப்புக்கெதர,சமரவீர,திஸ்ஸர பெரேரா இவர்களின் பங்களிப்பு ஏதுமில்லை. இவர்களால் சீராக சரிந்தது இலங்கையின் விக்கெட்டுக்கள்தான். தலைவரும் விடை கொடுத்தார் ஆட்டத்துக்கு. 75 ஓட்டங்கள் அவரின் பெறுதி. பின்வரிசைக்குப் பலம் சேர்த்தார் மத்தியூஸ். இவரால் கௌரவமானது இலங்கையின் இலக்கு. மத்தியூஸ் ஆட்ட மிழக்கவில்லை இறுதிவரை. 36 ஓட்டங்கள் 22 பந்துகளில். 277/9 இலங்கையின் பெறுதி.

தீவுகளின் சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் சாதித்தார்கள். பென் கொடுத்தது 38; வீழ்த்தியது 4 விக்கெட்டுக்கள். கெயில் பகுதிநேர பந்து வீச்சு. நேற்று முழு நேரமாய் வீசினார். விக்கெட்டுக்கள் வீழவில்லை. ஆனால் கட்டுப்படுத்தினார் ஓட்டங்களை.

வெற்றிபெறுவது கட்டாயம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு. கடந்த போட்டியில் தோற்றதால் தொடர் பறிபோகும் இக்கட்டு நிலை. இதை நன்குணர்ந்து களம் வந்தனர் கெயில்-பரத். பாவம் அவர்களது நிலை. தொடக்கமே அதிர்ச்சி. ஓட்டங்கள் ஏதுமில்லை. இருவரும் அனுப்பப்பட்டு விட்டனர் திருப்பி. பெர்ணான்டோ கெயிலை அனுப்ப, பெரேரா பரத்தை அனுப்பினார். டரன் பிராவோ -சர்வான் களத்துக் வந்தனர். தளர வில்லை இவர்கள். தமது வழமையான ஆட் டத்தை தொடர்ந்தனர். இடையிடையே அதிரடி.

ஓட்டங்களை ஓடியே சேர்த்தனர் தாராளமாய். நீண்டது இவர்களின் ஆட்டம். இலங்கையின் பந்துகளைப் பதம்பார்த்தது அவர்களின் துடுப்புக்கள். சதம் கடந்தும் நீண்டது இவர்களின் இணைப்பு. இறுதியில் ஹேரத்தின் பந்தில் முடிந்தது. 125 ஓட்டங்கள் இணைப்பு. ஹேரத்தால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது சர்வானின் ஆட்டம். ஆட்டமிழக்கும்போது 51 ஓட்டங்கள் அவரது கணக்கில் இருப்பு.

சந்திரபோல் வந்தார். மெண்டிஸ் உடனடியாகவே அவரது ஆட்டத்தை முடித்து வைத்தார். பின்னர் இணைந்தனர் பிராவோ சகோதரர்கள். இருந்தும் நீடித்துச் செல்லவில்லை இவர்களின் ஆட்டம். 71 ஓட்டங்களுடன் டரன் பிராவோவுக்கு முடிவு கட்டினார் பெரேரா. தலைவர் சமி வந்தார். அவரையும் உடனேயே வெளியேற்றினார் பெரேரா.

பின்வரிசை ஆட்டம்காணத் தொடங்கியது இலங்கையின் சுழலில் சிக்கி. போச் பொறுப்பான ஆட்டம் வழங்கினார் இறுதிவரை. இருந்தும் ஒரு ஓட்டத்தால் தவறியது அவர் அரைச்சதம். 49 ஓவர்களில் தீவுகளின் ஆட்டம் அடங்கியது. 251/10 இது அடங்கும்போது அவர்களின் நிலை. மெண்டிஸ்ஸின் சுழலில் சிக்கியவர்கள் நால்வர். பெரேராவின் வேகத்தில் மூவர் மாண்டனர். இது இலங்கையின் பந்து வீச்சு நிலவரம்.

ஞாயிற்றுக்கிழமை நேற்று. ஆதலால் நிரம்பியது அரங்கு. ஏகோபித்த கரகோஷம் இலங்கைக்கு. வெற்றிக்கு இதுவும் மேலதிக பலமாகியது. சிறப்பாக ஆடியதால் சங்கக்காரா ஆட்டநாயகன். தொடரில் கலக்கியதால் தரங்க தொடர் நாயகன்.






# தன் திறனுக்குத் திரும்பியது ஆஸ்திரேலியா



கம்ரான் வைட் புதுத்தலைமை ஆஸ்திரேலியாவுக்கு நேற்று. நாணயச் சுழற்சி யிலும் அவருக்கு வெற்றி. முதலில் துடுப்பெடுத்தாடுவது அவரது தீர்மானம்.

வெற்றிகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் ஆஸிக்கு நேற்றைய போட்டி முக்கியமில்லை. எனினும் ஆரம்பத்தில் துடுப்பாட்டத்தில் சறுக்கியது ஆஸி. ரிம் பெய்ன் 5 ஓட்டங்களுடன் புலக்நெர் பந்தில் வெளியேற்றம். தொடர்ந்தவர்கள் இரட்டை இலக்கங்களுடன் களம் விட்டகன்றனர். 103/4 தடுமாற்றம் ஆஸிக்கு. அதைத் தடுத்து ஆஸியை தூக்கி நிறுத்தினர் ஹஸி-வோஜ்ஜேஸ். இவர்களால் பகி ரப்பட்டது 95 ஓட்டங்கள். இதில் இருவரும் பெற்றனர் அரைச்சதம். ஹஸியின் இன்னிங்ஸ் முடிந்தது 60 ஓட்டங்களுடன். புலக்நெர் இவர்களைப் பிரித்து வைத்தவர். வோஜ்ஜேஸ் மட்டும் நிலைத்து நின்றார்.

மறுமுனையில் வருவதும் போவதும் தொடர்ந்தது. இறுதிவரை ஆட்டமிழக்கவில்லை வோஜ்ஜேஸ். 80 ஓட்டங்கள்தான் சேர்க்க முடிந்தது அவரால். 279/7 ஆஸியின் இறுதிநிலை.

பந்து வீச்சில் யாவரும் சராசரி. அன்டர்ஸனுக்கு மூன்று விக்கெட்டுகள் கிடைத்தன. புலக்நெர், யாடி இருவருக்கும் இரண்டு.

ஆறுதலுக்காவது வெற்றி தேவை இங்கிலாந் துக்கு. இருந்தும் அதைக்கூடப் பெறவிடவில்லை ஆஸி. ஆரம் பத் திலேயே ரைட் கலக்கினார். அவரது வேகத்தில் தலைவர் ஸ்ரோஸ் போல்ட். மறுமுனையில் பொலஞ்சர் தன் வேகத்தில் சாய்த்தனுப்பினார் டேவிட்ஸ்ஸை. முன்னரங்கு கள் ஆஸியின் வேகத்தில் சிக்கி சின்னாபின்னமாகின.

இடையில் யாடி திருப்பி அடிக்கத் தொடங்கினார். இருந் தும் ஆஸியின் தாக்குதல் தொடர்ந்தது. பின் வரிசை ஓரளவு பொறுப்புணர்ந்து ஆடியதால் எட்டமுனைந்தனர் வெற்றியை.

இருந்தும் ஆஸி. விடவில்லை. இறுதியில் 222 ஓட்டங்களு டன் சகலும் சரண்டர். மீதமிருந்தது ஆறு ஓவர்கள். நிலைத்திருந் தால் சிலவேளை எட்டியிருக்கும் இங்கிலாந்தின் வெற்றி.

ஜோன்ஸன், ரைட் தலா மூன்று விக்கெட்டுக்கள். வெற்றிக்கு வித்திட்ட வோஜ்ஜேஸ் ஆட்டநாயகன். ஆஸிக்கு அடித்தளம் அமைத்த வொட்சன் தொடர் நாயகன்.



## 12 நாள்களே

### உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை.
பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள்.
எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மீனவர்கள் தாக்குதலைக் கண்டித்து நாகையில் வைகோ உண்ணாவிரதம்




நாகப்பட்டணம், பெப். 07

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதலைக் கண்டித்து ம.திமு.க. பொதுச் செயலாளர் வைகோ நாகையில் நேற்று உண்ணா விரதம் மேற்கொண்டார்.

நேற்றுக்காலை நாகை, அவுரி திடலில் வைகோ தலைமையில் உண்ணா விரதப் போராட்டம் தொடங்கியது.

இலங்கைக் கடற்படையினரின் தாக்கு தலைக் கண்டித்தும், இதில் மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் இந்தப் போராட்டம் தொடங்கியது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தலைமை தாங்கினார். உண்ணாவிரதப் போராட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் தொடங்கி வைத்தார்.

உண்ணாவிரத்தில் ம.தி.மு.கவினர் மற்றும் தோழமைக் கட்சியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மீனவர் பிரச்சினையை தமிழகக் கட்சிகள் தேசியப் பிரச்சினையாக மாற்றவில்லை

## நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா கவலை

புதுச்சேரி, பெப். 07

இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்படும் மீனவர் பிரச்சினையை தமிழ கத்தில் உள்ள அரசியல் கட்சிகள், தேசிய பிரச்சினையாக முன்னெடுத்துச் செல்லாதது வருத்தமளிப்பதாக உள்ளது - என்று நாடாளு மன்ற எதிர்க்கட்சித் தலைவரும் பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவருமான சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளராகச் செயற்பட்டு வரும் சுஷ்மா ஸ்வராஜ், தேர்தல் தொடர்பான பணிக்காக நேற்றுமுன்தினம் அங்கு வந்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

தமிழக மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் ஒரு தேசிய பிரச்சினைதான். ஆனால் தமிழகத்தில் உள்ள தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட அரசியல் கட்சி கள் எப்போதும் தமிழக மீனவர் கொல்லப்படுகின்றனர் என்றுதான் குரல் எழுப்புகின்றன.



தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு எம்.பி. இல்லை. அதனால் இப்பிரச்சினையை நாடாளு மன்றத்தில் நானே தேசிய பிரச்சினையாகக் கொண்டு வருவேன்.

இதுவரை இப்பிரச்சினையில் அதிகம் அக்கறை செலுத்தாமல் இப்போது அரசியல் கட்சிகள் அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரிகிறதே என்று கேட்கிறீர்கள். தேர்தலைக் கருத்தில்கொண்டு இப்போது அரசியல் கட்சிகள் முக்கியத்துவம் கொடுக்கிறதா என்ற உள் அர்த் தத்தில் இந்தக் கேள்வி இருக்கிறது. ஆனால் அப்படியில்லை.

இந்தப் பிரச்சினை கடந்த 20 ஆண்டுகளாக இருந்து வருகிறது. அரசியல் கட்சிகளும் இப்பிரச்சினையை எழுப்பி வருகின்றன. ஆனால் இப்போது தொடர்ச் சியாக 10 நாள்கள் இடைவெளி யில் 2 மீனவர்கள் கொல்லப்பட் டுள்ளனர். அதனால்தான் இப் பிரச்சினை பெரிதாகியுள்ளது.

இந்தியச் செய்திகள்

# விசாரணைக்கு உத்தரவிடாமல் தேர்தல் நடத்த முடியாது

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரத்தில் நாடாளுமன்றக் கூட்டுக் குழு (ஜே.பி.சி.) விசாரணைக்கு உத்தரவிடாமல் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரை நடத்த முடியாது - என்று மத்திய அரசுக்கு பா.ஜ.க. எச்சரிக்கை விடுத்துள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரில் சனிக்கிழமை நடைபெற்ற பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ராஜ்நாத் சிங் பேசியவை வருமாறு -

2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஜே.பி.சி. விசாரணை வேண்டுமென்று நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொட ரில் இருந்து எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. நாடாளுமன்றம் முழுமையாக முடங்கியும், அரசு ஜே.பி.சி. விசாரணைக்கு உத்தரவிடவில்லை.

விரைவில் தொடங்க உள்ள பட்ஜெட் கூட்டத்தொடரிலும் எங்கள் கோரிக்கையை வலியுறுத்துவோம். எங்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை - என்றார்.

# அ.தி.மு.கவின் பிரசாரக் களத்தில் விஜய்

சென்னை, பெப். 07

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை நடிகர் விஜய்யின் தந்தையும், இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகரன் சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினார்.

இதனால் இம்முறை சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு ஆதரவாக நடிகர் விஜய் பிரசாரக் களத்தில் குதிப்பார் எனக் கூறப்படுகிறது.

போயஸ் கார்டன் இல்லத்தில் நடந்த இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் நீடித்தது. கடந்த இரு மாதங்களுக்கு முன்பும் ஜெயலலிதாவை எஸ்.ஏ.சந் திரசேகரன் சந்தித்துப் பேசி னார். இதையடுத்து அ.தி.மு.கவில் விஜய் இணைந்து விடுவார் என்றும், தன்னுடைய மக்கள் இயக்கத்தை அரசியல் இயக்கமாக மாற்றி அ.தி.மு.கவுக்கு ஆத ரவு வழங்குவார் என்றும் பேசப்பட்டது.



இருப்பினும் தன் அரசியல் பிரவேசம் குறித்து விஜய் அமைதி காத்து வந்தார்.

இந்நிலையில் பொங்கல் பண்டிகைக்கு வெளியான 'காவலன்' திரைப்படம் சில பிரச்சினை களால் ஒரு நாள் தாமதமாக திரைக்கு வந்தது. கட் அவுட் வைக்க எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. சில திரையரங்குகளின் வாசலில் வைக்கப்பட்ட கட் அவுட்களும் கிழித் தெறியப்பட்டன.

இதையடுத்து அரசியலுக்கு வரும் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் - என்று விஜய் கூறினார்.

காவலன் படப் பிரச்சினையில் ஏன்? எதற்கு? யார் என்றே தெரியாமல்இருக்கிறேன். யாரென்று தெரிந்தால் நானே வீதியில் இறங்கிப் போராடவும் தயார் என்று பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் ஆளுங்கட்சி தரப்பை மறைமுகமாகச் சாடினார் அவர்.

விஜய்யின் அரசியல் நிலைப்பாடு என்ன? அ.தி.மு.கவுக்கு விஜய்யின் ஆதரவு உண்டா? விஜய் பிரசாரம் செய்வாரா?

இந்தப் பின்னணியில் விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரன் ஜெயலலி தாவைச் சந்தித்துப் பேசியிருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

# மீனவர்களுக்கு ஆயுதம் கோரி மண்டபம் பகுதியில் 'போஸ்டர்கள்'

மண்டபம், பெப். 07

தமிழக மீனவர்களுக்கு ஆயுதம் வழங்குமாறு கோரி மண்டபம் பகுதி யில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையால் 530 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சுட்டு கொல்லப்பட்டுள்ளனர். சமீபத் தில் ஜெகதாப்பட்டினம் மீனவர் பாண்டியன் கொல்லப்பட்டார். பின்னர் வேதாரண்யம் மீனவர் ஜெயக்குமார் படுகொலை செய்யப்பட்டார். இச்சம்பவங்கள் மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தின. இந்நிலையில், தமிழக மக்கள் பொருளியல் உரிமைக் கழகம் சார்பில், மண்டபம் பகுதியில் போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது.

அதில், தமிழக மீனவர்களின் 20 படகுகளுக்கு ஒரு கடலோரக் காவல் படைப் படகுடன் வீரர்களைப் பாதுகாப்புக்கு அனுப்ப வேண்டும், மீனவர்களின் பாதுகாப்புக்கு ஆயுதம் வழங்க வேண்டும் - என அச்சிடப்பட்டுள்ளது.

இந்திய தமிழக அரசே!

கடலில் செல்லும் தமிழக மீனவர்களுக்கு 20 படகுக்கு 1 விதம் கடலோர காவல்படை படகு ஒன்று வீரர்களுடன் பாதுகாப்புக்கு அனுப்பு

கடலில் செல்லும் தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்புக்கு ஆயுதம் வழங்கு

தமிழக மக்கள் பொருளியல் உரிமைக் கழகம்

தொடர்புக்கு தமிழ்மன்னன் 9789304325

veta ®
ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் ஆங்கில பயிற்சி மையம்
Spoken English
Experts in English Training
An ISO 9001 : 2000 Certified Company
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
இலகுவான முறையில் ஆங்கிலம் பேசப் பயிலலாம்.
veta ஆசியாவில் 140 நகரங்களில் 250 க்கும் மேற்பட்ட கிளைகள்
ஆங்கிலத்தை பயிற்றுவிப்பதில் வல்லுனர்கள் 25 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் பேச்சுத்திறமைக்கு ஒளி விளக்காக விளங்கியவர்கள்
Foundation English
English First Step
English Next Step
ஆங்கிலத்தை ஆரம்பத்தில் இருந்து கற்க விரும்புபவர்களுக்கு...
இலக்கணத்தை பாடரீதியாக கற்பதைவிட செயல்முறை ரீதியில் கவனம் செலுத்தி வெற்றியளித்த சொல்முறை.
பல்வேறு சூழ்நிலைகளில் தன்னம்பிக்கையுடன் பேச மற்றும் செயற்பட 100 % ஒலி, ஒளி காட்சிகளுடன் கூடிய பாடத்திட்டம்.




DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel. : 021-222 4403
M. M. V. வீதி, (நந்தி மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470

## திருமண வாழ்த்து

எமது பாடசாலையில் உடற்கல்வி ஆசானாய் மாணவர்களின் கல்வி செயற்பாட்டுக்கு ஆதாரமாய் அமைந்து பணியின் சிறப்பால் யாழ் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பணி உயர்வுபெற்ற செந்தூரன் அவர்களுக்கும் கரவெட்டியைச் சேர்ந்த அன்பும் பண்பும்சார் அன்புமதி என்னும் மங்கையைக் கைபிடிக்கும் இன்றைய (07.02.2011) திருமண நன்னாளில் சகலயோக சுபவாழ்வு கிடைக்க எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமானை வேண்டி வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம்.



செந்தூரன் அன்புமதி

*புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## இடை நிலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 1.30க்கு மூடும் ஒரே நாடு இலங்கைதான். ஏனைய நாடுகளில் 3.30க்கு அல்லது 4 மணிக்கே பாடசாலைகள் மூடப்படுகின்றன.

இன்றைய கால காட்டத்தில் இலங்கையில் பெற்றோர் இருவரும் அனேகமாக வேலைக்குப் போகிறார்கள். சிறுவர்கள் பாடசாலை முடிந்து 2.30 மணிக்கு வீடுகளுக்குத் திரும்பினால் தனித்தே இருக்கிறார்கள். இத்தகைய சூழலால் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் முறைகேடுகள் இடம்பெறுவதான குற்றச்சாட்டுக்கள் கிடைக்கின்றன'' - என்றார் அமைச்சர்.

இத்தகைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு புரட்சிகர மாற்றங்களைக் கொண்டு வருவதற்குத் தான் தீர்மானித்துள்ளார் என்றும் அவர் கூறினார். அதனடிப்படையில் ''எதிர்காலத்தில் இடைநிலைப் பாடசாலைகள் அனைத்தும் பிற்பகல் 3 மணி வரைக்கும் வகுப்புக்களை நடத்தும்'' என்றும் அவர் கூறினார். (உ)

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. அண்மைய சம்பவங்கள் குறித்து இலங்கை அரசு உத்தரவிட்டிருந்த விசாரணையில் கண்டறியப்பட்ட விடயங்கள் எவை என்பது குறித்து இந்திய அமைச்சர் கேள்வி எழுப்புவார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் இத்தகைய பிரச்சினைகள் இனி வரும் காலங்களில் இடம்பெறாமல் இருப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இரு தரப்பினரும் ஆராய்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## உருதுணியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைக் கரயவைக்கக் கூடாது என்றும் வீதியோரங்களில் குப்பைகளைப் போடக் கூடாது என்றும் அதிகாரிகள் கண்டிப்புடன் அறிவுறுத்தி உள்ளனர்.

ஆர்.பிரேமதாஸ மைதானத்திலேயே அரையிறுதி ஆட்டம் ஒன்றும் நடைபெற உள்ளது. மைதானத்தை உலகக் கிண்ணப் போட்டிக்குத் தயார்ப்படுத்துவதற்காக 8 மில்லியன் ரூபாய்களை அரசு செலவிட்டுள்ளது.

''போட்டி நடைபெறும் சமயத்தில் நாடு உலகம் முழுவதினதும் கவனத்தைப் பெறும். எனவே மைதானத்தைச் சுற்றி உள்ள இடங்களைச் சுத்தமாக வைத்திருக்கும்படி அப்பகுதி மக்களைக் கேட்டுள்ளோம்'' என்கின்றனர் அதிகாரிகள். (உ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கிட்டுணு தவமணி

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டுணு தவமணி நேற்று (06.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், கிட்டுணுவின் அன்பு மனைவியும் ஜீவரட்ணத்தின் (LUCKY HOUSE உரிமையாளர்) பாசமிகு தாயும், மேரி சுசிலாவின் அன்பு மாமியும் ஹெலன் சுஜீதா, கரோலின் சுஜனி, குயின்மேரி, ஸ்ரீபன்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2011) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொத்துக்கட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*
*தொ.பே. 0776257911.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

### திருமதி பரமேஸ்வரி இரத்தினசிங்கம்

ஆவரங்கால் மேற்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் அச்செழு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் பரமேஸ்வரி நேற்று (06.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் சீவரத்தினம்இ சாந்தினிதேவி, கணேஸ்வரன் (CEB, Chunnakam), காலஞ்சென்ற தனேஸ்புவரன் ஆகியோரின் பாசமிகு தாயும் இராஜேஸ்வரி, பாலசிங்கம், ரஞ்சிதமலர், வன்னியசிங்கம், இரத்தினசிங்கம், காலஞ்சென்ற குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தனபாலசிங்கம், புவனேஸ்வரி (ஆசிரியை), தவராஜி (ஆசிரியை, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை) ஆகியோரின் மாமியும் வதனரூபி, திலீபன் (BOC கிளிநொச்சி), சர்மிளா, ஜலாதீபன், ஜலானி, ஜலாஞ்சலி, திருவருட்செல்வன் (ஆசிரியர், கரம்பொன்) ஆகியோரின் பேர்த்தியும் திருவாத்தனனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2011) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில்ஆவரங்கால் மேற்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆரங்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வன்னியசிங்கம் வீதி,*
*ஆவரங்கால், புத்தூர்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

## கிரிமினல்கள் அல்லர் தமிழர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு குடும்பத்தையும் புகைப்படம் எடுத்துப் பதிவு செய்யும்படி இராணுவம் அறிவித்துள்ளது. யாழ். மாவட்டத்தில் கோப்பாயில் கிராம அலுவலர் ஊடாகவும் நேரடியாகவும் குடும்பங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொள்கிறது.

யுத்தம் முடிவடைந்து விட்டது. இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தவென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இப்படி அமைதியை நீடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அரசு கூறிவரும் நிலையில், யாழ்ப்பாண மக்களை மிக மோசமான சூழலுக்குள் கொண்டு செல்லும் கைங்கரியம் நடைபெறுகின்றது.

குடாநாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் கிரிமினல் குற்றவாளிகள் அல்லர். ஆனாலும் அவர்கள் குடும்பம் குடும்பமாகப் பதிவு செய்ய வேண்டும். படிவங்களை நிரப்பவேண்டும் இராணுவ முகாமுக்குச் செல்ல வேண்டும் என அதிகாரம் செலுத்தப்படுகிறது. ஒட்டு மொத்தத் தமிழ் மக் களையும் கிரிமினல்களாக நோக்கும் தன்மை யையே இது காட்டுகிறது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

### தமிழரைத் துன்புறுத்தும் செயல்

குற்றங்கள் நடக்கின்றன என்பதற்காக இவ்வாறு குடும்பங்களைப் பதிவு செய்யும்படி சிங்களக் கிராமங்களில் அரசால் கேட்க முடியுமா? ஜே.வி.பி. கலவரம் இடம்பெற்ற போது பல ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். அதற்காகச் சிங்கள மக்கள் இவ்வாறு பதியப்பட்டார்களா? இல்லை. தமிழ் மக்களைத் துன்புறுத்துவதும் இம்சிப்பதும்தான் அரசின் இத்தகைய நடவடிக்கைகளின் ஒரே நோக்கம்.

அரசு இத்தகைய காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். இப்போது மேற்கொள்ளப்படுவது குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் என்று அரசு அல்லது இராணுவம் கூறினால், அதை ஏற்க முடியாது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறை இதுவல்ல. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியவர்கள் பொலிஸார். அவர்களே அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; பொறிமுறையை உருவாக்க வேண்டும். இராணு வம் அவர்களுக்கு உதவலாம்.

போர் முடிந்து ஒரு பிரதேசம் மீண்டு வரும் போது அங்கு களவுகளும் கொலைகளும் நடப்பது இயல்பானது என்றும் எனினும் சட்டத்தையும் ஒழுங்கையும் பொலிஸார் கட்டுப்படுத்துவார்கள் என்றும் அரசு கூறி இருக்கின்றது. குடாநாட்டுக் குற்றங்களைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாருக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்று அரசு கூறுகின்றது. ஆனால், இங்கே இராணுவம் தான் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கிறது.

### கட்டளைத் தளபதி தடுக்க வேண்டும்

இராணுவம் தன்னிச்சையாக இயங்குகிறதா? அரசின் கட்டளைப்படி இயங்குகிறதா? என்பது தெளிவாகவில்லை. அண்மையில் அமைதிக்கான விருதை இந்தோனேஷியாவில் பெற்ற யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி இவ்வாறான விடயங்களை அனுமதிப்பது கவலைதரும் விடயமாகும். எனவே இதனை அவர் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இத்தகைய செயல்கள் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தாது. பதிலாக வெறுப்புணர்வையே ஏற்படுத்தும். இராணுவம் தன்னிச்சையாக இத் தகைய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால் அதனை நிறுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் இராணுவ ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த ஆள்பதிவு நடைமுறை குறித்துப் பலாலியில் உள்ள ஊடகப் பிரிவிடம் கேட்டபோது, கட்டளைத் தளபதியின் பணிப்பின் பேரிலேயே நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

### குற்றச்செயல்கள் அதிகரித்ததால்...

''குற்றச் செயல்கள் அதிகரித்ததை அடுத்து, ஒவ்வொரு பிரிகேட்டின் கீழும் இருப்பவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி கட்டளைத் தளபதி உத்தரவிட்டுள்ளார். வெளி ஆள்கள் இங்கு வந்து குற்றச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்குமாறும் அவர் அறிவுறுத்தி உள்ளார். இதற்கமைவாக ஒவ்வொரு பிரிகேட்டிலும் உள்ள அதிகாரிகள் தமது சூழலுக்கு ஏற்ற விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்'' - என்றார் பலாலி ஊடகப் பேச்சாளர் மேஜர் மல்லவராச்சி.

வெளியாள்கள் வந்து தங்கும் போது அருகில் உள்ள இராணுவ அல்லது பொலிஸ் நிலையங்களில் பதியும் நடைமுறை இப்போது இல்லையே என அவரிடம் கேட்டதற்கு, ''அத்தகைய நடைமுறைகள் எதுவும் இல்லாத போதும், வெளியாள்கள் குற்றச் செயல்களில் ஈடுபடும் போது விடயம் சிக்கலாகின்றது'' என்று பதிலளித்தார்.

இது குறித்து மக்கள் திகிலடையத் தேவையில்லை. அவர்களின் பாதுகாப்புக்காகவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

(உ-14)

## 12 லட்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளத்தால் நேற்றுவரை 14 பேர் உயிரிழந்துள்ளனர். எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர். ஒருவர் காணாமற் போயுள்ளார் என்றும் -

ஆயிரத்து 161 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன என்றும் - ஆயிரத்து 412 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் - மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதிப் கொடிப்பிலி தெரிவித்தார்.

திருகோணமலையில் காணாமல் போயிருந்தார்கள் என முறையிடப்பட்டிருந்த இருவரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலனறுவை, கண்டி, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே பலியாகியுள்ளனர். அடைமழையால் கிழக்கு மாகாணத்துக்கே அதிக பாதிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. 9 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் 78,000க்கும் மேற்பட்டோரும் அம்பாறையில் 24,000க்கும் மேற்பட்டோரும் வவுனியாவில் 24,000 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது. (ஒ-சி)

## 90 வீத வயல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் வெள்ளம் வடிந்த பின்பே பாதிப்பின் முழுமையான அளவு தெரிய வரும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த ஆறு மாதங்களுக்குத் தேவையான நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதால் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது என்று அவர் தெரிவித்தார்.

அனுராதபுரம், பொலன்னறுவ, கிளிநொச்சி, வவுனியா, மற்றும் கிழக்கு, வடமத்தி, மத்திய மாகாணங்களில் நெல் வயல்கள் அனேகமாக வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில் வயல்கள் நீரில் மூழ்கி உள்ளன. (உ)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் மாணிக்கம்



5ஆம் வட்டாரம், நயினாதீவைப் பிறப்பிடமாகவும் புது வீதி, ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மாணிக்கம் நேற்று (06.02.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் நல்லபிள்ளையின் அன்புக் கணவரும் வசந்தகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் சுஜாதா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து, பொன்னம்பலம், முருகேசு, சின்னம்மா, விசாலாட்சி, ஐயாத்துரை மற்றும் முத்துவேல், பொன்னம்மா, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரதினி(சுவிஸ்), செந்தில்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் கமலாதேவியின் மைத்துனரும் யனுசன், அஸ்ர்த்திகா, உசாலினி, நிரானி, யதுசன், தக்சாயினி, மாலவன், தேனுசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2011) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுவீதி, ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.*

*தகவல் :*
செ.சுஜதா (மகள்)
0750475462

(110432)

# "நாடு கடந்த தமிழீழ அரசு ஏன்?" சென்னையில் விசேட கருத்தரங்கம்

## பெரும் திரளானவர்கள் பங்குபற்றினர்

சென்னை, பெப்.7

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கான தோழமை மையம் ஏற்பாடு செய்திருந்த ''நாடுகடந்த தமிழீழ அரசு ஏன்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கம் சென்னையில் கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சரஸ்வதி தலைமை வகிக்க, பெரியார் தி.க. தலைவர் கொளத்தூர் மணி, தமிழ் தேசிய விடுதலை இயக்கத் தோழர் தியாகு, திரைப்பட இயக்குநர் மணிவண்ணன், இந்திய தவ்ஹித் ஜமா அத் தலைவர் எஸ்.எம்.பாக்கர், கர்நாடக தமிழ் மக்கள் இயக்க தலைவர் ராஜன், மருத்துவர் எழிலன், ஊடகவியலாளர் அய்யநாதன், டி.எஸ்.எஸ்.மணி ஆகியோர் உரையாற்றினர்.

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் இணைய வழி மூலம் தமது வாழ்த்துரையை தோழமை மையத்துக்கு வழங்கியிருந்தார்.

தலைமை உரையாற்றிய பேரா.சரஸ்வதி; தோழமை மையம், நாடு கடந்த தமிழீழ அரசுக்கு ஆதரவாக தளத்தையும் அங்கீகாரத்தையும் இந்திய அளவிலும் அதற்கு அப்பால் உலகம் அளவிலும் பெறுவதற்காக பாடுபடும் - என்றார்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் தலைவர் தியாகு; நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை பலப்படுத்த வேண்டிய அவசியத்தையும் அதன் செயற்பாடுகளையும் விளக்கினார்.

ஊடகவியலாளர் அய்யநாதன் தமது உரையில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு அங்கீகாரத்தின் முதல்படியாக, தெற்கு சூடானில் கிடைத்திருப்பது போல் இந்தியாவிலும் அதனைப்பெற நாம் போராடவேண்டும் - என்றார்.

நிகழ்வின் சிறப்புரையாக அமைந்த விசுவநாதன் உருத்திரகுமாரனின் காணொலி உரையில், கட்சி அமைப்பு வேறுபாடுகளைக் கடந்து ஈழவிடுதலைப் போராட்டம் தனது இலட்சியத்தை அடைய, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை பலப்படுத்த அனைவரும் அணிதிரள வேண்டும் எனக் கூறியதோடு சிங்களப் படைகளால் சுட்டுக் கொல்லப்படும் தமிழ் நாட்டு மீனவர்களின் சம்பவங்கள் சிறிலங்கா அரசின் தமிழின அழிப்பின் தொடர்ச்சியே எனக் குறிப்பிட்டார்.

ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா எனப் பலநாடுகளில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், அதன் தொடர்ச்சியாக, தமிழ் நாட்டைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடு களுக்கும் விரிவுபடுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ)

# கிளிநொச்சியில் 25 ஆயிரம் ஏக்கர் நெல்வயல் அழிவு

கொழும்பு, பெப். 07

வெள்ளம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை சுமார் 48 ஆயிரம் ஏக்கர் காணியில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் அரைவாசிக்கு மேல் நெற்செய்கை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் 34 அடியாக உயர்ந்துள்ளதுடன், அதன் வான் கதவுகள் அனைத்தும் திறந்து விடப்பட்டுள்ளன. இதனால், கண்டாவளை, புல்மோட்டை, வட்டக்கச்சி, பன்னங்கண்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 120 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்துள்ளன என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார். (சி)

# வணிகர் மன்ற ஏற்பாட்டில் மாணவர்களுக்கு உதவுதொகை

## சாவகச்சேரியில் நேற்று நிகழ்வு

தென்மராட்சி, பெப்.7

சாவகச்சேரி, கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 32 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று சாவகச்சேரி, டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழவில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தந்தையை இழந்த 10 மாணவ, மாணவிகளுக்கு சைக்கிள்களும் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 26 மாணவர்களுக்கு கல்வி அபிவிருத்தி நிதியும் இரண்டு விதவைகள், வலுவிழந்த இருவர் ஆகியோருக்கான உதவுதொகைகளும் கையளிக்கப்பட்டன.

மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், தென்மராட்சி பிரதேசச் செயலர் திருமதி அ.சாந்தசீலன், 523 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் தெமட்டப்பிட்டிய, நகரசபை செயலாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்கில் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

மன்றத்தைச் சேர்ந்த மேலும் நான்கு வர்த்தகர்கள் கல்வி நிதியத்துக்கென நிதி உதவியை நிகழ்வில் வழங்கினர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆங்கில பாட தொண்டராசிரியராகக் கடமையாற்றும் ஆசிரியைக்கு மன்றத்தினால் மாதாந்த வேதனமும் வழங்கப்பட்டது.

(ஒ-207)

# திருட்டுப்போன பொருள்கள் பலவும் நவாலிப் பெண்ணிடம் இருந்து மீட்பு

## அவர் வீட்டில் பணிபுரிந்தவராம்

நவாலி, பெப்.7

நவாலியில் திருட்டுப்போன சுமார் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட சமையல் பாத்திரங்கள் வீட்டுப் பாவனைப் பொருள்கள் என்பன அதே இடத்தைச் சேர்ந்த பெண்ணொருவரிடம் இருந்து மானிப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

கொழும்புத்துறையிலிருந்து இடம்பெயர்ந்து நவாலியில் வசித்துவரும் 54 வயதுடைய பெண்ணொருவர் அப்பகுதியிலுள்ள வீடொன்றில் கூலிவேலை செய்வது வழக்கம். வேலை முடிந்தவுடன் திரும்பி வரும்போது அங்கிருந்த பாவனைப் பொருள்கள், சமையல் பாத்திரங்கள், என்பவற்றை நாளுக்கு நாள் எடுத்து வந்து சேர்த்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இவருக்கும் அவரது மகளுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு அது பெரிய சண்டையாக மாறியது. மகள், தாயாரால் களவெடுத்து வைத்திருந்த பொருள்கள் குறித்து உரிமையாளரிடம் சென்று தெரிவித்துள்ளார். அவர்கள் வந்து பொருள்களைத் தருமாறு கேட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட பெண் மறுத்துவிட்டார்.

இதனையடுத்து அப்பகுதிக் கிராம சேவையாளரின் ஆலோசனைக்கிணங்க மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் அவரது வீட்டை சோதனை செய்த பின்னர் களவாடப்பட்ட பொருள்களையும் சில ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற்போனதாகக் கூறப்படும் ஆலயம் ஒன்றின் பெரிய கிடாரம் ஒன்றையும் அங்கே ஆவணங்களின்றி நின்ற விலையுயர்ந்த மோட்டார் சைக்கிளொன்றையும் சம்பந்தப்பட்ட பெண்ணையும் அவர்களது வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

(ஒ-100)

உதயனின் கிளைக்காரியாலயம் தற்போது சாவகச்சேரி நகரில்

தென்மராட்சி வாழ் மக்களே!
உங்களிற்கான உதயன் பத்திரிகையின் தேவைகளாகிய

- பிரதேசச் செய்திகள், ஆக்கங்களை வழங்கவும்
- மரண அறிவித்தல்கள், நினைவஞ்சலிகள்
- பாராட்டு வாழ்த்துக்கள்
- வர்த்தக விளம்பரங்கள்

பாடசாலை மாணவர்களிற்கான விஷேட Photo copy சேவை

போன்றன காலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை வழங்கமுடியும்.

1ஆவது மாடி நவீன சந்தை, சாவகச்சேரி.
தொலைபேசி:- 0212270323
(சி/575704)

# சிறை உடையுடன் பொன்சேகா அரசாங்கம் கடும் சீற்றம்

## உள்ளூர், வெளிநாட்டு ஊடகங்களில்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் சிறிலங்காவின் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறை உடையுடன் காணப்படும் படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருப்பது அரசாங்கத்தைப் பெரிதும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதன்காரணமாக இந்தப் படங்கள் வெளியானது குறித்து உயர்மட்ட விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. சிறிலங்காவின் சுதந்திர தினமான கடந்த வெள்ளியன்று வெலிக்கடைச் சிறையில் இருந்த பெரும் எண்ணிக்கையான கைதிகள் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வை படம் பிடிப்பதற்காக சிறைக்குள் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அப்போது திடீரென அங்கு அரைக் காற்சட்டை, வெண்ணிற மேற்சட்டையுடன் சரத் பொன்சேகா ஊடகவியலாளர்கள் முன் தோன்றினார்.

அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்கள் பொன்சேகாவின் அந்தத் தோற்றத்தை மளமளவென படமெடுத்துக்கொண்டனர். இந்தப் படங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களில் வெளியாகின. இதனால் அரசாங்கம் கடும் சீற்றமடைந்துள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் நெருங்கும் நேரத்தில், சரத் பொன்சேகாவை விடுவிக்கக் கோரும் போராட்டங்களை எதிரணியினர் நடத்தும் நேரத்தில் இந்தப் படங்கள் வெளியாகியிருப்பது அரசாங்கத்துக்கு அதிர்ச்சியையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே சிறைச்சாலை விதிமுறைகளை மீறி கைதி ஒருவரைப் படம் பிடிக்க ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டது குறித்து உயர் மட்ட விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவுக்கமையவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

(ஒ)

NEW SCIENCE CENTRE (BEACON)
Clock Tower Rd., Jaffna.
CHEMISTRY — G. BENO [B.Sc.]
★புதிய பல அலகுகளின் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| 2011 | Paper | Mon 3.30 - 5.00 p.m. |
| | Environmental | Tue 3.30 - 5.00 p.m. |
| 2012 | Thermo | Sat, Sun 5.00 - 6.00 p.m. |
| | Inorganic | Mon, Tue 5.00 - 6.00 p.m. |
| 2013 | General | Sat, Sun 4.00 - 5.00 p.m. |


இடமாற்றம்
50, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த
ஹரன் யுவலர்ஸ் ஸ்தாபனம்
07.02.2011 முதல்
205, மின்சாரநிலைய வீதியில்
(யாழ். போதனா வைத்தியசாலை பின்புறம்)
இயங்கும் என்று எமது அன்பர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.
நிர்வாகம்.
222 6083

வெளிவந்துவிட்டது!
பொருளியல் அறிமுகம்
விற்பனையாகின்றன!
பொருளாதார முறைமைகள்
இலங்கை மத்திய வங்கி
A/L புதிய பாடத்திட்ட நூல்கள்
ஆசிரியர்: வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
- யாழ்ப்பாணம் -

S.L.E.A.S பரீட்சைக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
★ மட்டுப்படுத்தப்பட்ட, திறந்த பரீட்சைகளுக்கானது
★ 50மணித்தியாலங்கள் கொண்ட வகுப்புக்கள்
★ துறைசார் நிபுணர்களின் வழிகாட்டல்
★ உங்கள் வசதிக்கேற்ப மாலைநேர வகுப்புக்கள் (சனி, ஞாயிறு)
காலம்- 08.02.2011 செவ்வாய்க்கிழமை பி.ப 4.00- 7.00 வரை
உயர்கலைக் கல்லூரி
அல்லாரை வீதி, மீசாலை. T.P: 0775703813

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## எறும்பு



எறும்பே எங்கு போகின்றாய்?
கரும்பைத் தேடிப் போகிறேன்
விரும்பிக் கரும்பைத் தின்பாயா?
விருந்தே எனக்கு கரும்புதான்

ஓடி ஓடி உழைக்கிறாய்
தேடிப்பொருள்கள் சேர்க்கின்றாய்
கூடி நீயும் வாழ்வதால்
கூறு என்ன பயன் உண்டு

மாரிகாலம் வருவதால்
தேடிப்பொருள்கள் சேர்க்கிறேன்
கூடி நாங்கள் வாழ்வதால்
கோடி நன்மை கிடைக்குதே.

லோகிதாசன் காஜுஜன்
சொர்ண வடலி,
கொக்குவில்.

## மகிழ்ச்சிகரமான வரவேற்பு...



ஆரம்பம்:-கட்டைப்பிராயில் 'மதுரம் கிட்ஸ்' முன்பள்ளி நிலையத் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றபோது மழலைகள் அழைத்து வரப்படுகின்றனர். (15)

## பொன்மொழிகள்

★ நமது வாழ்க்கை சிறந்ததாகவும் தூய்மையுடையதாகவும் இருந்தால் மட்டும்தான் உலகமும் சிறப்பும் தூய்மையும் பெற்றதாக இருக்க முடியும். அது காரியம், நாம் அதை விளைவிக்கும் காரணம்- எனவே நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொள்வோமாக. நம்மை நாம் பரிபூரணர்களாக்கிக் கொள்வோமாக.

★ நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாவே ஆகிவிடுவாய்.

## தொப்பை வளர்ப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

''மந்திரிகள் பேரிலும் ஊழல் பட்டியல் தயாரிப்போம்'' என்று கத்தினான் மூடன். உடனே மட்டியும் மடையனும் கீழ்க்கண்டவாறு செய்திகளை எழுதினார்கள்.

அரச பணத்தில் அட்டகாசம்! தளபதி தம்புசாமி குடித்து விட்டுக் கலாட்டா! அறிவுகெட்ட அமைச்சர் அப்புசாமி, ஆறு கட்டு சுருட்டு லஞ்சம் வாங்கினார்.

ஊழலோ ஊழல்! மந்திரி மலர்வண்ணன் மாடி வீடு கட்டிய மர்மம் என்ன?

இளவரசர் இந்திரனின் லீலை! இளம் பெண்ணின் கையைப் பிடித்திழுத்து வம்பு!

இதேபோல் தங்களுக்குப் பிடிக்காதவர்களை எல்லாம் விருப்பம் போல் தாக்கி எழுதினார்கள்.




''நம்மைப் பற்றிக் கொஞ்சம் புகழ்ந்து எழுதிக் கொள்வோமே!'' என்றான் முட்டாள்.

''என்ன எழுதுவது?'' எனக் கேட்டான் மூடன்.

சுருட்டு மன்னர் பரமார்த்தரின் சாதனை! ஒரே நாளில் தொடர்ந்து முப்பது சுருட்டு பிடித்தார்! என்று எழுதினான், முட்டாள்.''மண்ணில் புரளுவது எப்படி?'' என்ற தலைப்பில் மண்ணில் புரளுவதால் உடல் நலம் ஏற்படும் எனப் பேட்டி கொடுத்தான் மட்டி!

''தொப்பை வளர்ப்பது எப்படி?'' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை ''அறிவியல்'' பகுதியில் எழுதினார் பரமார்த்தர்.

''பரமார்த்தருக்குச் சிலை! மக்கள் போராட்டம்! ''தத்துவத் தந்தை'' பரமார்த்த குருவுக்கும் அவரது சீடர்களுக்கும் சிலை வைக்க வேண்டும் என்று கோரி மக்கள் போராட்டம் நடத்தினார்கள். இந்தச் சிலையை அரண்மனைக்கு எதிரேதான் வைக்க வேண்டும் என்றும் மக்கள் கோஷமிட்டபடி ஊர்வலம் சென்றார்கள்!''

இதேபோல் ஒவ்வொருவரும் தங்களைப் பற்றிக் கண்டபடி கிறுக்கி வைத்தனர்.

எல்லாவற்றையும் கொண்டு போய்ப் பரமார்த்தரிடம் கொடுத்ததும் ''எல்லாம் நன்றாகத்தான் எழுதியிருக்கிறீர்கள். விடிந்ததும் விற்றுவிட்டு வாருங்கள்'' என்று கூறிவிட்டுப் படுத்து விட்டார்.

பொழுது விடிந்ததும், சீடர்கள் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டு விற்கப் போனார்கள்.

''தினப் புளுகு வாங்கலையோ, தினப் புளுகு! நாலு பக்கம் நாற்பது காசு!'' என்று கத்தினான் முட்டாள். சிலர் ஓடிவந்து ஓலையில் எழுதப்பட்ட பத்திரிகையை வாங்கிப் பார்த்தனர். செய்திகளைப் படித்து விட்டு அதிர்ச்சி அடைந்தனர்.

செய்தி அரசருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் எட்டியது. நீதி தவறாக மன்னனைப் பற்றியும் அவனது மந்திரிகளைக் குறித்தும் கண்டபடி தவறா எழுதியதற்காகப் பரமார்த்தர் மீதும் சீடர்கள் மீதும் ''குற்றப்பத்திரிகை'' வாசிக்கப்பட்டது.

பரமார்த்தரோ ''இதெல்லாம் உண்மை என்று யார் சொன்னது? பத்திரிகையின் பெயரைப் பாருங்கள்; ''தினப் புளுகு'' என்று தானே போட்டிருக்கிறோம்'' என்று கூறினார்.

அதன்பின் குருவும் சீடர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

(முற்றும்)


## உயிர் எழுத்துக்கள்

அ ஆ சொல்பவர்
அன்பு உள்ளம் கொண்டவர்
இ ஈ என்பவர்
இனிக்கப் பேசும் வல்லவர்
உ ஊ என்றவர்
உண்மை கூறும் நல்லவர்
எ ஏ சொல்லிலே
எழுத்தைக் கற்றுத்தந்தவர்
ஐ என்ற நெடிலினை
ஐயமின்றி விளக்குவார்
ஒ ஓ என்றுமே
ஒற்றுமையை வளர்த்தவர்
ஔ என்ற நெடியதை
ஔவைக்குரியது என்றவர்
ஃ என்று சொன்னதும்
அடுப்பெழுத்து என்ப்வர்



தானு.

## சிறார்களின் வாசிப்புத் திறன்



இன்றைய அவசர உலகின் தொலைக்காட்சி பிரத்தியே வகுப்புகள் என்று சிறிய உலகிற்குள் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை முடங்கி விடுகின்றார்கள்.

கற்பனை சக்தி என்பது சிறுவர்களில் இடத்தில் சிறு வயதில் இருந்தே வளர்க்கப் பட வேண்டிய ஒன்றாகும். இதனால் சிந்திக்கும் ஆற்றல் பெருகும். அதற்கு சிறுவர்கள் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

தொலைக்காட்சி பார்த்தல், கணினி விளையாட்டுக்கள் மாய உலகிற்கு அழைத்துச் சென்று சிறுவர்களின் சிந்தனைத் திறன்களைத் திசை திருப்பிவிடும்.

மனிதன் கடந்து வந்த பாதை பற்றிய அறிவும் தமது முன்னோர் பற்றிய அறிவும் சிறுவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும். அவ்வாறான விடயங்கள்தான் தாமும் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பையும் உணர்வையும் அவர்களுக்கு ஏற்படுத்தும்.

முன்னைய காலத்தில் சிறுவர்களுக்கான படக்கதைகள் புத்தகங்களாக வெளிவரும். அவற்றில் வரலாறு பற்றிய கதைகள், புராணக்கதைகள், நல் வழிக்கதைகள் என மழலைகள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் படக்கதைகள் அமைந்திருக்கும். இவை சிறுவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும்.

வரலாற்று ரீதியாகப் பாடங்களில் இடம்பெற்றிருக்கும் விஞ்ஞானிகள் பல பாடசாலைக் கல்வியை விட புத்தகங்களைத் தேடிக்கற்று பல கண்டுபிடிப்புக்களையும் தேற்றங்களையும் கொள்கைகளையும் உருவாக்கியவர்கள்.

இதிலிருந்து புத்தகங்களின் சக்தி, பயன்பாடுகள் என்ன என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

ஓலைகள்,ஏடுகள் கல்வெட்டுக்கள் செப்பேடுகள் போன்றவற்றில் தகவல்களைப் பொறித்து முன்னோர்கள் பேணிப் பாதுகாத்து வந்தார்கள். இவ்வாறு முன்னோர்கள் தேடி வைத்த தகவல்களால் சமயத்தின் தொன்மை, வரலாறு போன்றவற்றை அறிய முடிகின்றது.

இதனால் சிறுவர்கள் மத்தியில் வாசிப்புப்பழக்கத்தை இலகுவான வழிகளில் ஏற்படுத்த வேண்டும். இல்லையெனில் கிணற்றுத் தவளைகள் போல் ஒரு சிறிய வட்டத்திற்குள்ளே தமது எதிர் காலத்தை முடக்கி விடுவார்கள்.

இன்றையகால இணைய வசதிகளில் கூட பின் நூல்களையும் இணைய வாசிப்பையும் பிரபல்யப்படுத்தி இருக்கின்றார்கள்.

தேவையான விடயங்களை இணையத்தளத்தில் தேடலாம், வாசிக்கலாம், தெரிந்த விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் முடியும்.

சஞ்சிகைகள், நூல்கள், பத்திரிகைகள் போன்றவற்றை சிறுவர்கள் அதற்கென நேரத்தை ஒதுக்கி வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டு வருவதற்கு பெற்றோர்கள் வழிகாட்டிகளாக இருப்பது அவசியமாகும்.

ஜீவன், மானிப்பாய்.

## Student Visa
# SPOT ADMISSION

(Feb 19th, 20th) முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

மூன்று வாரத்தில் UK செல்லலாம்

## Student/ Visit & Migration

UK/ Canada/ Australia/ Netherland/ New Zealand/ Malaysia/ Ireand Reject/ Refusal Visa க்கள் பரிசீலனை செய்து தரப்படும்.

* புதிய வீசா விதிகளுக்கமைய Visa Process மிக திறமையாக செய்து தரப்படும்.
* 15வருட அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் ஆவணங்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
* அங்கீகாரம் பெற்ற College/ University அனுமதி.

ADMISSION INTAKE 2011 FEB/MAR
O/L,A/L
OFFER LETTER 3 WITHIN DAYS
MIN QUALITION O/L

**Foundation Degree/ Language Courses (English) Second Degree Holders No Need IELTS Free IELTS Classess**

## Australia Migration Business & Skill

*Engineers * Accountants *IT Degree holders

EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
No.22A, Frankfort Place, Bambalapitiya, Colombo- 04, Sri Lanka.
Tel: 011 2508443/ Mob: 0777849853.
Web: www.etbclanka.com/ E-mail: etbc@etbclanka.com

**Jaffna Branch- 82/12A Chetty Street, Nallur.**
**Tel: 0777849853/ 0774454646.**


## கண்ணீர் அஞ்சலி



சர்வதேச, ஆசிய மற்றும் அகில இலங்கைப் போட்டிகளில் சிறப்பான ஆரம்பிப்பாளராகவும் எமது சங்கத்திற்கு ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வந்தவரும் எமது மதிப்பிற்கும் அன்புக்குமுரியவருமான


**N.வைரவநாதன்**

அவர்கள் 04.02.2011 காலமான செய்திகேட்டு நாம் மனம் வருந்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராசரத்தினப் பத்தர் சுகந்தன்**

தோற்றம் 10.09.1975
மறைவு 07.02.2000

(11028)

ஆண்டுகள் பதினொன்றாகியும்
உன் நினைவுகள் மாறாது

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

என்றும்
உன் நினைவுகளுடன்:
குடும்பத்தினர் (நேசம் அழகு நகை)

## மரண அறிவித்தல்

### திருமதி வேலாயுதம் நவமணி



சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைச் சேர்ந்த திருமதி வேலாயுதம் நவமணி நேற்று (06.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் – கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் கண்மணியின் அன்புச் சகோதரியும் இராஜதுரை (சுவிஸ்), சிவசோதி, திருச்செல்வம், இ.இராஜபூபதி (நீர்கொழும்பு), த.இராஜேஸ்வரி, ந.இராசமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்கந்த சகலகலாதேவி (சுவிஸ்), அமிர்தகலா, ராதாராணி (நீர்கொழும்பு), இரத்தினசிங்கம் (நீர்கொழும்பு), தர்மபாலன், நடராசா ஆகியோரின் மாமியாரும் செந்தில்குமரன் (சுவிஸ்), செந்துஜா (வவுனியா), துஸ்ஜந்தி, பிரிந்திகா (சுவிஸ்), சிவநமணன், சிவப்பிரியா, சிவமலர், சிவறோஜினி, கஜந்தன், காயத்திரி, கல்ஜானி, தர்ஷன், சுதர்ஷன், நிதர்ஷன், தர்சிகா, கௌசிகன், தனுசியா, அனுசியா, கௌசிகா ஆகியோரின் பேர்த்தியும் பிரணவன், சந்தோஷ், யதுசன், கிசாந், சுலக்ஷன், டனிசா, டிவ்வியனா, அரேஞ்சன், டிலக்ஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2011) திங்கட்கிழமை மு.ப. 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

தகவல்: பிள்ளைகள்,
மருமக்கள்.


## STUDENT VISA

குறுகிய காலத்தில் யாழ் மாணவர்களை UK, CANADA, U.S.A, NEW ZEALAND கல்வி கற்க அனுப்பி நன்மதிப்பைப் பெற்ற FUTURE EDUCATION மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை யாழ் மாணவ, மாணவிகளுக்கு வழங்குகிறது. MARCH, APRIL அனுமதி O/L மட்டும் போதுமானது I.E.L.T.S. தேவையில்லை. ஒரே நாளில் College Admission ஒரு மாதத்தில் பயணம் மற்றும் சிங்கப்பூர் வேலை வாய்ப்பு (WORK PERMIT) உடனடி பயணம்.

தொடர்பு:
**FUTURE EDUCATION & CONSULTANT, NO-8 CHANDRALEKA MAWATHA, BORELLA - COLOMBO - 08,**
**T.P. 0117 631505**
**HOT LINE - 072336 9058**



ஜெய் குருதேவ்



"எப்பொழுதும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழ"

**வாழும் கலைப் பயிற்சி**

சுதர்சன கிரியா, மூச்சுப் பயிற்சி, யோகா, தியானம்
இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்
அறிமுகவுரை: 07.02.2011 மாலை 5 மணிக்கு
பயிற்சிக்காலம் - 08.02.2011 முதல் 13.02.2011 வரை
நேரம்: 10 - 12.30
1 - 4.30
5 - 7.30

0770474757



## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி உதவி செய்வதற்குப் பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 0777222515


## தவறிவிட்டது

கடந்த 03.02.2011 ஆம் திகதி அன்று மாங்குளத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றில் எனது நூலகப் புத்தகங்கள் அடங்கிய அலுவலகப் பை தவறவிடப்பட்டது.
சன்மானம் வழங்கப்படும்
தொடர்பு: 0775485700


## வேலையாள் தேவை

★கோழிப்பண்ணையில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை.
★தரமான ஊர்க்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771541795, 021 7200616


## கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணமும், சமாதான நீதிவானும், பிரபல நாதஸ்வர வித்துவானும், மூத்த பத்திரிகையாளருமாகிய

**அமரர் எஸ்.ஆர். ஞானசுந்தரம்**

அவர்கள் கடந்த 04.02.2011 இல் இறைபதம் எய்திய செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னார் 72 வருடங்களுக்கு மேலாக நாதஸ்வர வித்துவானாக எமது ஆலயத்தில் பணியாற்றியுள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்கரை கற்பக விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆலய பரிபாலன சபையினர்,
கற்கரை கற்பக விநாயகர் ஆலயம், குப்பிளான்.

ජාතික සම්පත
ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 97
திகதி - 05.02.2011

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: L
அதிர்ஷ்ட இலக்கம்: 10
வெற்றி இலக்கம்: 7 4 0 4 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | இலக்கம் | | | | | | தொகை | பரிசு எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L | 10 | 7 | 4 | 0 | 4 | 3 | ரூ. 8,923,069.00 | - |
| 1 பரிசு | | 10 | 7 | 4 | 0 | 4 | 3 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 7 | 4 | 0 | 4 | 3 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | | | | 4 | 0 | 4 | 3 | ரூ. 10,000.00 | 23 |
| 4 பரிசு | | | | | 0 | 4 | 3 | ரூ. 1,000.00 | 220 |
| 5 பரிசு | | | | | | 4 | 3 | ரூ. 50.00 | 2222 |
| 6 பரிசு | | | | | | | 3 | ரூ. 20.00 | 21434 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | இலக்கம் | | | | | | தொகை | பரிசு எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 7 | 4 | 0 | 4 | | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | | | 7 | 4 | 0 | | | ரூ. 100.00 | 226 |
| 9 பரிசு | | | 7 | 4 | | | | ரூ. 50.00 | 2262 |
| 10 பரிசு | L | | | | | | | ரூ. 20.00 | 8828 |
| 11 பரிசு | L | 10 | | | | | | ரூ. 100.00 | 973 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,623,340.00

[illegible]

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.9,288,138.00

## மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு
11 ★ 07 ★ 1950



உதிர்வு
10 ★ 02 ★ 2008

**அமரர் அரியரத்தினம் பிரபாகரன்**

திதி: பூர்வபக்க சதுர்த்தி

வேளான் குலவிளக்கே மெய்யன்பு அப்பாவே
தாளான்மை மிக்க தவப்புதல்வா - நாளாந்தம்
மான்போல் மனைமக்கள் மண்ணில் விழுந்தலற
எங்கையா சென்றீர்கள்! எங்கள் அப்பாவே!

விமான நிலைய வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09 ★ 12 ★ 1967



ஆண்டவன் அடியில்
07 ★ 02 ★ 2009

மல்லாவியைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு சிலாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் அருளானந்தம் அருள்ரூபன் (சிறி)**

ஈருடலில் ஒருயிராய்
நாம் வாழ்ந்த நாள்கள் கடந்து
ஈராண்டு போனதையா
வேரிழந்த ஆல் எனவே
விழுதொடு எம் விழிநீர் சொரியுதையா
நீரிருந்த பொழுதுகளின்
நினைவோடு வாழுகின்றோம்.

என்றும் நினைவில்:
மனைவி, மகன், தாய்,
தகப்பன், மாமி, சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

மல்லாவி.
T.P. 0771779081,
0773662203

# சமய சந்நிதிகளில்

தெல்லிப்பழை அளவெட்டிக் கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய சதுர்த்தி விழாவும் மணவாளக் கோல விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு 108 கலச சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து விசேட பூசை வசந்த மண்டபப் பூசை, ஊஞ்சல் பாட்டு என்பன நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு சுவாமி வெளி வீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ம-86)

* * *

யாழ்.வண்ணார்பண்ணை காட்டுத்துறை பகவதி மாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.35 மணிவரை முதல் 10.18 மணி நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பிரதிஷ்டா பிரதம குருசிவஸ்ரீ ப. மனோகரக் குருக்களின் ஆசியுரையும், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரையும், யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயரின் சிறப்புரையும் இடம்பெறும். (ம-236)

* * *

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்த சுவாமியார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 10மணிக்கு கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம் பெறவுள்ளது. 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிஷேகமும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலைஇரதோற்சவம் மாலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ம-111)


## உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2011



சாவகச்சேரி பிரதேச சபை
இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு)
சிற்றம்பலம் துரைராசா J.P.
முதன்மை வேட்பாளர்
(முன்னாள் வரணிக் கொத்தணி அதிபரும் தென்மராட்சி அதிபர்கள் சங்கத் தலைவரும்)

உங்கள் வாக்குகளை தமிழ்க் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு (த.தே.கூ) அளித்து தமிழ் மக்களின் ஒற்றுமையையும் தேசிய உணர்வையும் இன்றைய காலகட்டத்தில் நிலைநிறுத்தி எங்கள் முதன்மை வேட்பாளராகிய சிற்றம்பலம் துரைராசாவின் இலக்கம் 18 இற்கு வாக்களிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

X | 18

ஆதரவாளர்கள்
சாவகச்சேரி பிரதேச சபை.

(110292)



## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 587
திகதி 2011/02/05

சுப்பர் இலக்கம்: 19
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 18 29 60 67

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 36,805,574.40 வீதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீதம் | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீதம் | 312 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீதம் | 613 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீதம் | 15,000 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீதம் | 8,595 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 216,198 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 34,512 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 9,645,000.00
சுப்பர் பரிசு சேர்த்து ஜீப் வண்டியுடன் மீதித் தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 37,231,868.80

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk



SPECIAL OFFER G.C.E. O/L School Leavers
பரீட்சைகளின் பின் தகவல் தொழில்நுட்ப கல்வியின் முதல்வனுடன் இணையுங்கள்

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை
25 YEARS

CSC®
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION



நேரடி கட்டணச் சலுகை
28-02-2011 வரை மட்டுமே !
Pay 4900/- only

Certificate in MS Office Application
Certificate in Web Design & Development
Certificate in Desktop Publishing
Diploma in Mobile phone Service & Repair

Diploma Courses
* Information Technology
* IT & Web Programming
* PC Professional
* Graphic Design & DTP
* Macromedia Application
* Adv. Java Programming
* Office Automation
* Software Engineering
* Web Design & Development
* Digital Video Production
* Hardware & Networking
* Computer Applications
* Digital Pre-Press

சர்வதேச தர நிர்ணய கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கல்லூரி
ISO 9001 : 2000
மேலதிக விபரங்களுக்கு

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
230,1ம் மாடி கண்டி வீதி சாவகச்சேரி T.P :021-2270267
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
## அரியகுணராஜா குலமணிதேவி

அன்னைமடியில்
11.03.1943

ஆண்டவன் அடியில்
08.01.2011

திதி: பூர்வபக்க சதுர்த்தி

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
பாசமுள்ள எங்கள் அம்மாவே
புன் சிரிப்பின் புகலிடமே- உங்கள்
முகத்தை இனி எங்கே காண்போம்
மெழுகுவர்த்தியாக நீங்கள் உருகி எம்மை
மேன்மையடைய வைத்த தெய்வமே!
நீங்கள் இல்லாத வீடு ஒளியிழந்து விட்டது
மண்ணில் நாம் உங்கள் பிரிவால் துடிக்கிறோம்
உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



இன்று (07.02.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் , வீட்டுக்கிருத்தியம் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

நி.மு: ஆண்டாவளவு வடக்கு,
கொற்றாவத்தை வல்வெட்டித்துறை.

த.மு: தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
0774113694.


# கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## இறால் தொழிலுக்கான அனுமதி

எமது சமாச எல்லைக்குட்பட்ட ஆனையிறவு, சுண்டிக்குளம், காஞ்சிபுரம் பேப்பாறைப்பிட்டி வரையான கடனீரேரிப் பகுதிகளில் நடப்பாண்டிற்கான இறால் தொழில் சம்பந்தமாக கடந்த ஜனவரி 7ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாகக் கடந்த காலங்களைப் போன்று இறால் கூடு கட்டுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி பரீட்சார்த்தமாக இறால் கூடு கட்டப்பட்டு 21.02.2011 அன்றையதினம் பரிசீலனை செய்யப்பட்டு பொதுச் சபைத் தீர்மானத்திற்கமைவாக இறால் கூடு கட்டுவதற்கான திகதி உத்தியோக பூர்வமாகச் சமாசத்தினால் அறியத்தரப்படும். இதனைக் கருத்திற் கொண்டு எமது சமாச எல்லைக்குட்பட்ட இணைச்சங்கங்களான 7 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இந்த விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கித் தவறுகள் இடம்பெறாவண்ணம் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

இதற்கமைய அனுமதிக்கப்படும் திகதியின் பின்னர் ஏற்றுமதியாளர்கள் மற்றும் கொள்வனவு முகவர்கள் தங்களுக்கான உரிய அனுமதிகளைப் பெறும் பொருட்டு எதிர்வரும் மார்ச் 10ஆம், 11ஆம்,12ஆம், 13ஆம் திகதிகளில் முல்லை, பரந்தன் வீதி புளியம்பொக்கணைச் சந்திக்கருகில் அமைந்துள்ள மேற்படி சமாச அலுவலகத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

* மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, குளிரூட்டி வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்களில் தொழிலில் ஈடுபடுவோர் அனைவரும்.

* கடந்த 2010ஆம் ஆண்டின் அனுமதியுடனும் அனுமதியின்றியும் ஏற்றுமதியினை மேற்கொண்டு சமாச சங்க வளர்ச்சி நிதி செலுத்தத் தவறியவர்கள் அனைவரும் தங்களது நிலுவைகளினைச் சீர்செய்து சிட்டைகளினைப் பெற்றுக்கொள்ளவும்.

* சமாசத்தின் இந்த நடைமுறைகளை மீறிச் செயற்படுவோர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தலைவர்,
பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு, கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

பரந்தன்/முல்லை வீதி,
புளியம்பொக்கணை.
தொடர்புகளுக்கு:
0770891497
0777939496

(இ/575590)



# நயினாதீவு செம்மணித்தம்புலம்

## அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் ஆலய


## மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்



இன்று (07.02.2011) திங்கட்கிழமை நயினாதீவு
செம்மணித்தம்புலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப்
பெருமான் ஆலய கும்பாபிஷேகத் தினத்தில் அனைத்து
அடியார்களுக்கும் ஆனைமுகத்தான் இன்னருள்
கிடைக்க இறைஞ்சுகின்றோம்.

யாழ். நகரில் முதன்முறையாக
Causeway Auto Metallic Paint மூலம்
வர்ணம் பூசப்பட்டு கொலண்டில்
இருந்து தயாரிக்கப்பட்ட
Debeer Lacquer மூலம்
மெருகூட்டப்பட்டுள்ளது.

CAUSEWAY
PAINTS LANKA (PVT) LTD
No. 15, Noel Mendis Mawatha, Modarawila Industrial Estate,
Panadura, Sri lanka.
T.P: 0382240040 -5 ,2243166-9, 038-5599800-8 www.causewaypaints.com



## 1985 – 2010

## வெள்ளி விழா ஆண்டினை நிறைவு செய்து

26 ம்
அகவையில்
கால் பதித்திருக்கும்
எம் கலாலயா
பயிற்சியகம்
நீடூழிவாழ
வாழ்த்துகின்றோம்!



எம் சக மாணவி ஒருவர் இயக்குனரிடமிருந்து டிப்ளோமா மனைப்பொருளியலும் கைத்திறனும் சான்றிதழைப் பெறுகின்றார்.

கலை நயத்தின் கலைமணியே கலாலயா!
அகிலம் இது தான் என படைத்தான் ஆண்டவன் ஆயினும் அதைவிட
மாற்றத்தினை படைக்க வந்தவள் நீயே வாழியடி!
உந்தன் நிறைவான சேவையினை முழுதாக பெறுபவர்கள் கோடி.
பெண்ணானவள் புகுமனை புகுகையில் புன்னகையுடன் செல்ல
வழியமைப்பவள் நீயின்றியாருமில்லை.
கலியுக பெண்ணானவள் சமையலைக் கூட சண்டேசமையலில் தான்
அறிவாள் ஆனால் அதை உன்னிடம் நாம் கண்டோம் தோழி,
உயர் கல்வி என்றால் தான் வாழ்வு – என்றில்லை அதைவிடினும்
வாழ வழியுண்டு என்று பெண்ணினத்திற்கு புரியவைத்தவளே நீதானடி
உன் சேவை சொல்ல யார் வரினும் உதட்டின் அசைவினை நிறுத்த
மாட்டார்களடி. – அத்துணை சேவையடி உந்தன் வரலாறு.
ஐஸிங்கா, முக அழகியலா, வர்ணந் தீட்டலா, தையலா, கூந்தல்
அலங்காரமா, சேலை அலங்காரமா கைப்பணிகளா எதுவாயினும்
போதும் போதுமென நாம் சொல்ல மேலும் மேலும் என வித்தைகள்
கற்றுத்தந்த நீ வாழ்க இவ்வையகம் உள்ளவரை.

செல்வி. பேணாட் நளினி.



1 ம் வருட நிறைவில் (1985) இயக்குனர்கள் ஆசிரியர்களுடன்
எமக்கு மூத்தவர்கள்




25 ம் வருட நிறைவில் ஆசிரியர்களுடன்
2010 C பிரிவினராகிய நாம்

வாழ்த்துவோர்: வெள்ளிவிழா ஆண்டின்
(2010 C பிரிவு) மாணவிகள்